கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு!

பாகம் - I

எஸ். தாயப்பன்

(கத்தோலிக்க சகோதரர்கள்
இரச்சிக்கப்படணுமே
என்ற ஆதங்கத்தில்
எழுதப்பட்ட நூல்)

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு

பாகம் - 1

எஸ். நாகராஜன்

[illegible]

கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு - பாகம் 1
முதற்பதிப்பு - மார்ச் 2012 - 5,000 பிரதிகள்
2ம் பதிப்பு - ஜுன் 2013 - 5000 பிரதிகள்

இந்த நூல்கள் மற்றும் VCD கிடைக்கும் முகவரி :

எஸ். தாயப்பன்

12, ஜி.டி. நாயுடு தெரு, பாலாஜி அவென்யூ - 1
சேலையூர் போஸ்ட், சென்னை - 600 073.
தொலைபேசி : 044 - 22234526
e-mail : sakthiprabha@yahoo.com

<u>நூலை அனுப்ப சில விதிகள் :</u>

ஒவ்வொரு நூலுக்கும் VCD க்கும் நன்கொடை ரூ. 10 தபால் செலவு ரூ 1/- அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். உங்கள் முகவரியை பாரத்தின் அடியில் உள்ள தகவல் பகுதியில் தெளிவாக, பின்கோடு நம்பருடன் எழுதி அனுப்புங்கள். **உங்கள் டெலிபோன், செல்போன் எண்களை கண்டிப்பாக எழுதவும்.** செக் பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது. பெற்றுக் கொண்ட பிறகே நூல்கள் அனுப்பி வைக்கப்படும்.

<u>VCD அனுப்ப தபால் செலவு மட்டும்</u>

1 முதல் 15 VCD அனுப்ப ரூ 20/-

16 முதல் 25 வரை VCD அனுப்ப ரூ. 35/-

100 VCDக்கு மேல் மற்றும் அதிக புத்தகம் வேண்டுமானால், அவைகள் KPN Parcel Service மூலம் வெளியூர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

<u>நேரில் வர :</u>

நேரில் நூல்களை பெற்றுக்கொள்ள விரும்புகிறவர்கள் கிழக்கு தாம்பரம் கிறிஸ்டியன் காலேஜ் பஸ் ஸ்டாப்பிலிருந்து வேளச்சேரி மார்க்கமாக கிளம்பும் அனைத்து M சீரிஸ் மற்றும் வெள்ளை போர்டு பஸ்களில் ஏறி கேம்ப் ரோடுக்கு அடுத்த பஸ் ஸ்டாப்பான மஹாலட்சுமி நகரில் இறங்கவும். ஷேர் ஆட்டோ என்றால் ரூ.10 கொடுத்தால் மஹாலட்சுமி நகர் பஸ் ஸ்டாப்பில் இறக்கி விடுவான். இடது புறம் உள்ள சிட்லபாக்கம் மெயின்ரோட்டில் ½ கிலோ மீட்டர் உள்ளே வரவும். வலது புறம் K.K. மெடிக்கல் ஷாப்பை அடுத்துள்ள வலது புற ஜி.டி. நாயுடு தெருவில், இடது புறத்தில் இரண்டாவது வீடு.

ஆசிரியர் வெளியிட்டுள்ள மற்ற நூல்கள்/சீடிக்கள்

எண்	நூலின் பெயர்	புத்தக குறியீடு	மொழி	பிரதிகள் விநியோகத்தில்
	புறஜாதிகளுக்கு சுவிசேஷம் அறிவிக்க உதவும் நூல்கள்			
1.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்	T	தமிழ்	2,95,000
2.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்	K	கன்னடம்	30,000
3	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்	M	மலையாளம்	30,000
4.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்	TL	தெலுங்கு	13,000
5.	என் அழுகையும் ஆனந்தப் புதுவாழ்வும்	H	இந்தி	30,000
6.	My Cry & Joyful New Life	E	ஆங்கிலம்	40,000
7.	சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்	S	தமிழ்	95,000
8.	உண்மையான கடவுள் யார்?	RG	தமழ்	10,000
9.	சைவமும் வைணவமும் கிறிஸ்தவமும்	SVC	தமிழ்	20,000
10.	பாவத்தின் சம்பளம் நரகம்	P	தமிழ்	90,000
11.	இந்தியாவுக்கு இயேசு கிறிஸ்து தேவை.ஏன்?	JN	தமிழ்	40,000
12.	அரிய வேதம் அறிய வேண்டிய வேதம்	RV	தமிழ்	20,000
13.	விவிலியமும் விஞ்ஞானமும்	VV	தமிழ்	5,000
14.	இந்திய வேதங்களில் இயேசு கிறிஸ்து	CIV	தமிழ்	10,000
15.	திருக்குறள் கூறும் இரட்சிப்பின் நற்செய்தி	TG	தமிழ்	5,000
16.	நீங்களே எனக்கு சாட்சிகள்	YW	தமிழ்	20,000
17.	நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் பாகம் 1	I PRO	தமிழ்	10,000
18.	நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் பாகம் 2	II PRO	தமிழ்	10,000
19.	அற்புத சுகமளிக்கும் வைத்தீஸ்வரர் இயேசு	JH	தமிழ்	5,000
20.	தெய்வீக சுகம் உண்டா? (எபி. சுந்தர்ராஜ்)	EBE	தமிழ்	10,000
21.	VCD என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும் (சாட்சி)	V	தமிழ்	2,90,000
22.	VCD என் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும்	KV	கன்னடம்	40,000
23.	VCDஎன் அழுகையும் ஆனந்த புதுவாழ்வும்	HV	இந்தி	15,000
24.	VCD முக்திக்கு வழி கிறிஸ்தவமே	MVC	தமிழ்	15,000
25.	ACD சைவமும் வைணவமும் கிறிஸ்தவமும்	KAC	தமிழ்	10,000
26.	இந்திய வேதங்களில் இயேசு கிறிஸ்து பாகம் 1		தமிழ்	5,000
27.	இந்திய வேதங்களில் இயேசு கிறிஸ்து பாகம் 2		தமிழ்	5,000
	கிறிஸ்தவர்களை பலப்படுத்தும் நூல்கள் - VCD			
28.	கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு பாகம் 1	CAT I	தமிழ்	10,000
29.	கத்தோலிக்கர்களின் கனிவான கவனத்திற்கு பாகம் 2	CAT II	தமிழ்	10,000
30.	கிறிஸ்தவர்களின் 100 சந்தேகங்களுக்குப் பதில்	QA	தமிழ்	30,000
31.	கிறிஸ்துவை எதிர்ப்பதின் விளைவு	AC	தமிழ்	10,000
32.	இந்தியாவில் ஏன் சுவிசேஷம் முழுமையாகப் பரவவில்லை?	NG	தமிழ்	10,000
33.	என் ஊழியக்காரனே?	OM	தமிழ்	15,000
34.	இந்தியா ஒரு கிறிஸ்தவநாடு (சுந்தர் இயேசு வடியான்)	ICN	தமிழ்	
35.	இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகை (சகோதரி மரியா)	JSC	தமிழ்	10,000
36.	VCD எழுந்து கட்டுவோம்	RB	தமிழ்	20,000
37.	இயேசு உன்னோடு பேசுகிறார்	JS	தமிழ்	30,000
38.	ஜெகோவா விட்னஸின் உபதேசங்களுக்கு பைபிள் கூறும் பதில் பாகம் 1 & 2	JW I	தமிழ்	5,000
39.	VCD தேசம் சந்திக்கப்படணுமே கர்த்தாவே	DSK	தமிழ்	5,000
40.	கிறிஸ்தவத்தை குறித்து இந்துக்களின் பொதுவான கேள்வியும் பதிலும் பாகம் 1 & 2		தமிழ்	5,000

என்னுரை

கத்தோலிக்க ஆராதனையின் புனிதம், அமைதி

நான் ஒரு இந்துவாக இந்திய விமானப்படையில் டில்லியில் இருந்தபோது எனக்கு சில ரோமன் கத்தோலிக்க நண்பர்கள் குடும்பங்களைத் தெரியும். அவர்களோடு நான் கொஞ்சம் நெருங்கிப் பழகும் வாய்ப்பும் எனக்கு கிடைத்தது. சில சமயம் நான் அவர்கள் வீட்டில் இருக்கும்போது குடும்பத்தில் உள்ள அனைவரும் ஒன்றுகூடி குடும்ப ஜெபம் ஏறெடுப்பதையும் பார்த்து இருக்கிறேன். அதில் கலந்து கொண்டும் இருக்கிறேன். அப்பொழுது அனைவருமே முழங்கால்களில் நின்று சில கிறிஸ்தவப் பாடல்களை பாடுவார்கள். அந்தப் பாடல்களைப் பாடும்போது அவர்கள் உள்ளம் உருகி, உண்மையிலேயே கண்களில் நீர் மல்கப் பாடுவார்கள். எனக்காகவும், மற்றவர்களுக்காகவும் ஜெபம் செய்யும்போது ஏனோதானோவென்றோ, ஒரு கடமைக்காகவோ ஜெபம் செய்யாமல், ஒரு உண்மையான கரிசனை, அக்கறை, ஆத்தும பாரத்தோடு ஜெபம் செய்வதைக் கேட்கும்போது அது எப்பேர்ப்பட்ட கடின இருதயத்தையும் உடைக்கும். அவர்களோடு நான் சில தடவை மாதா கோவிலுக்கும் சென்று இருக்கிறேன். அப்பொழுது அனைவருமே ஒருமித்த குரலில் பியானோவின் இசையோடு இணைந்து பாடும்போது, அந்த இசை, அதில் உள்ள ஒரு லயிப்பு செவிகள் வழியே உள்ளத்திற்குள் ஊடுருவி என்னை அப்படியே நெக்குருகவைக்கும்.

மிகவும் உயர்ந்த கோபுரம், மிக உயரத்தில் கூரை, மகா பரிசுத்த ஸ்தலத்தில் இரண்டு பெரிய மெழுதுவர்த்திகளின் நடுவே ஒரு பெரிய சிலுவையில் முட்கிரீடம் அணிந்து, கைகளிலும், கால்களிலும் கூரிய பெரிய ஆணிகள் கடாவப்பட்டு, இரத்தம் வடிய அருள்பொங்கும் பார்வையுடன் சிலுவையில் தொங்கும் இயேசுபிரானின் அந்த தத்ரூபச் சிலை, பிரம்மாண்டமான தூண்கள், அந்த புராதனக் கட்டிடக்கலை, 20, 30 அடி உயரத்திற்கு சுவர்கள், தெய்வீக அமைதி, புனிதம் யாரையும் அப்படியே ஆட்கொள்வதை உணர முடியும்.

தேவாலயத்தின் உள்ளும், புறமும் ஒரு சின்ன தூசி, துரும்புகூட இல்லாத ஒரு புனிதம், சுத்தம், பரிசுத்தத்தை காண முடியும். அமைதியாக குனிந்த, குனிந்த பார்வை, நடையோடு வரிசையாக ஆலயத்திற்குள்ளே பயபக்தியோடு வந்து முழங்கால் படியிடும் கன்னியாஸ்திரிகள், கத்தோலிக்க பாதிரிமார்களின் அந்தப் பணிவு, பெரிய அங்கிகளை அணிந்து, நற்கருணையோடு, அமைதியான பார்வை, நடையோடு வந்து அந்த பரலோக தேவனுக்கு முன்பாக மண்டியிடும் அந்தத் தாழ்மை, ஒழுங்கு அனைத்துமே என் உள்ளத்தில் ஒரு இனம் புரியாத ஒரு அமைதியை, புனிதத்தை ஏற்படுத்துவதை நான் உணர்ந்திருக்கிறேன்.

கத்தோலிக்கர்களின் ஈடு இணையற்ற தொண்டு

இந்த ஒழுங்கை, ஒழுக்கத்தை ரோமன் கத்தோலிக்கர்கள் நடத்தும் கான்வெண்ட்டுகளில், பள்ளிகளில், ஆஸ்பத்திரிகளில், அனாதை இல்லங்களில், அவர்கள் செய்யும் இன்னும் அநேகம் சமூக சேவைகளில் காண முடியும். அவர்களுடைய மனிதநேயம், ஆத்தும பாரம், அவர்களின் அந்த டோட்டல் டெடிகேஷன், சின்சியாரிட்டி, ஹானஸ்டி, சேவை மனப்பான்மை, வறுமையில், நோய் நொடிகளில் வாடும் மக்களின் வாழும் நிலையைக் கண்டு அவர்களை வெறுத்து ஒதுக்காமல், ஒரு உண்மையான பாரத்தோடு, கரிசனையோடு அவர்களுக்கு உதவிடும் நோக்கத்தோடு, அவர்களை அரவணைக்கும் அந்தப் பாங்கு, அன்னை தெரசாவின் கண்களில் தெரியும் அந்த பாசம், தெய்வீக அன்பு, போப்பாண்டவரின் தோற்றத்தில் உள்ள அந்த எளிமை, கத்தோலிக்க மிஷனரிகள் நமது தேசத்தின், மொழியின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் ஆற்றிய அரும்பெரும் பணிகள், தொண்டுகளை எல்லாம் எண்ணிப் பார்க்கும்போது புராட்டஸ்டெண்ட் கிறிஸ்தவர்களோ, மற்ற மதத்தாரோ, இனத்தாரோ அவர்களின் பக்கத்தில் கூட நிற்க முடியாது.

தங்களுடைய வாழ்க்கையையே தேவ சேவைக்காக அர்ப்பணிக்கும் பாதிரிமார்கள், கன்னியாஸ்திரிகளின் அந்த

அர்ப்பணிப்பு, தியாகத்திற்கு ஈடு இணை எதுவுமே கிடையாது. "இந்த பூமியில் உள்ளவைகளை அல்ல, மேலானவைகளையே நாடுங்கள்" என்று கொலோ. 3:2-ல் சொல்லப்பட்டுள்ளபடி உலக வாழ்வு, இச்சைகளை வெறுத்து, துறவறம் பூண்டு, தம்முடைய ஆவி ஆத்துமா, சரீரம், வாழ்க்கை அனைத்தையும் இறைப்பணிக்காக தியாகம் செய்யும் அந்த முழு அர்ப்பணிப்புக்கு ஒப்பாக எதைக் கூற முடியும்? மற்றவர்கள் தேவனுக்காக, சுவிசேஷத்திற்காக ஆயிரம் ஓட்டம் ஓடலாம். ஆனாலும் அது நமது கத்தோலிக்க பாதிரிமார்கள், கன்னியாஸ்திரிகளின் தியாகத்திற்கு ஈடு இணையே கிடையாது. சொந்தம், பந்தம், உற்றார், உறவினர்கள், திருமணம், கணவன், புள்ளை, குட்டி போன்ற இந்த உலகப் பிரகாரமான வாழ்க்கை நோக்கத்தோடு சொத்து சேர்க்கணும், பணத்தை கொள்ளை அடிக்கணும், அப்பாயிண்ட்மென்ட்டுக்கு லஞ்சம் வாங்கணும், டிரான்ஸ்ஃபருக்கு இவ்வளவு மொய் வைக்கணும்னு கேட்டு வாங்குகிற எந்த இழிந்த புத்தியையும் அவர்களிடம் பார்க்க முடியாது. இன்னிக்கு கிறிஸ்தவ ஸ்தாபனங்களிலேயும், பெரிய பெரிய சபை ஊழியர்கள் மத்தியிலேயும் லஞ்ச லாவண்யங்கள், சொத்து சேர்ப்பு, பல கவர்ச்சிகரமான டிவி விளம்பரங்கள், உத்திகள், பங்காளர் திட்டங்களின் மூலமாக விசுவாசிகளை சுரண்டும் வியாபார எண்ணங்களை கத்தோலிக்கர்களிடம் காணவே முடியாது, கத்தோலிக்கர்களை நான் பெரிதும் மதிக்கிறேன். அவர்களிடமிருந்து மற்ற கிறிஸ்தவர்கள் கற்றுக் கொள்ள வேண்டிய நல்ல தன்மைகள், பண்புகள் இன்னும் எத்தனையோ இருக்கின்றன.

அப்பேர்ப்பட்ட தியாக உள்ளம் கொண்ட, உண்மையான உத்தமமான அவர்கள் அறிந்தோ, அறியாமலோ பின்பற்றுகிற, வேதத்திற்கு புறம்பான சில காரியங்களால் அவர்கள் பரலோகத்தை இழந்துவிடக்கூடாதே என்கிற ஆதங்கத்தில், கரிசனையில், உண்மையான அக்கறையில், கவலையில் அவர்கள் அறியாமல் செய்து கொண்டிருக்கிற பிழைகளை அவர்களுக்கு உணர்த்தி, அவர்களையும் சத்திய வேதத்தின்

பிரகாரம் நடந்து கரை சேர வைக்க ஒரு நூல் எழுத வேண்டும் என்ற ஆதங்கம் எனக்கு நீண்ட நாட்களாகவே இருந்தது.

கத்தோலிக்கத்தில் உள்ள குறைகளை, பிழைகளை சுட்டிக்காட்டுவது அவர்களை குறைகூறும் நோக்கத்தில் அல்ல என்பதை மீண்டுமாய் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். மேலும் இந்த நூலை எழுதுவதின் நோக்கம் அவர்களை பெந்தகோஸ்தேகாரர்களாக மாற்றுவதற்கும் அல்ல.

பெந்தகோஸ்தே சபைகளிலும் அவர்கள் விடவேண்டிய பல காரியங்கள் உள்ளன. நல்ல விஷயங்களும் உண்டு. ஒவ்வொரு டினாமினேஷனிலும் குறைகளும் உண்டு, நிறைகளும் உண்டு. எதுவாக இருந்தாலும் அது வேதத்திற்கு புறம்பானதா? இல்லை வேதம் அங்கீகரிக்கக்கூடியதா என ஒருவிசை அலசி ஆராய்ந்து, அனைத்தையும் சோதித்துப் பார்த்து நலமானதைப் பிடித்துக்கொள்ள தேவன் தாமே நல்ல ஞானத்தை அனைவருக்கும் தருவாராக!

எல்லா மனுஷரும்
இரட்சிக்கப்பட இறைஞ்சும்
இறை ஊழியன்

சென்னை - 73.
10.03.2012

சகோ.எஸ். தாயப்பன்

Estd 1984

Praise The Lord

✆ : (04652) 233185

"If we walk in the lights as He (God) is in the light, we have fellowship with one another, ..." 1 John 1:7.

FEDERATION OF PENTECOSTAL CHURCHES

Registered as a society (S.No. 31/86) under TamilNadu Societies Registration Act 27 of 1975

369 C, Mathias Nagar, Nagercoil - 629 001, Kanya Kumari District

Pr. Y.S. Devasundaram
President

Pr. C. Simon
Vice President

Pr. L. Espin
Treasurer

Pr. I. Vinil Sathish
Secretary

Pr. T. Sobitharaj
Joint Secretary

Ref.

NAGERCOIL.
01.02.2012

அணிந்துரை

சுவிசேஷகர் எஸ்.தாயப்பன் அவர்கள் எழுதிய *"வேதாகமத்தில் இஸ்ரவேலைக் குறித்து நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள் – பாகம் 1", "கிறிஸ்துவை எதிர்ப்பதின் விளைவுகள்'* மற்றும் *"கத்தோலிக்கர்களும் கரை சேரணுமே கர்த்தாவே – பாகம் 1"* என்ற குறுநூல்களை படித்தேன்.

சுமார் 10 வருடங்களுக்கு முன்பு வரை இந்திய விமானப்படையில் அதிகாரியாகவும், ஒரு தீவிர கிறிஸ்தவ எதிர்ப்பாளராகவும் இருந்த திரு.தாயப்பன் அவர்கள், கிறிஸ்துவின் மீட்பையும், அவருடைய வல்லமையையும், ஊழியத்தின் தேவையையும் பற்றி அறிந்த பின் இந்தக் குறுகிய காலத்துக்குள் கிறிஸ்துவின் நற்செய்தியை, தமிழகம் முழுவதும் பரப்புவதில் மிகவும் தீவிரமாகவும் ஓய்வின்றியும் செயல்படுவதைக் கண்டு கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன்.

அவருடைய உயிருள்ள சாட்சி நூலும் சிடி–க்களும் அனைத்து மக்களிடையேயும் வரவேற்கப்பட்டு, சபைகளுக்குள்ளே ஒரு எழுப்புதலை உருவாக்கி வருவதை நாம் அறிவோம். அவர்களுடைய நூல்கள் எல்லாமே எளிய நடையில் வழங்கப்படுகிறது. நூல்களும், சிடி–க்களும் மிகக் குறைந்த விலைக்கு வினியோகிக்கப்படுகிறது. அதனால் பல்லாயிரக்கணக்கான மக்களிடையே இந்தச் செய்திகள் எடுத்துச் செல்லப்படுகின்றன.

இந்திய வேதங்களையும், பரிசுத்த வேதாகமத்தையும், இந்திய வரலாற்றையும், திருச்சபை வரலாற்றையும், ஆய்வு செய்து சத்தியத்தை மக்கள் புரிந்து கொள்ளும் நோக்குடன் அவரது நூல்களும் செய்திகளும் அமைந்துள்ளன.

அனைத்து வகுப்பான சபையாரும் (டினாமினேஷன்ஸ்) அவரை அழைத்து செய்தி கேட்கின்றனர். இந்தக் கடைசி நாட்களில், அனைத்து மக்களுக்கும் என்ன செய்திகள் தேவையோ, அவைகளை தமது

நூல்களிலும், சி.டி.–க்களிலும் வழங்குகிறார். உதாரணமாக, *"சைவமும் வைணவமும் கிறிஸ்தவமே", "சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள்", "அரியவேதம், அறிய வேண்டிய வேதம்", "இந்தியாவில் ஏன் சுவிசேஷம் முழுமையாகப் பரவவில்லை"* என்பன போன்ற பல தலைப்புகளில் அவரது நூல்கள் வித்தியாசமான ஒரு ஊழிய வழி முறையை அறிமுகப் படுத்துகின்றன.

இவர்கள் ஒரு முதல் தலைமுறைக் கிறிஸ்தவனாக, அனைத்து கிறிஸ்தவ வகுப்புகளுக்கும் (டினாமினேஷன்கள்) வெளியே நின்று கொண்டு அவர்கள் எழுதியுள்ள புத்தகங்களினூடே அனைத்து மக்கள் மீதும் தான் கொண்ட அன்பையும், கரிசனையையும் வெளிப்படுத்துகிறார். மேலும், கத்தோலிக்க சபை வரலாற்றையும் அதின் பரிணாம வளர்ச்சியையும், கத்தோலிக்க சபை உருவாகும் முன்னும் அதற்குப் பின்னும் வளர்ந்த திருச்சபையின் போக்குகளையும் நன்கு அலசி ஆய்வு செய்து நூலாசிரியர் தனது கருத்தை *கத்தோலிக்கர்களும் கரை சேர வேண்டுமே கர்த்தாவே (பாகம்1)* என்ற அவரது நூலில் வெளியிட்டிருக்கிறார். இதன் 2–ஆம் பாகம் வெளிவரும் போது மேலும் பல உண்மைகள் வெளிப்படும் என்பது உறுதி.

"வேதாகமத்தில் இஸ்ரவேலைக் குறித்து நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள்" என்ற நூலில் விளக்கப்படும் கருத்துக்கள், வேறு பல நூல்களில் வெளி வந்துள்ள நூல்களையும் ஆராய்ந்து அவைகளை ஒருங்கிணைத்து அனைவரும் எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்துள்ளது. இந்நூலின் 2–ஆம் பாகம் வெளிவரும் போது மேலும் பல உண்மைகள் வெளிப்படும் என எதிர் பார்க்கலாம்.

"கிறிஸ்துவை எதிர்ப்பதின் விளைவுகள்" என்ற நூலின் வாயிலாக ஆதி முதல் இன்று வரை கிறிஸ்துவையும், திருச்சபையையும் துன்புறுத்தி, அழிக்க முயன்ற தனி நபர்கள், நிறுவனங்கள், அரசுகள் மற்றும் தேசங்கள் அடைந்த அழிவுகளை சித்தரித்துள்ளார். இது கிறிஸ்துவையும், திருச்சபையையும் எதிர்ப்பவர்களுக்கு ஒரு எச்சரிக்கையாக அமைந்துள்ளது. அதே போல, கிறிஸ்துவுக்காகவும், திருச்சபைக்காகவும் பாடுபட்டவர்கள் பெற்றுக் கொண்ட பாதுகாவல், நம்பிக்கை மற்றும் ஆறுதல்களையும் பற்றி எடுத்துக்காட்டப்பட்டுள்ளதால் இதைப் படிக்கும் இன்றைய ஊழியர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள்.

கவி, தாயப்பன் அவர்களுடைய அர்ப்பணிப்பையும் கடின உழைப்பையும் மனதாரப் பாராட்டி அவரை பயன்படுத்தி வரும் நம் தேவாதி தேவனை நன்றியுடன் துதிப்போம். விசுவாசிகளையும், ஊழியர்களையும் அனலூட்டி சபைகளில் எழுப்புதலை உருவாக்கி வரும் கவி.தாயப்பன் அவர்களையும், அவர் வெளியிடும் நூல்களையும் சி.டி–க்களையும், கர்த்தர் அபரிமிதமாய் ஆசீர்வதிப்பாராக.

Y.S.தேவசுந்தரம்

பொருளடக்கம்

சிலைவழிபாடு

1. விலக்கப்பட வேண்டிய விக்கிரஹ ஆராதனை .... 13.
2. சிலை வழிபாடு வேண்டாம் என்று சொன்னவருக்கே
ஒரு சிலையா? 14
3. புறஜாதிகள் திருச்சபைக்கு வருவதல்ல, இரட்சிப்பே முக்கியம் 16
4. மற்ற வேதங்களை நம் வேதாகமத்திற்கு ஈடாகுமா? 17
5. பிசாசுக்கு இடம் கொடாதிருங்கள் 18
6. கீழ்படியாமை நரஹாக்கிணையை கொண்டு வருமே 18
7. ஒரே தேவன், ஒரு மந்தை, ஒரு சபை 20
8. நமக்குள்ளே ஏகப்பட்ட பிரிவினைகள் 20
9. தெரிந்தே செய்யும் மகாபாவம் 21

பரிந்துரை செய்வது யார்?

10. மேரி பரிந்துரை செய்கிறாரா? 22
11. மரியாளோ, மரித்த பரிசுத்தவான்களோ பரிந்து பேச முடியுமா? 23
12. புனிதர்களும் மனிதர்களே 24
13. இறந்தோர் ஆண்டவரைப் புகழ்வதில்லை 25
14. அருளப்பருக்கு தேவதூதன் சொன்ன அறிவுரை 26
15. தேவன் ஒருவருக்கே கனம், மகிமை 26

நமக்கு யார் மத்தியஸ்தர்?

16. இயேசு ஒருவரே நமக்கு மத்தியஸ்தர் 27
17. மரியாள் இயேசுவுடன் ஒரு உடன் இரட்சகி அல்ல 29
18. மரியாளுக்கும் இயேசுவே இரட்சகர் 30
19. இப்போ நமக்காக ஜெபிப்பவர்கள் மூவர் 32
20. உயிரோடு இருப்பவர் இயேசு ஒருவரே 34

மரியாள் யார்?

21. வேதம் கூறும் சத்தியம் 35
22. இயேசுவின் பார்வையில் யார் அவருடைய தாய்? 36
23. தாயில்லாமல் பிள்ளையா? 37
24. மேரி ஒரு ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு ஸ்திரிதான். ஆனால்... 39
25. மரியாள் இயேசுவின் தாயா? அல்லது தேவ தாயா? 40

26. மரியாள் கன்னியாகவே வாழ்ந்தாரா? 42
27. மரியாள் பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டாரா? 47
28. மரியாள் அரசியா? 47

திருச்சபையின் தவறான எண்ணங்கள்

29. கத்தோலிக்க சபைதான் அனைத்து சபைகளுக்கும் தாய் சபையா? 52
30. பேதுருவின் மீதுதான் சபை கட்டுப்பட்டுபட்டுள்ளதா? 52
31. சொல்வது ஒன்று, செய்வது ஒன்று 53
32. திருச்சபை மரியாளின் கையில் இருக்கிறதா? 58
33. ஜெபமாலை 59

தெளிப்பு ஞானஸ்நானம்

34. குழந்தை ஞானஸ்நானம் 63

பாவ சங்கீர்த்தனம்

35. பாவ அறிக்கை 67
36. இயேசுவைத் தவிர வேறு யாருக்கும் பாவத்தை மன்னிக்கும் அதிகாரம் இல்லை 68
37. மரியாளுக்கு பாவத்தை மன்னிக்கும் அதிகாரம் இல்லை 70
38. இயேசு மாத்திரமே உலகத்தின் பாவங்களுக்காக இரத்தம் சிந்தினார் 70

பாபிலோன்

39. பாபிலோனியக் கடவுள் வழிபாடு 72
40. பாபிலோனியத்தின் வேர் 73
41. பாபிலோனிய சூரிய வழிபாடு 75
42. பாபிலோனிய தேவாலய ஊடுருவல் 76
43. தேவாலயத்தில் பாபிலோனிய ஆதிக்கம் 78
44. கிறிஸ்தவத்தில் பாபிலோனியப் பண்டிகைகளும் வழிபாடுகளும் 79
45. பாபிலோனிய "ஆங்க்" 83
46. பாபிலோனிய மதக் கொள்கைகள் 84
47. சாத்தானின் உபதேசங்கள் 85

போப் ஆதிக்கம்

48. பாபிலோனில் விசுவாசத் துரோகம் 89

49. [illegible] 90
50. [illegible] 91
51. [illegible] 92
52. [illegible] 94
53. [illegible] 96
54. [illegible] 97
55. [illegible] 99
56. Bibliography 100
57. [illegible] 101

சிலை வழிபாடு

விலக்கப்பட வேண்டிய விக்கிரஹ ஆராதனை

"விக்கிரஹ ஆராதனை செய்யக்கூடாது. அது தேவனுக்கு மிகவும் அருவருப்பானது" என்று வேதாகமத்தில் கர்த்தர் தெளிவாகக் கூறியிருக்கிறார். உலகம் முழுவதிலும் உள்ள அனைத்து கிறிஸ்தவ சபைகளும், போதகர்கள், ஊழியக்காரர்கள், கிறிஸ்தவர்கள், வேத வல்லுனர்கள் மற்றும் பைபிள் காலேஜ்கள் என அனைவருமே ஒருமனதாக ஏற்றுக்கொண்டுள்ள பரிசுத்த வேதாகமத்தை ரோமன் கத்தோலிக்க திருச்சபைகள் மறுதலித்து, அதில் தூய பரிசுத்த ஆவியினால் அருளப்பட்ட வேத வாக்கியங்களைக் கூட்டியும், குறைத்தும், மாற்றியும் எழுதி, அவர்களுக்கென்று ஒரு தனி வேதாகமத்தையே உருவாக்கிக் கொண்டுள்ளனர். அவர்கள் கடைப்பிடிக்கின்ற, சத்தியத்திற்கு புறம்பான காரியங்களுக்கு ஏற்ப ஆண்டவருடைய வார்த்தைகளையும் திரித்து, மாற்றி எழுதி அப்படி அவர்கள் உருவாக்கின ரோமன் கத்தோலிக்க மொழி பெயர்ப்புத்தான் அவர்கள் பிரசுரித்துள்ள "புது எருசலேம் பதிப்பு" (The New Jerusalem Version - NJV) என்பது.

இந்த பிரசுரமே ஹீப்ரு மற்றும் கிரேக்க மற்றும் அரேபிக் மொழியிலிருந்து நேரடியாக மொழி பெயர்க்கப்பட்டது என அவர்களால் கூறப்படும் வேதாகமம். இதுவே ரோமன் கத்தோலிக்க பைபிளாக இப்போது இருக்கிறது. அவர்களின் இந்த பைபிளே Exdus 20 : 4 & 5-ல் சொல்லுகிறது - ***"You shall not make yourself a carved image or any likeness of anything in Heaven above or on earth beneath or in the waters under the earth. You shall not bow down to them or Serve them"*** அதாவது "மேலே விண்வெளியில், கீழே மண்ணுலகில், பூமிக்கடியே நீர்த்திரளில் உள்ள யாதொன்றின் சிலையையோ, ஓவியத்தையோ நீ உருவாக்க வேண்டாம். நீ அவைகளை வழிபடவோ, அவற்றிற்கு பணிவிடை புரியவோ வேண்டாம் ஏனெனில் உன் கடவுளும், ஆண்டவருமாகிய நான் இதை சகித்துக் கொள்ள மாட்டேன்" என்று ஆண்டவர் கூயிறிருக்கிறார். "என்னைத் தவிர வேறு தெய்வங்கள் உனக்கு இருத்தல் ஆகாது. என்னை புறக்கணிக்கும் முதாதையரின் பாவங்களை பிள்ளைகள் மேல் மூன்றாம், நான்காம்

தலைமுறை மட்டும் தண்டித்துத் தீர்ப்பேன்" என்று கடுமையாக எச்சரிக்கிறார்.

தேவனோட கட்டளை முதலாவதாக விக்கிரஹமோ, ஓவியமோ எதையும் உருவாக்கக்கூடாது. இரண்டாவது அதை வழிபடவும், பணிவிடை செய்யவும் கூடாது. படங்கள், சிலைகள் மற்றவர்களுக்கு போதிப்பதற்காக என்று சொல்வதும், சிலைகள், படங்களுக்கு செலுத்தும் மதிப்பும், மரியாதையும் அந்தப் படத்திற்கு அல்ல. மாறாக அது யாரை வெளிப்படுத்துகிறதோ அவருக்கே அந்த மதிப்பு. மரியாதை என்று சொல்வதும், செய்வதும் கடவுளின் கட்டளையை மீறுவதாகும். "கடவுள் உருவமற்றவர். அவரது உண்மை இயல்புக்கு ஏற்ப உள்ளத்தில் ஆவியோடும், உண்மையோடும் ஆராதனை செய்ய வேண்டும்" என்று யோவான் 4:24 சொல்லுதே.

ஆனால் கத்தோலிக்க ஞான உபதேசமான (Catechism of the Catholic Church, Page No. 235, 1192) கூறுகிறது: "பரிசுத்த தேவமாதா, தூதர்கள் மற்றும் புனிதர்களின் புனிதமான உருவச்சிலைகள் மூலமாகவும் நாம் அவர்களுக்கு நம்முடைய பயபக்தியைக் காட்டுகிறோம்" என்று. அதனால் இரண்டாம் வாட்டிகன் சங்கம், "புனிதப்படங்களை கோயில்களில் வைத்து மரியாதை செலுத்துதல் போன்ற பழக்கங்கள் தொடர வேண்டும்" என்று வலியுறுத்துகிறது. வேதாகம சத்தியத்திற்கும், நடைமுறை உபதேசத்திற்கும் எவ்வளவு முரண்பாடுகள் பார்த்தீர்களா?

நான்காவது நூற்றாண்டில்தான் திருச்சபையில் ஓவியம் வரைவது காணப்படுகிறது. தூரா (Dura - Inpresent Day - IRAQ) என்ற இடத்தில் இருந்த ஆலயத்தில்தான் முதன் முதலாக வேதாகம சம்பவங்கள் ஓவியமாக வரையப்பட்டது. பல பரிசுத்தவான்களும், குறிப்பாக சைப்பிரஸ் சபை தந்தையாக இருந்த எபினேஸியஸ் சாலமிஸ் (Epiphanius of Salamis - AD 315-403) சபைகளில் ஓவியம் மற்றும் சிலைகள் வைப்பதை மிகக்கடுமையாக எதிர்த்தார். பாலஸ்தீனத்தில் இருந்த

ஒரு ஆலயத்தில் கிறிஸ்துவின் படம் வரையப்பட்ட ஒரு தொங்கு திரையைக் கண்டு அதைக் கிழித்து எருசலேம் சபையின் பிஷப்புக்கு இந்த தவறான காரியத்தை சுட்டிக் காட்டினார்" (200 years of Christ Power by N.R. Needham, Page 196). இதிலிருந்து இயேசு கிறிஸ்துவின் காலத்தில் இருந்து நான்காம் நூற்றாண்டு வரை திருச்சபையில் விக்கிரஹங்களோ, ஓவியமோ வைக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது.

சிலை வழிபாடு வேண்டாம் என்றவருக்கே ஒரு சிலையா?

"தேவனுடைய ஆலயத்திற்கும், விக்கிரஹங்களுக்கும் சம்பந்தம் ஏது?" என்று 2 கொரி. 6:16 கடுமையாக சாடுகிறது. வார்ப்பிக்கப்பட்ட, செதுக்கப்பட்ட உருவங்கள், விக்கிரஹங்களை உருவாக்குவதற்கும், அவைகளை தொழுதுகொள்வதற்கும், பணிந்து கொள்வதற்கும் ஒரு மிகக் கடுமையான, ஸ்டிராங்கான ஒரு நிலைப்பாட்டை அவர்களே உருவாக்கின ரோமன் கத்தோலிக்க வேதாகமம் எடுத்து இயம்பிய பிறகும், அப்போஸ்தலனாகிய பவுல், பேதுரு, யோசேப்பு, அந்தோணியார் மற்றும் மரித்துப்போன எண்ணிறைந்த பரிசுத்தவான்களுக்கும், மேரிக்கும், தேவதூதர்களான கேபிரியலுக்கும் சிலைகளை வார்ப்பித்து அந்த சிலைகளைக் கொண்டு தேவாலயத்தை நிரப்பி இருக்கின்றனர். இவர்களே உருவாக்கிய இந்த உருவங்களுக்கு முன்பாக அவர்கள் குனிந்து, பணிந்து முழங்கால் படியிட்டு தொழுது கொள்வது மட்டுமல்ல. அவைகளை சுமந்துகொண்டு ஊர்வலம் வருகின்றனர். விக்கிரஹங்களை உருவாக்கி, அவைகளை தேர், சப்பரங்களில் வைத்து தெருத்தெருவாக வீதிகளில் இழுத்து வருகின்றனர். சாஷ்டாங்கமாக அந்த சொரூபங்களுக்கு முன்பாக அவர்கள் நெடுஞ்சாங்கிடையாக விழுந்து வணங்கி காணிக்கைகளை செலுத்துகின்றனர். அந்த சிலைகளுக்கு முன்பாக மணிக்கணக்காக என்ன செய்ய முடியுமோ, மெழுதுவர்த்தி ஏற்றுதல், பூ மாலை அணிவித்தல், பூப்போடுதல், உப்பு போன்றவைகளை காணிக்கையாக

படைத்தல், அவைகளுக்கு முன்பாக தங்களது கரங்களால் சிலுவைக் குறி போட்டு, அப்படி போட்ட விரலை உதட்டில் வைத்து முத்தமிடுதல், அந்த சிலையை மூன்று முறை சுற்றி வருதல் இப்படி இன்னும் என்ன என்ன செய்யணுமோ, அத்தனையும் செய்கின்றனர். கிராமங்களில் படிப்பறிவில்லாத புறஜாதி மக்கள் அந்த ஊர் கோயில்களில் விக்கிரஹங்களுக்கு என்னவெல்லாம் செய்வார்களோ அவைகள் அத்தனையையும் செய்கின்றனர்.

அந்த உருவங்களுக்கு அலங்காரம் செய்கின்றனர். அவைகளுக்கு விளக்கு, மெழுதுவர்த்தி ஏற்றி வைக்கின்றனர். புற ஜாதி மக்கள் விக்கிரஹங்களுக்கு அலங்காரம் பண்ணி, அவைகளை சேவிக்கிறதை நாம் பரிகாசம் பண்ணி, அவர்களை இகழ்கிறோம். கடவுள் மனுஷனைப் படைச்சாரா ? இல்லை மனுஷன் கடவுளைப் படைச்சானா என்று கேள்விகள் எல்லாம் கேட்கிறோம். இப்போ அவங்களுக்கும், நமக்கும் இதில என்ன வித்தியாசம் இருக்கு ? அவங்க அவங்களுக்கு பிடிச்சவைகளை ஒரு சிலையாக வடிச்சு, அவைகளை அவங்க ஆராதிக்கிறாங்க. இங்க நாம இயேசு கிறிஸ்துவுக்கும், அவரை பெற்றெடுத்த யோசேப்பு - மரியாளுக்கும், அவரோட சீஷர்களுக்கும் சிலைகளை வடித்து ஆராதிக்கிறோம். இரண்டும் ஒண்ணுதானே! அவங்க பண்ணினா அது தப்பு, பாவம். அதையே நாம பண்ணினா அது சரியாகிடுமா ? என் அன்பான கத்தோலிக்க சகோதர, சகோதரிகளே, சற்று யோசித்துப் பாருங்கள்.

புறஜாதிகள் திருச்சபைக்கு வருவதல்ல, இரட்சிப்பே முக்கியம்

அப்படிச் செய்வது எல்லாம் அந்த கோயில்களுக்கு வருகிற புற ஜாதி மக்கள்தான் என்று சொல்வது எல்லாம் சரியா ? கிறிஸ்தவர்களும், பரம்பரை, பரம்பரையாக கிறிஸ்தவர் களாக இருப்பவர்களும் இப்படிச் செய்கிறார்களே. இந்தக் கொடுமையை யாரிடம் போய்ச் சொல்ல ? இவைகளை எல்லாம் அந்த தேவாலயத்தின் குருமார்களும், பாதிரிமார்களும்,

கன்னியாஸ்திரிகளும் பார்த்துக் கொண்டுதானே இருக்கின்றனர். இவைகள் எல்லாம் வேதத்திற்கு புறம்பானது. தேவனுடைய கட்டளைகளுக்கு மாறானது, தேவன் அருவருக்கின்ற செயல்கள் இவைகள் என்று தெரிந்தே அனுமதிக்கின்றார்களே. வேளாங்கன்னி மாதா கோயிலில் ஒரு பாதிரியார் சொன்னாராம். இப்படியெல்லாம் செய்யுறதுனாலேயும், இவைகளை செய்ய அனுமதிக்கிறதுனாலேயும் அநேக புற ஜாதி இந்துக்கள் தேவாலயத்துக்கு வருகின்றனர் என்றாராம். புற ஜாதி மக்கள் தேவாலயத்துக்கு வந்து போறதுதான் அவர்களுக்கு பெரிதாகவும், முக்கியமாகவும் தெரிகிறது. மனந்திரும்புதலோ, இரட்சிப்போ, ஆண்டவரில் நிலைத்திருப்பதோ, கிருபையில் வளருவதோ அவர்களுக்கு முக்கியமாகப்படவில்லை. இத்தனையையும் செஞ்சுட்டு சொல்றாங்க, நாங்க விக்கிரஹங்களை ஆராதிக்கிறது இல்லைன்னு. இது எப்படி இருக்கு? முழுப்பூசணிக்காயை சோற்றில மறைக்கிற மாதிரி இல்லையா? பல ஊர்களிலே முண்டக்கண்ணி அம்மனுக்கும், நாகாத்தம்மனுக்கும் கிடா வெட்டி, பொங்கலிடுறதுக்கு கூட்டம் அலை மோதுது. இந்த இரண்டு சிலைகளையும் மாதா கோயிலில் வச்சா இன்னும் அதிகமான புறஜாதி மக்கள் கூட்டம் வருவாங்களே. அதையும் இவங்க செஞ்சாங்கன்னா அதுல ஆச்சரியப்படுறதுக்கு ஒண்ணுமே இல்லை.

மற்ற வேதங்கள் நம் வேதாகமத்துக்கு ஈடாகுமா?

பாண்டிச்சேரியில (Sacred Heart) கிறிஸ்தவர்களுக்குன்னு ஒரு ரெட்ரீட் சென்ட்டர் இருக்கு. அதுல ரெகுலரா கன்னியாஸ்திரிகளுக்கு டிரெயினிங் கொடுக்குறாங்க. அங்கே உள்ள தியான மண்டபத்தில பைபிளையும், குரானையும், பகவத் கீதையையும் ஒண்ணா வச்சு இருக்குறாங்க. தியானம் முடிஞ்சப்பிறகு "ஓம் சாந்தி, ஓம் சாந்தி"ன்னு சொல்றாங்க. நான் எழுதியுள்ள "*அரிய வேதம், அறிய வேண்டிய வேதம்?*" என்ற நூலை படிச்சுப்பாருங்க. நம்மோட பரிசுத்த வேதாகமத்துக்கு ஈடு இணை இந்த உலகத்திலேயே வேற எதுவுமே கிடையாதுங்கிறதை புரிஞ்சுப்பீங்க. குரானும், பகவத்கீதையும்

நம்ம வேதாகமத்துக்கு ஈடு இணை ஆகுமா? தியானம், ஆராதனையின் முடிவில் "ஓம் சாந்தி"ன்னு சொல்லச் சொல்லி வேதாகமத்தில் எங்கயாவது சொல்லப்பட்டு இருக்குதா? கர்த்தருக்குப் பிடிக்காத புற ஜாதிகளின் ஆராதனை முறைகளை எதுக்கு நமக்குள்ள கொண்டு வர்றீங்க?

பிசாசுக்கு இடம் கொடாதிருங்கள்

VBS பள்ளியில பத்துக் கட்டளைகளை மனப்பாடம் பண்ணி ஒப்புவிக்கிற 1-ம் கிளாஸ், 2-ம் கிளாஸ் குழந்தைகளுக்கு அதோட அர்த்தம் புரியுது. அதுங்ககிட்ட கேட்டா அதுங்க தெளிவாச் சொல்லுதுங்க விக்கிரஹத்தை கும்பிடக்கூடாதுன்னு. ஆனா இவங்க இங்க விழுந்து, விழுந்து கும்புடுறாங்க. போப்பாண்டவர் முதற்கொண்டு மேரியின் சிலைக்கு முன்பாக முழங்கால் படியிட்டு ஸ்தோத்திரம் செலுத்துகிறார். இதை அறியாமை என்பதா? இல்லை, ஏதோ ஒரு காலத்தில் தெரியாம மேரியையும், இயேசுவோட சீஷர்களையும் ஆராதிச் சுட்டோம். அது தப்பாகவே இருந்தாலும், இப்போ எங்களால அதை விட முடியாது. பிதாவே சொன்னாலும் சரி. இதைச் செய்யக்கூடாதுன்னு எப்படி எப்படியோ, எத்தனையோ இடங்களில், எத்தனையோ வசனங்கள் மூலமா தெள்ளத் தெளிவா, கொஞ்சங்கூட சந்தேகத்துக்கு இடமே இல்லாம வேதாகமத்தில சொல்லப்பட்டு இருந்தாலும் சரி, நாங்க புடிச்ச முயலுக்கு மூணே காலுதான்னு அடமெண்ட்டா இருக் குறாங்களே. இது ஆண்டவரோட கட்டளைகளை மீறுகின்ற, அலட்சியப்படுத்துகின்ற, கீழ்படியாமைங்கிற சத்துருவின் ஆவியைத்தவிர வேறு என்னவாக இருக்க முடியும்?

கீழ்படியாமை நரகஹாக்கினையை கொண்டு வருமே

கத்தோலிக்க சகோதர, சகோதரிகளின் மற்ற அத்தனை நல்ல அம்சங்களும், பண்புகளும், அவர்களின் உன்னதப் பணி, அர்ப்பணிப்பு, டெடிகேஷன், டிவோஷன், சின்சியாரிட்டி எல்லாமே இந்த ஒரு விஷயத்தில அப்படியே அடிபட்டுப் போகுதே. அதை நினைக்கும் போதுதான் மிகவும்

வயித்தெரிச்சலா இருக்குது. ஆதாம் ஏவாளின் ஒரே ஒரு கீழ்படியாமையினா ஆண்டவர் கொடுத்திருந்த சகலவிதமான சம்பத்துக்களையும், நித்ய ஜீவனையும், பாதுகாப்பையும் இழந்து அவங்களும் பாவத்தில விழுந்து, மனுக்குலம் முழுவதும் ஒட்டு மொத்தமா பாவத்திலேயேயும்,. சாபத்திலேயும், மரணத்திலேயும் விழவச்சுட்டாங்களே. அதுமாதிரி நான் பெரிதும் மதிக்கும், நேசிக்கும் கத்தோலிக்க சகோதர, சகோதரிகளும் விழுந்து போயிடக்கூடாதேங்கிற ஆதங்கத்தில, கரிசனையிலதான் இதைக் கண்ணீரோடு எழுதுகிறேன்.

ஏன்னா ஆண்டவரோட வசனம் அப். 17.30-ல தெளிவாச் சொல்லுது. "அறியாமை உள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போல இருந்தார். இப்பொழுதோ மனம் திருந்த வேண்டும் என்று எங்குமுள்ள மனுஷர் எல்லோருக்கும் கட்டளை இடுகிறார்". முன்னாடியாவது அவங்க வேதத்தை வாசிக்காத கத்தோலிக்க சபை பாதிரிமார்கள் சொல்லுகின்ற செய்தியை மாத்திரம் கேட்டுட்டு கிணத்துத் தவளையா இருந்தாங்க. இப்போ எல்லா கிறிஸ்தவ வீடுகளிலேயும் டிவி இருக்குது. கேபிள் டிவி கனெக்ஷன் இருக்குது. பல கிறிஸ்தவ டிவி சேனல்கள் மூலமா சத்தியத்தை தெரிஞ்சுக்கிட முடியுது. "சத்தியத்தை அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலை ஆக்கும்"னு தெரிஞ் சாப்புறமும் தப்புப் பண்ணினா என்ன நடக்கும்னு எபி.10:26, 28-ல சொல்லப்பட்டு இருக்கிறதை நெனைச்சா குலையே நடுங்குது. "சத்தியத்தை அறியும் அறிவை அடைந்த பின்பு நாம் மனப்பூர்வமாக பாவம் செய்கிறவர்களாக இருந்தால் (அந்த) பாவங்களின் நிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலியும் இராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும் விரோதிகளைப் பட்சிக்கின்ற கோபாக்கினையுமே இருக்கும். மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகின்றவர்கள் இரக்கம் பெறாமல், இரண்டு, மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாவான்". விரோதிகளைப் பட்சிக்கின்ற கோபாக்கிணை நம்மீது வரணுமா? என் தேவனே! என் அன்புக்குரிய கத்தோலிக்க சகோதர சகோதரிகள் அறிந்தும், அறியாமலும் செய்கின்ற இந்த தவறுகளை நீர் ஒரு விசை மன்னிக்க வேண்டுமாய் நான் கெஞ்சுகிறேன். தகப்பனே! அவர்களுக்காகவும், நீர் உம்முடைய

இரத்தத்தை சிந்தி இருக்கிறீரே, ஆவியானவர் அவர்களுக்கு சத்தியத்தை உணர்த்தி, இந்த விக்கிரஹ ஆராதனைப் பழி பாவத்திலிருந்து அவர்களை விடுவித்து, ஆக்கிணைக்கு தப்பு விக்க வேண்டுமாய் ஜெபிக்கிறேன் தகப்பனே!

ஒரே தேவன், ஒரு மந்தை, ஒரு சபை!

"ஒரே தேவன், ஒரு மந்தையாக, ஒரே சபையாக" நாம எல்லோரும் இருக்கணும்னுதான் ஆண்டவர் விரும்புகிறார். ஆனா தேவனுடைய சபை இன்னிக்கு எப்படியோ பல பிரிவுகளா ஆகிப்போயிடுச்சு. இதுக்கெல்லாம் மூலகாரணம் "உபதேசக் குழப்பம், கருத்து வேறுபாடு, டாக்டரின் வித்தியாசம் இவைகளைவிட சிலருடைய பட்டம், பதவி, பொருளாசை, தனி நபர் முக்கியத்துவம், சகிப்புத்தன்மை இல்லாமை, சுயநலம் இவைகளால்தான் கிறிஸ்தவம் இன்னிக்கு இத்தனை பிரிவுகளா ஆகிப்போச்சு. கத்தோலிக்கர்கள்னா அதுக்குள்ள ஆயிரத்தெட்டு உட்பிரிவுகள். புராட்டெஸ்டெண்ட்டுக்குள்ள கேக்கவே வேண்டாம். அமைப்பு சார்ந்த சபைகள், அமைப்புகளில் இல்லாத சுயாதீன தனி நபர் சபைகள், அமைப்புகளிலேயே பல பிரிவுகள், ஏஜி, ஏசிஏ., ஈசிஐ, அட்வெண்ட், மெத்தடிஸ்ட், பேப்டிஸ்ட்டு, ஆங்கலிக்கன், ஃபுல் காஸ்ப்பல், கிருபாசனம், டி.பி.எம்., லுத்தரன், சி.எஸ்.ஐ. இப்படி எண்ணி மாளாத பிரிவுகளாக, நெல்லிக்காய் மூட்டையாக பிரிந்து போய்க்கிடக்கிறோம்.

நமக்குள்ளே ஏகப்பட்ட பிரிவினைகள்

நமக்குள்ளேயே தேவையில்லாத போட்டி, பொறாமைகள், ஆடு திருடுகிற வேலை, புறங்கூறுதல், குறை கூறுதல், நாங்க மட்டும்தான் பரலோகம் போவோம், மத்தவங்க போகமாட்டாங்க அப்படிங்கிற மேட்டிமையான எண்ணங்கள், இப்படி பலவித எண்ணங்களால், செயல்களால் பிரிந்து போயி கிடக்குறோம். சில பல சின்னச்சின்ன உபதேசக் குழப்பங்கள், கருத்து வேறுபாடுகள் இருக்கத்தான் செய்யுது. முழுக்கு ஞானஸ்தானம் அவசியமா? தெளிப்பு ஞானஸ்நானம் மட்டும் போதாதா? ஒரே ஞானஸ்நானம்தானே வேதத்தில சொல்லப்பட்டு இருக்கு.

அதை யார் பேர்ல கொடுக்கிறது? இயேசுவின் பேர்லயா? பிதா, குமாரன் பரிசுத்த ஆவியின் பேரிலேயா? பரிசுத்த ஓய்வு நாள் சனிக்கிழமையா? ஞாயிற்றுக்கிழமையா? அபிஷேகம், அன்னிய பாஷை, அல்லேலூயா சொல்றது, அப்பம் பிடுதல், நகை போடுறது, பூ, பொட்டு வைக்கிறது, வெள்ளைச்சேலை கட்டுறது என இப்படி இன்னும் எத்தனையோ சொல்லிக்கிட்டே போகலாம்.

தெரிந்தே செய்யும் மகா பாவம்

ஒரு விஷயத்தைக் குறிச்சு வேதாகமத்தில ஒரே ஒரு இடத்தில மட்டும் சொல்லப்பட்டு இருக்கிறதை மட்டும் வச்சு ஒரு ஒப்பீனியன், டாக்டரினை உருவாக்காமல், அது விஷயமாக பல இடங்களில என்ன சொல்லப்பட்டு இருக்குங்கிறதை கருத்தில்கொண்டு இந்த கருத்து வேறுபாடுகளுக்கு, உபதேச குழப்பங்கள் பற்றி ஒரு முடிவுக்கு வந்திடலாம். மேலே சொல்லப்பட்டுள்ள உபதேசக் குழப்பங்களைக்கூட அவைகளை நாம புரிஞ்சுக்கிடுறதுல இருக்கிற வித்தியாசத்தினால வருதுன்னு சொல்லி ஓரளவுக்கு கொஞ்சம் ஆறுதல் அடைஞ்சுக்கிடலாம். ஆனா விக்கிரஹ ஆராதனை கூடாது, தேவன் அதை அறவே அருவருக்கிறார். அவரைத் தவிர வேறு யாரையும் நாம தெய்வமா நினைச்சு ஆராதிக்கக்கூடாது, சேவிக்கக்கூடாது, தேவனை எந்த சொரூபத்திலும் வார்ப்பித்து, உருவாக்கி, அவைகளை பணிந்து கொள்ளக்கூடாதுங்கிற தேவனுடைய கட்டளை மிக மிக தெளிவாக, எந்தவித குழப்பத்திற்கோ, தவறா அர்த்தம் புரிந்து கொள்வதற்கோ அல்லது மாறுபட்ட கருத்துக்கோ கொஞ்சங்கூட இடமே இல்லாத அளவுக்கு தெள்ளத் தெளிவா இருக்கு. இது கத்தோலிக்க வேதாகமத்திலேயே இருக்கு. அப்படி இருந்தும் அந்தக் கட்டளையை மீறி அவங்க செய்யுறாங்கன்னா, அதை என்னன்னு சொல்றதுன்னுதான் எனக்குப் புரியலை.

கர்த்தர் எதை மன்னிச்சாலும் மன்னிப்பார். ஆனா, அவரோட தெளிவான கட்டளைகளை மீறுகிறதை, அந்த கீழ்படியாமையை அவர் மன்னிக்கவே மாட்டார்னு மட்டும்

என்னால உறுதியா சொல்ல முடியும். கீழ்படியாமைக்கு என்ன ஆக்கிணை கிடைக்கும்கிறதை வேதம் தெளிவாச் சொல்லுது. அதை மறுபடியும், மறுபடியும் சொல்லி உங்களுக்கு பேதிக்கு கொடுக்க வேண்டாம்னு பார்க்கிறேன். வேண்டாம், பிளீஸ். விட்டுடுங்க. வேதத்துக்கு புறம்பான ஒன்றை அது தவறுன்னு தெரிஞ்சாப்பிறகும் தயவுசெய்து செய்ய வேண்டாம். உங்களோட மத்த எல்லா நல்ல விஷயங்களுமே அதுல அடிபட்டுப் போயிடும்.

ஆதாம், ஏவாளின் ஒரே ஒரு கீழ்படியாமையினால ஆண்டவர் அவங்களுக்கு கொடுத்து இருந்த சகலவிதமான சம்பத்துக்களையும், பாதுகாப்பையும், நித்ய ஜீவனையும், மரணமில்லாப் பெருவாழ்வையும் இழந்து அவங்களும் பாவத்தில விழுந்து, மனுக்குலம் முழுமையையும் ஒட்டுமொத்தமா பாவத்தில விழவச்சுட்டாங்களே. அதுக்கு காரணம் என்ன? அவங்களோட ஒரே ஒரு கீழ்ப்படியாமைதானே? இதை எல்லாம் தெரிஞ்ச நாமளும் அதே தவறை செய்யலாமா?

பரிந்துரை செய்வது யார்?

மேரி பரிந்துரை செய்கிறாரா?

ஒரு பெற்ற தாயின் பாசத்தோடு நமக்காக, நம்முடைய தேவைகளுக்காக மேரி மாதா ஆண்டவரிடம் பரிந்துரை செய்கிறார் என கத்தோலிக்க சகோதர, சகோதரிகள் நம்பு கின்றனர். வேதத்தில் மரியாள் ஒரே ஒரு தரம்தான் இயேசு கிறிஸ்துவிடம் பரிந்துரை செய்கிறார். கானாவூர் கல்யாணத்தில் திராட்சை ரசம் காலியானபோது மேரி இயேசுவிடம் இதுபற்றி கூறுகிறார். அப்போ இயேசுவின் பதிலைக் கேட்டுட்டு மேரி என்ன சொல்கிறார்? "அவர் என்ன சொல்லுகிறாரோ அப்படியே செய்யுங்க"ன்னு சொல்லிட்டு அப்படியே ஒதுங்கிட்டார். வேற எந்த இடத்திலேயும், வேறு யாருக்காகவும் பரிந்துரை செய்ததாக வேதத்தில எங்கேயும் சொல்லப்படலையே. அவங்க எதுக்காக நமக்கு பரிந்துரை செய்யணும்? நாம ஆண்டவரோட பிள்ளைங்க. நாம எல்லாருமே ஆண்டவரோட புள்ளைங்கதான்.

அந்த அதிகாரத்தைத்தான் பிதா நமக்கு ஏற்கனவே கொடுத்து இருக்கிறாரே. யோ.1:12-ஐ பாருங்க. "அவருடைய நாமத்தில் விசுவாசமுள்ளவர்கள் ஆகி இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அவர்கள் அத்தனை பேர்களும் தமக்கு பிள்ளைகள் ஆகும்படியாக பிதாவானவர் நமக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறார்" "நீர் என் பரிசுத்த ஜனம்"னு உபா.7:6-ல பிதாவே சொல்றாரு. "உன்னை நான் பெயர் சொல்லி அழைத்தேன். நீ என்னுடையவன்னு" ஏசா.43:1-ல சொந்தம் கொண்டாடுகிறார். "நீ என்னுடையவனாக இருக்கும்படிக்கு உன்னை மற்ற ஜனங்களைவிட்டு பிரித்தெடுத்தேன்"னு வேவி.20:26-ல அடிச்சுச் சொல்றாரு. "என் பார்வைக்கு அருமையானவன்"னு ஏசா.43:4 நம்மளை தூக்கி எடுத்து கொஞ்சுகிறார். "எனக்கு நீ சிநேகிதன்"னு யோ.15:15-ல நட்புக்கரம் நீட்டி நம்மை அரவணைக்கிறார். "நீ என் சகோதரன்"னு மத்.28:10-ல முத்திரை இடுகிறார். இத்தனைக்குப் பிறகும் நமக்காக பரிந்துரை செய்ய வேற ஒருத்தர் நமக்கு வேணுமா? அப்பாவுக்கும், புள்ளைக்கும் ஊடால ஒரு இடைத்தரகர் தேவையா? ஒரு ஏஜெண்ட், புரோக்கர் தேவை இல்லையே. எதுக்கு மூக்கை தலையை சுத்தி வளைச்சு தொடணும்? டக்குன்னு டைரக்டா நேரடியா தொடலாமே. தம்மோட ஒரு டைரக்டு காண்ட்ராக்ட், நெருக்கமான உறவு, ஐக்கியம் இதைத்தான் தேவன் விரும்புவார். இன்னொருத்தர் மூலமா போனா தேவனுக்கும், நமக்கும் ஒரு நெருக்கமான உறவு இல்லேன்னுதானே அர்த்தம்? ஏன் நாம ஆண்டவரை விட்டு தூரமா விலகி நிக்கணும்? இது நமக்கு தேவையா?

மரியாளோ, மரித்த பரிசுத்தவான்களோ (புனிதர்கள்) பரிந்து பேச முடியுமா?

ரோமன் கத்தோலிக்க சபை பங்குத்தந்தையாக இருந்து இரட்சிக்கப்பட்டு இன்று "கத்தோலிக்கர்களும் கரை சேரணுமேங்கிறதுக்காக "கத்தோலிக்க மறுமலர்ச்சி இயக்கம்" என்ற ஒன்றை ஸ்தாபித்து கத்தோலிக்கர்கள் மத்தியில் ஊழியம் செய்துவருகின்ற பாதர் A.ராபர்ட் இளங்கோ அவர்கள் வெளியிடும் நவம்பர்-2010 மாத இதழில் ஒரு சம்பவத்தை

குறித்து எழுதி இருந்தார். அதைப் படிக்கின்ற சமயத்தில் மனதுக்கு மிகவும் வேதனையாக இருந்தது. பிசாசானவன் கத்தோலிக்க மக்களின் மனதில் எவ்வளவு பெரிய தவறான எண்ணங்களை, உபதேசங்களை விதைத்திருக்கிறான் எனப் பாருங்கள்.

"1991-ஆம் ஆண்டு, ஃபாதர் ராபர்ட் இளங்கோ கமுதி என்ற ஊரில் பங்குத்தந்தையாக இருந்தபோது அது அந்தோணியார் கோவிலாக இருந்தபடியால் அங்கு அந்தோணியாருக்கு திருவிழா ஏற்றெடுத்தனர். அந்த ஊர் ஜனங்கள் அந்தோணியார் பக்தர்கள். திருவிழாவின்போது ஒருநாள் திருப்பலி முடிந்தவுடன் பங்குத்தந்தையாக இருந்த ஃபாதர் ராபர்ட் இளங்கோவிடம் சில இளைஞர்கள் வேகமாக வந்தார்கள். அவர்கள் வந்தவுடன் "என்ன நீங்க இயேசுப்பத்தி மாத்திரம் பிரசங்கம் பண்ணிக்கிட்டு இருக்கீங்க. அந்தோணியாரைப் பத்தியும் பேசுங்க" என்றனர். அதற்கு அவர் "அந்தோணியார் யாரைப் பத்தி பிரசங்கம் பண்ணினார்? தன்னைப் பத்தியா? இயேசுவைப் பத்தியா?" என்று கேட்டார். "இயேசுவைப் பத்தித்தான்" என்றார்கள். "அந்தோணியார் எந்த நாமத்தில் அற்புதங்களைச் செய்தார்?" "இயேசுவின் நாமத்தில்தான் அற்புதம் செய்தார்" என்றார்கள். "அந்தோணியார் பிரசிங்கித்த அந்த இயேசுவைத்தான் இப்போ நானும் பிரசிங்கிக்கிறேன். எந்த நாமத்தில் அந்தோணியார் அற்புதங்களைச் செய்தாரோ அந்த இயேசுவைத்தான் நான் பிரசிங்கிக்கிறேன்" என்றார். அதற்கு வந்திருந்த அனைவரும் "அதெல்லாம் எங்களுக்கு வேண்டியதில்லை. எங்களுக்கு அந்தோணியார்தான் தெய்வம். அவரைப் பத்தி மட்டும் பிரசங்கம் பண்றதா இருந்தா பண்ணுங்க. இல்லைண்ணா உங்க பிரசங்கமே எங்களுக்கு வேண்டாம்னு" கத்தினாங்க. தெய்வத்திற்கும், தெய்வத்தை அறிவித்த மனிதர்களுக்கும் வித்தியாசம் தெரியாத இவர்களைக் குறித்து எங்கே போயி யாரிடம் முறையிட?

புனிதர்களும் மனிதர்களே!

முதல்ல இந்தப் புனிதர்கள் எல்லாம் யாருன்னு நாம தெரிஞ்சுக்கிடணும். இந்த புனிதர்கள் எல்லாம் நம்மைப்போல

பூமியில மனிதர்களாகப் பிறந்தவங்கதான். அவங்க இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு அவரோட ஊழியத்தை செய்தாங்க. ஆண்டவர் கொடுத்த சில விசேஷித்த வரங்களால், அபிஷேகத்தால் அவரோட நாமத்திலே பல அற்புதங்களை செய்தாங்க. ஆனா இப்போ அவங்க யாருமே உயிரோட இல்லை. அவங்க எல்லாருமே மரித்து அடக்கம் பண்ணப்பட்டுட்டாங்க. இவங்க தேவனுடைய வசனத்துக்கு கீழ்படிஞ்சு, வேத வசனங்களின்படி பரிசுத்தமாய் வாழ்ந்த பரிசுத்தர்கள். "மரணம் நேரிடுகிறதாய் இருந்தாலும் அதற்குத் தப்பும்படி தங்கள் ஜீவனையும் பாராமல், ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினாலும், தங்கள் சாட்சியின் வசனத்தினாலும் அவனை ஜெயித்தார்கள்" என்று வெளி.12:11 சொல்வதிலிருந்து இவர்கள் தேவனின் வசனத்தினாலும், இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினாலும் பிசாசை ஜெயித்தவர்கள் என்பது தெளிவாகிறது. இவர்களில் பலர் இரத்தசாட்சியாகவே மரித்திருக்கிறார்கள். ஆனால் வேதாகமத்தை எழுதிய பரிசுத்தவான்களோ அல்லது அதற்குப் பின்பு வாழ்ந்த பரிசுத்தவான்களோ அவர்களை நாம் தொழுது கொள்ள வேண்டும் என்றோ, அவர்களை மகிமைப்படுத்த வேண்டும் என்றோ எங்கும், எந்த இடத்திலும் சொல்லவே இல்லை.

இறந்தோர் ஆண்டவரைப் புகழ்வதில்லை

இந்தப் உலகத்தில் மனிதனாகப் பிறந்த யாராக இருந்தாலும் அவர்களுக்குள் ஜீவன் இருக்கும்வரை அவர்கள் அவர்களுக்காகவும் ஜெபிக்க முடியும். மற்றவர்களுக்காகவும் பரிந்து பேசி ஜெபிக்க முடியும் (எபேசி.6:18, கொலோ 1:11, 4:4, 2 தெச.1:12, யாக்.5:16). ஆனால் மரிச்சாப்பிற்கு எந்த மனுஷனாலும் தேவனைத் துதிக்கவே முடியாது என்பது வேதம் காணும் சத்தியமாகும் (சங்.115:17). இது கத்தோலிக்க மொழி பெயர்ப்பில் சங்.113:25, 26-ல் "இறந்தோர் ஆண்டவரைப் புகழ்வதில்லை. உயிர் வாழும் நாம் மட்டுமே ஆண்டவரை வாழ்த்துகிறோம்" என்று தெளிவாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. எனவே, மரித்த எந்த மனிதராக இருந்தாலும் அல்லது புனிதர்களாக இருந்தாலும் அவர்கள் தேவனைப் புகழவே

முடியாது என்று இருக்கும்போது எப்படி அவர்களால் மற்றவர்களுக்காக பரிந்து பேச முடியும்?

அருளப்பருக்கு தேவதூதன் சொன்ன அறிவுரை

இந்தப் புனிதர்கள் எல்லாருமே தேவனைத்தான் தொழுது கொண்டார்கள் என்பதையும், இயேசுவின் மூலம் தான் இரட்சிப்பு உண்டு என்று சுட்டிக்காட்டியதையும் தெளிவுபடுத்த அவர்களின் வாழ்க்கை வரலாறே நமக்கு சாட்சியாக நிற்கிறது. இயேசுவின் சீடராகிய புனித யோவான் (அருளப்பர்) சொல்வதைப் பாருங்கள். "இவைகளை எனக்கு காண்பித்த தூதனை வணங்கும்படி நான் அவன் பாதத்தில் விழுந்தேன். அதற்கு அந்த தூதன் நீ இப்படி செய்யாதபடிக்குப் பார். உன்னோடும், உன் சகோதரரோடும் கூட நான் ஒரு ஊழியக்காரன். தேவனை (மாத்திரம்) தொழுதுகொள் என்றான்" - வெளி.22:8, 9-ல் எழுதி இருப்பதிலிருந்து புனிதர்களை மாத்திரமல்ல, தேவ் தூதர்களையும்கூட நாம் வணங்கக்கூடாது என்பது தெளிவாகிறது.

தும்பை விட்டு வாலைப் பிடித்த கதையாக புனிதர்கள் காட்டுகின்ற இயேசு கிறிஸ்துவைப் பிடித்துக் கொள்ளாமல், அதைச் சொல்லுகின்ற புனிதர்களையே பிடித்துக் கொள்வதால் என்ன ஆசீர்வாதம் நமக்குக் கிடைக்கும்? கற்றுக் கொடுக்கும் பாடங்களை விட்டுவிட்டு, ஆசிரியரைப் பிடித்துக் கொண்டால் பரிட்சையில் எப்படி பாஸ் பண்ண முடியும்? எப்பொருள் யார், யார் வாய் கேட்பினும், அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு. உண்மை எது? சத்திய வசனம் என்ன சொல்லுகிறது? என்று அல்லவா பார்க்கணும். நீங்களும், நானும், பரிசுத்தவான்களும், ஒருநாள் மறைந்து போனாலும், வேதத்தில் உள்ள ஒரு புள்ளியோ, வார்த்தையோ என்றும் மாறாதே.

தேவன் ஒருவருக்கே கனம், மகிமை

நம் கத்தோலிக்க திருச்சபை "தேவன் ஒருவருக்கு மாத்திரமே ஆராதனை (Adoration only to God) என்றும்,

புனிதர்களுக்கு மரியாதை மட்டுமே செலுத்த வேண்டும் (Veneration to all saints) என்றும் தெளிவாகக் கூறுகிறது. ஆனால் நடைமுறையில் புனிதர்களின் சிலைகளை தொட்டு வணங்குவது மாத்திரமல்ல. அந்த சிலைகளின் முன்பாக முழங்கால் படியிட்டு ஆராதனை செய்வதும் மறுக்க முடியாத ஒன்றாகும். ஆனால் வேதத்தில் "என் மகிமையை மனிதர்களுக்கோ (புனிதர்கள்), சிலைக்கோ நான் தரமாட்டேன்" என்று ஏசாயா 42:8-ல் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆனால் நாமோ தேவனுக்கு மட்டுமே கொடுக்க வேண்டிய மகிமையையும். கனத்தையும், புகழையும், மாட்சிமையையும் பூமியில் வாழ்ந்து மரித்த மனிதர்களுக்கு கொடுத்துக் கொண்டு இருக்கிறோம். திருச்சபை நினைத்தால் யாரையும் புனிதராக ஆக்கலாம். அல்லது கொடுத்த புனிதர் பட்டத்தை திரும்பவும் வாங்கலாம். உதாரணமாக பிலோமினாளுக்கு கொடுத்த புனிதர் பட்டத்தை திரும்பவும் வாங்கலாம். பிலோமினாளுக்கு புனிதப்பட்டம் கொடுக்கப்பட்டு, அனேக இடங்களில் புனித பிலோமினாளுக்கு ஆலயங்களும் இன்று இருக்கின்றன. ஆனால் திருச்சபை பிலோமினாளுக்கு கொடுத்த புனிதர் பட்டத்தை திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டது. ஆனால் பிலோமினாளுக்குரிய ஆலயங்கள் மூடப்படவில்லையே. அங்கே தொடர்ந்து ஆராதனை நடந்து கொண்டு இருக்கிறதே.

நமக்கு யார் மத்தியஸ்தர்?

இயேசு ஒருவரே நமக்கு மத்தியஸ்தர்

மரித்த மனிதர்கள் பரிந்து பேசுகிறார்களா? பரிந்து பேச முடியுமா? இது விஷயமாக திருச்சபை உபதேசத்தைப் பார்க்கும்போது கி.பி. 1563-ல் பொதுவான திரந்து சங்கம் (General Council of Trent) ஒரு புதிய கொள்கையை உருவாக்கியது. அதன்படி "The Saints reigning together with Christ, pray to God for men and women" என்று The Christian Faith 1255-வது எண்ணில் சொல்லப்பட்டுள்ளது. மேலும் புனிதர்கள் பரலோகத்தில் இருக்கிறார்கள் என்றும், இவர்கள் மூலமாக ஜெபித்தால் அவர்கள் நன்மைகளைப் பெற்றுக் கொள்வார்கள்

என்றும் அதே எண்ணில் கூறப்பட்டுள்ளது. ஆனால் யோவான் 3:13-ல் பரலோகத்திற்கு சென்றவர் இயேசு ஒருவர் மட்டும்தான் என்று தெளிவாக எழுதப்பட்டுள்ளது. மேலும் அதே எண்ணில் 1 தீமோ.2:5-ன்படி *"Jesus Christ is the only one Mediator between God and Human Kind"* என்றும் திருச்சபை கூறுகிறது. அப்படியானால் வேதத்தின்படி பரலோகத்தில் யாரும் இல்லை என்பதுவும் தெளிவு. இயேசுவைத் தவிர வேறு மத்தியஸ்தர் இல்லை என்றும் சொல்லிவிட்டு, புனிதர்கள் நமக்காக மத்தியஸ்தராக இருந்து பரிந்து பேசுகிறார்கள் என்று அவர்களே சொல்வது முரண்பாடாக இல்லையா? வேதத்தின்படி மரித்த எல்லா மனிதர்களின் ஆத்துமாக்களும் பாதாளத்திலோ அல்லது பரதேசிலோ இருக்கவேண்டும். யோவான் 3:13-ன்படி நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைத் தவிர, மரியாள் கூட பரலோகம் போகவில்லை. போகவும் முடியாது. காரணம் யோ.14:3-ன்படி மரித்து உயிர்த்தெழுந்து பரலோகம் சென்ற இயேசு நாம் வாழ்வதற்கு ஏற்ற இடத்தை தயாரித்துவிட்டு வந்தபிறகுதான் புனிதரை தம்மிடம், சேர்த்துக் கொள்வார் என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது.

அப்போஸ்தலராகிய பவுல் என்ற சின்னப்பர் 1 தீமோ. 2:5-ல் தேவனுக்கும், மனுஷர்களுக்கும் மத்தியஸ்தர் ஒருவர்தான் என்று தெளிவாகக் கூறுகிறார். ஏனென்றால் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட சந்ததி உருவாகும்வரை நியாயப்பிரமாண சட்டங்கள் மோசேயின் மூலமாக கொடுக்கப்பட்டது (கலா.3:19, 20). பழைய ஏற்பாடு இரத்தத்தினாலாகிய முதலாம் உடன்படிக்கைக்கு மோயீசன் மத்தியஸ்தராக இருந்து தேவதூதர் மூலமாக நியாயப் பிரமாண சட்டதிட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பழைய உடன்படிக்கை குறைவுள்ளதாக இருப்பதால், இரண்டாவது புதிய உடன்படிக்கைக்கு மத்தியஸ்தராக இயேசு கிறிஸ்து வந்தார் (எபி. 8:6, 7, 12:24). எனவே *"அழைக்கப்பட்ட அனைவருக்கும் நித்திய சுதந்திரத்தை அடைவதற்கு இயேசுவே அனைருக்கும் மத்தியஸ்தராக இருக்கிறார்"* என்று எபி.9:15-ல் தெளிவாக எழுதப் பட்டுள்ளது. அதனால்தான் பவுல் 1 தீமோ.2:5-ல் *"தேவனுக்கும், மனிதனுக்கும் இயேசு ஒருவர்தான் மத்தியஸ்தர்"* என்று கூறுகிறார்.

இதைக் குறித்து இயேசு "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறேன். என்னாலே அல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" என்று யோ.14:6-ல் கூறுகிறார். நாம் பரலோகம் செல்வதற்கு இயேசு கிறிஸ்து ஒருவர் மட்டுமே வாசல் (யோ.10:9). அவரோட நாமத்தில் மட்டுமே இரட்சிப்பு உண்டு (அப்.4:12) என்று வேதம் கூறுவதால் இயேசு ஒருவர்தான் நமக்கு மத்தியஸ்தர் என்பது தெள்ளத் தெளிவாகிறது. வேறு யாரும் நமக்கு மத்தியஸ்தராக இல்லை என்பதே வேதம் கூறும் சத்தியம்.

மரியாள் இயேசுவுடன் ஒரு உடன் இரட்சகி அல்ல

ஒரு வி.ஐ.பி. (நமது நாட்டின் பிரதம மந்திரி) நம்மோட வீட்டிற்கு வர்றதா இருந்தா ஒரு மாசத்துக்கு முன்னாடியே வீட்டை சுத்தப்படுத்தி, அழகுபடுத்தி அவருடைய வருகைக்கு நாம ஆயத்தப்படுத்துவோம் இல்லையா? அதுபோல ஆண்டவர் இயேசு பிறக்கப்போகிற இல்லமான மரியாளை பரிசுத்த ஆவியானவர் பரிசுத்தப்படுத்தி, அவர் தங்கும் ஆலயமாக மரியாளை மாற்றினார். மரியாள் பரிசுத்த ஆவியினால் நிறைந்து காணப்பட்டபடியால், "என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. என் ஆவி இரட்சகராகிய தேவனில் களி கூறுகிறது" என லூக்கா 1:46-47-ல் பாடுகிறார். இதில் ஒரு பெரிய சத்தியமே அடங்கி இருக்கிறது. இயேசு ஒருவர்தான் இரட்சகர் என்பது உலகறிந்த உண்மை. மரியாளின் வயிற்றிலே இயேசு கிறிஸ்து பிறந்தாலும் மரியாளையும் இரட்சிக்க வல்லமை உள்ளவர் இயேசு ஒருவர்தான் என்பதை மரியாள் அறிந்திருக்கிறபடியால், மரியாள் என் இரட்சகராகிய தேவன் என்றும், இயேசு ஒருவரே இரட்சகர் என்ற சத்தியத்தையும் இங்கே வெளிப்படுத்துகிறார்.

ஆனால் இயேசு இரட்சகர் என்றால் மரியாள் உடன் இரட்சகி (Co-redeemer) என்ற ஒரு எண்ணம் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் மத்தியில் ஒரு மூட நம்பிக்கையாக உருவாகும் படியாக நடந்து கொள்கிறார்கள். இதுவரை திருச்சபையில் மரியாளை உடன் இரட்சகி என்று யாரும் பிரகடனப்படுத்தியது இல்லை. மாறாக மரியாள் தேவனது மீட்புத் திட்டங்களுக்கு

5

மங்கள வார்த்தை முதல் சிலுவையடிவரை கீழ்படிந்து தனது நம்பிக்கையாலும், விசுவாசத்தாலும் வேதனைகளை சகித்து ஒத்துழைத்தாள் (Christian Faith 716D) என்றுதான் கூறப் பட்டுள்ளது. எந்த ஆயர்களாலும், போப்பாலும் வலியுறுத்தப்படாத ஒரு கருத்து எப்படி திருச்சபையில் நுழைந்தது என்று புரியவில்லை. இரண்டாம் வாட்டிகன் சங்கம் வரை அநேக காரியங்கள் மரியாளைக் குறித்து திருச்சபையில் புகுத்தப்பட்டு இயேசுவுக்கு சமமாக கொண்டு வரப்பட்டுள்ளதுதான் வருத்தத்தை அளிக்கிறது.

மரியாளுக்கும் இயேசுவே இரட்சகர்

மேலும் மத்.22:42-45-ஐ வாசிக்கும்போது இயேசு பரிசேயர்களிடம் கிறிஸ்துவைக் குறித்து தாவீது சங்.110:1-ல் *"என் ஆண்டவர்"* என்று சொல்லி இருக்க, *"நீங்கள் தாவீதின் குமாரன்"* என்று சொல்கிறீர்களே. அது எப்படி என்று கேட்கிறார். இதன் மூலம் இயேசு தாவீதின் வம்சத்தில் பிறந்தாலும் அவர் தாவீதுக்கும் ஆண்டவர் என்பது தெளிவாகிறது. அதுபோல மரியாளின் வயிற்றில் இயேசு பிறந்தாலும், மரியாளுக்கும் இரட்சகர் இயேசுதான் என்பது தெளிவாகிறது. ஆனால் இரண்டாம் வாட்டிகன் சங்க ஏட்டில் "தன் கீழபடிதலால் தானும் மனுக்குலம் அனைத்தும் மீட்புப் பெறக் காரணமானவள்" என்று புனித சிரேனி யுஸ் கூறிய கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதைக்குறித்து திருச்சபை என்ன சொல்கிறது என்று பார்க்கும்போது தேவனிடத்தில் சேருவதற்கு இயேசு மத்தியஸ்தராக இருக்கிறார் என்றால், இயேசுவிடம் சேருவதற்கு மரியாள் மத்தியஸ்தராக இருக்கிறார் என்கிறார்கள். இயேசு வழி தேவனிடம் என்றால், மரியாள் வழி இயேசுவிடமாம். அப்படியா? இது குறித்து திருச்சபையின் உபதேசங்களில் பார்க்கும்போது, "She continues to obtain by constant intercession that is why she is under the title of advocate, auxciliatirx, helper, mediatrix, that they in no way diminish or add to the efficacy of Christ the one mediator (Christian Faith In.717)" மரியாள் நமக்காக பேச முடியுமா? இதைக் குறித்து வேதம்

என்ன சொல்கிறது என்று பார்க்கும்போது 1 தீமோ.2:4-5-ன் படி மத்தியஸ்தர் ஒருவரே என்பது தெளிவாக உள்ளது. திருச்சபையும் ஒரே மத்தியஸ்தர் இயேசுதான் என்று கூறுகிறது. ஒரே மத்தியஸ்தர் என்றால் வேறு யாரும் இல்லை, வேறு யாரும் இருக்க முடியாது என்றுதானே அர்த்தம். அப்படியானால் புனிதர்களோ, மரியாளோ எப்படி மத்தியஸ்தர்களாக வந்து நமக்காக பரிந்துரை செய்ய முடியும்? எபி.7:25-ஐயும் வாசித்துப் பாருங்கள்.

1 யோ.2:1-ல் "நமது பாவங்களுக்காக பரிந்து பேசுபவர் இயேசு ஒருவர் மாத்திரமே" என்று தெளிவாக எழுதப்பட்டுள்ள நிலையில் நாம் ஜெப மாலையில் "அர்சீஸ்ப்பட்ட மரியே" என்று மரியாளிடத்தில் கேட்கிறோமே. இது எந்த விதத்தில் நியாயம்? நமது மத்தியஸ்தர் ஒருவரே. நமது பாவங்களுக்காக பரிந்து பேசுகிறவர் இயேசு ஒருவரே. நமது பாவங்களை சுமந்து தீர்க்கிறவர் இயேசு ஒருவரே. நமது பாவங்களுக்காக பலியாகியவர், இரத்தம் சிந்தியவர் இயேசு ஒருவரே என்று வேதம் தெளிவாகக் கூறும்போது வேதத்தின் சத்தியத்திற்கு புறம்பான காரியங்களையும், வேண்டுதல்களையும் நாம் செய்வது சரியா, நியாயமா என்று தயவுசெய்து உங்களை சிந்தித்துப் பார்க்க வேண்டுகிறேன். மேலும் நமது ஜெபத்தைக் கேட்கும் அளவுக்கு மரியாள் தேவனைப் போல எங்கும் நிறைந்த, சர்வ வல்லமையுள்ளவரோ அல்ல என்பதை நாம் அறிய வேண்டும். ஏனெனில் தேவன் ஒருவர்தான் சர்வ சல்லமையுள்ளவர். எங்கும் நிறைந்தவர். அவர் ஒருவரே நம் ஜெபத்தை கேட்க எங்கும் இருக்கிறார். வேறு ஒருவரும் இல்லை.

Christian Faith - Mother of Saviour - Encleli - Letter by Leo XIII, Page 261 என்ன சொல்லுகிறது பாருங்கள். "At times it has been exaggerated as though her place were somewhat similar to that of her son... it has been unduely played down the unique mediation of Christ. Since Vatican II strikes the correct balance, only a few characteristic tests to be quoted among the many marriological declarations of the last popes, before the council". இதிலிருந்து நாம் தெரிந்து கொள்வது என்ன?

இயேசு கிறிஸ்துவின் மையமும், மத்தியஸ்த நிலையும் மங்கும் அளவுக்கு மரியாள் உயர்த்தப்பட்டுள்ளார் என்பதுதானே. இதனால் பல போப்புகளால் மரியாளைக் குறித்து கொண்டு வரப்பட்ட அநேக பிரகடனங்கள் கைவிடப்பட்டதாக திருச்சபையே கூறுகிறது. ஆனால் மரியாளிடத்தில் எங்களுக்காக வேண்டிக் கொள்ளும் என்று எல்லோரும் ஜெபிக்கிறார்களே, அந்த ஜெபம் கேட்கப்படுமா?

இப்போ நமக்காக ஜெபிப்பவர்கள் மூவர்

அப்படி இருக்க மரித்த புனிதர்கள் பரலோகம் சென்று விட்டார்கள் என்றும், அவர்கள் கிறிஸ்து நாதருக்கும், பூமியில் உள்ள ரோமன் கத்தோலிக்க விசுவாசிகளுக்கும் நேரடி உதவியாளராக இருந்து அவர்கள் இவர்களுக்காக ஜெபிப்பதாக ஒரு பொய்யை படிப்பித்து சகல புனிதர்களின் பெயர்களையும் சொல்லிச்சொல்லி, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும், எங்களுக்காக வேண்டிக் கொள்ளும் என்று ஜெபிப்பது மிகவும் தவறு. அப்படியானால் நமக்காக தந்தையாகிய கடவுளிடம் ஜெபித்து நமக்கு வேண்டிய ஆவியின் சரீர நன்மைகளை பெற்றுக் கொடுப்பவர் யார்? அவர்கள் மூன்று பேர்கள் மட்டுமே. (1) பரலோகத்தில் இருக்கிற நம் இயேசுவானவர், (2) பரிசுத்த ஆவியானவர், (3) தற்போது நம்மோடு உயிருடன் இருக்கும் புனிதர்கள் ஒருவருக்கு ஒருவர் ஜெபிக்கிறார்கள். இதை வேத வசனங்களுடன் சற்று பார்ப்போம்.

1) பரலோகத்தில் இருக்கும் நம் இயேசு கிறிஸ்து

- கிறிஸ்துவே மரித்தவர். அவரே உயிரோடு எழுந்தும் இருக்கிறார். அவரே தேவனுடைய வலது பாரிசத்தில் இருந்து கொண்டு நமக்காக வேண்டுதல் செய்கிறார் (ரோமர் 8:34).
- தேவன் ஒருவரே. தேவனுக்கும், மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. எல்லோரையும் மீட்கும் பொருளாகத் தம்மை ஒப்புக் கொடுத்தவர் இயேசு கிறிஸ்து மாத்திரமே (1 தீமோ.2:5,6).

- வானங்களின் வழியாய் பரலோகத்துக்குப் போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறார் (எபி.4:14) (மகாபிரதான ஆசாரியர் பாவிகளான நமக்காக தேவனுக்கு பலி செலுத்தி, மக்களுக்காக வேண்டுதல் செய்வார்).

2) பரிசுத்த ஆவியானவர்

- அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக் கொள்ளவேண்டியது இன்னது என்று அறியாமல் இருக்கிறபடியால் ஆவியானவர் தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார் (ரோமர் 8:26,27).
- இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தில் விசுவாசம் வைத்து, அவரிடம் மனஸ்தாபத்துடன் பாவங்களை அறிக்கை செய்து இரட்சிப்பைப் பெற்று (1 யோ.1:7-9, 2 கொரி. 7:10) மூழ்குதல் முறையில் ஞானஸ்நானம் பெற்று பரிசுத்த ஆவியானவரைப் பெற்று பரிசுத்தமாய் ஜீவிக்கும் புனிதர்களின் இருதயத்திலிருந்து எண்ணிக் கைக்கு அடங்காத பெருமூச்சுகளுடன் பரிசுத்த ஆவியானவர் ஜெபிக்கிறார். தேவன் அதைக் கேட்டு பதில் அளிப்பார்.

3) உயிருடன் நம்மோடு இருக்கும் புனிதர்கள் ஒருவருக்கொருவர் ஜெபிக்கிறார்கள்

- ஆதி திருச்சபையில் இருந்த விசுவாசிகள் அனுதினமும் கூடி ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து அனைவருக்காகவும், பாதிக்கப்பட்டவர்களுக்காகவும் ஊக்கமாக ஜெபித்தார்கள் என்று (அப்.2:42, 46)-ல் பார்க்கிறோமே.

ஆகவே, மரித்தோரில் இயேசு கிறிஸ்துவைத் தவிர வேறு யாருமே பரலோகம் செல்லவே இல்லை. நமக்காக ஜெபிக்கவும் இல்லை. மாறாக கிறிஸ்து இயேசு நமக்காக ஜெபிக்கிறார்.

பரிசுத்த ஆவியானவர் நமக்காக ஜெபிக்கிறார். பரிசுத்தவான்கள் ஒருவருக்கு ஒருவர் ஜெபித்துக் கொண்டு இருக்கிறார்கள். நம்முடைய பெலவீனங்களைக் குறித்து பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியன் நமக்கு இராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராக இருக்கிற பிரதான ஆசாரியராகிய இயேசு கிறிஸ்துவே நமக்கு இருக்கிறார். ஆதலால் நாம் இரக்கத்தை பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயம் செய்யவும், கிருபையை அடையவும், தைரியமாய் கிருபாசனத்தண்டையிலே (மாத்திரம்) சேரக்கடவோம். ஆமென் (எபி.4:14-16).

உயிரோடு இருப்பவர் இயேசு ஒருவரே!

மேலும் எபி.7:25-ல் தமது மூலமாக தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு இயேசு உயிரோடு இருக்கிறார் என்று எழுதப்பட்டுள்ளது. வெளி.1:18-ல் இயேசு மரித்தாலும் அவர் சதா காலங்களிலும் உயிரோடு இருக்கிறார் என்று கூறப்பட்டுள்ளது. இயேசு உயிரோடு இருப்பதால் நமக்காக பரிந்து பேச முடிகிறது. மாறாக மற்ற மனிதர்களோ அல்லது மரியாளோ தற்போது உயிரோடு இல்லை என்பது வேதம் கூறும் சத்தியம். இதுதான் உண்மை. இதை உறுதிப்படுத்தும் விதமாக அப்போஸ்தலராகிய பவுல் என்ற சின்னப்பர் ரோமர் 8:34-ல் கிறிஸ்துவே மரித்தவர், அவரே எழுந்துமிருக்கிறவர் என்று சொல்வதிலிருந்து இந்த பூமியில் மரித்து உயிரோடு இருக்கிறவர் இயேசு கிறிஸ்து ஒருவர் மட்டுமே என்று தெளிவாகிறது. அதுமட்டுமல்ல 1 யோ. 2:1-ல் "ஒருவன் பாவம் செய்வானானால் நீதிபரராய் இருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராய் இருக்கிறார்" என்று கூறப்பட்டுள்ளது. இதிலிருந்து பாவிகளுக்காக பரிந்து பேசுபவர் இயேசு ஒருவர்தான் என்பது தெளிவாக வேதம் கூறுகிறது.

ஆனால் நாமோ தும்பை விட்டு வாலைப் பிடித்த கதையாக இயேசுவை விட்டுவிட்டு மரியாளிடத்தில் கேட்கிறவர்களாக இருக்கிறோம். வேதமோ, "நாம் பாவங்களுக்காக செத்து நீதிக்கு

பிழைக்கும்படிக்கு அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களை சிலுவையின் மேல் சுமந்தார்" என்று 1 பேதுரு 2:24 கூறுகிறது. நமது பாவங்களுக்காக மரித்தவர் இயேசு ஒருவரே. மற்ற புனிதர்களோ, மரியாளோ நமக்காக பரிந்து பேச முடியாது என்பதுதான் வேதம் கூறும் சத்தியம். மரித்த புனிதர்கள் அனைவருமே இளைப்பாறுதலில் இருக்கிறார்கள். வெளி.22:12-ன்படி அவரவர்களின் கிரியைகளின்படி கிடைக்கப் போகிற பலனுக்காக அவர்களும் காத்து இருக்கிறார்கள். ரோமர் 1:23-25-ன்படி சிருஷ்டிக்கப்பட்ட ரூபங்களையோ, மரித்த மனிதர்களையோ, மரியாளையோ தொழுது தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாகாதபடிக்கு சிருஷ்டிகரான இயேசுவை மாத்திரமே நாம் தொழுது கொள்ள வேண்டும்.

(நன்றி: கத்தோலிக்க மறுமலர்ச்சி இயக்கத்தின் நவம்பர் / டிசம்பர் மாத இதழில் வெளியான செய்தி).

மரியாள் யார்?

வேதம் கூறும் சத்தியம்

மரியாள் நம்மைப்போல ஒரு பெற்றோருக்கு பிறந்த ஒரு பெண்தான். பரலோகத்திலிருந்து வந்த ஒருவர் அல்ல. ஏனென்றால் பரலோகத்திலிருந்து வந்தவரும், பரலோகத்துக்கு ஏறிச் சென்றவரும் இயேசு கிறிஸ்து ஒருவர் மட்டுமே (யோவான் 3:13). மரியாள் பரிசுத்தமாக வாழ்ந்த ஒருவராக இருந்தபடியால் இயேசு கிறிஸ்துவை அவரது வயிற்றில் பிறக்க தேவன் கிருபை செய்தார். ஆனால் மரியாள் நம்மைப்போல பிறந்து, சகல விதத்திலும் நம்மைப்போலவே வாழ்ந்து, யோசேப்புடன் சேர்ந்து வாழ திருமண நிச்சயமும் செய்யப்பட்டு திருமண நாளுக்காக காத்திருந்தபோதுதான் இயேசுவின் பிறப்பு அவருக்கு அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பைக் கேட்டவுடனே எல்லோரையும் போல மரியாளுக்கு ஒரு கலக்கமும், பயமும் வந்தது. காரணம் திருமணமாகி புருஷனோடு சேர்ந்து கூடி வாழ்வதற்கு முன்பு குழந்தை பெற்றால் அது விபச்சாரமாகக் கருதப்பட்டு அவளைக் கல்லால்

எறிந்து கொல்லப்பட வேண்டும் என்பது அப்போதிருந்த சட்டம், சமூக நீதி. கலங்கி பயந்துபோய் இருந்த மரியாளிடம் "இது பரிசுத்த ஆவியினால் நிகழ்வது. ஆகவே கவலை வேண்டாம்" என்று தேவ தூதனால் தைரியப்படுத்தப்பட்ட பின்பு மரியாள் தேவ திட்டத்திற்கு ஒப்புக் கொடுத்தார். ஒருவேளை உலகத்திற்கு பயந்து இதற்கு சம்மதியாமல் இருந்திருந்தால் கர்த்தர் வேறு யாரையாவது தெரிந்து கொண்டு இருப்பார். இயேசு இப்பூமியில் ஒரு மனிதனாக அவதாரம் எடுக்க ஒரு பரிசுத்தமான கர்ப்பப்பை தேவைப்பட்டது. மரியாள் இல்லை என்றால் தேவன் வேறு ஒருவரை தேர்ந்து எடுத்திருப்பார். தேவனால் கூடாதது ஒன்றுமில்லை. தேவதிட்டம் ஒருபோதும், யாராலும் தடைபடாது.

இயேசுவின் பார்வையில் யார் அவருடைய தாய்?

இயேசு கிறிஸ்து தன்னைப் பெற்றெடுத்த தாயாகிய மரியாளுக்கு தான் சிறு குழந்தையாக இருக்கும்போது அவர் கொடுக்க வேண்டிய மதிப்பு, மரியாதையை கொடுத்திருக்கலாம். ஆனால் மரியாளை அனைவரும் கனப்படுத்த வேண்டும் என்றோ, அவரையே நாம் ஒவ்வொருவரும் ஆராதிக்க வேண்டும் என்றோ கூற விரும்பி இருந்தால் அதற்கு ஒரு சரியான வேளை லூக்கா 11:27-ல் ஒரு ஸ்திரி எழுந்து இயேசுவைப் பார்த்து "உம்மை சுமந்த கர்ப்பமும், நீர் பாலுண்ட முலைகளும் பாக்கியமுள்ளவைகள்" என்று சத்தமிட்டுச் சொன்னாளே, அந்த வேளையில் இயேசு சொல்லியிருக்க முடியும். "ஆமாம், என்னைப் பெற்றெடுத்த தாயாகிய கன்னி மரியாள் ஆசிர்வதிக்கப்பட்டவர். அவரிடம் வேண்டிக் கொள்ளுங்கள். அவரை ஆராதியுங்கள். அவரை கனப்படுத்துங்கள், துதியுங்கள். என்னை ஈன்ற தாயை அண்டிக் கொள்ளுங்கள், அவரைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள். உங்கள் தேவைகள் எல்லாம் அவர் மூலமாக சந்திக்கப்படும்'' என்று சொல்லி இருப்பார். அப்படி அவர் சொல்வதற்கு அது ஒரு சரியான தருணம். ஆனால் இயேசு கிறிஸ்து அந்த சமயத்தில் யாரை அதிக பாக்கியவான்னு சொன்னார் என்று பாருங்கள். "தேவனுடைய

வார்த்தையைக் கேட்டு, அதைக் காத்துக் கொள்ளுகிறவர்களே அதிக பாக்கியவான்கள்'' என்றார்.

மற்றுமொருமுறை இயேசு ஓரிடத்தில் பேசிக்கொண்டு இருக்கும்போது அவருடைய சகோதரரும், மரியாளும் வந்து வெளியே நின்று அவரை அழைக்கும்படி அவரிடத்தில் ஆள் அனுப்பினார்கள். அவரைச் சுற்றிலும் உட்கார்ந்து இருந்து ஜனங்கள் அவரை நோக்கி, "இதோ உம்முடைய தாயாரும். உம்முடைய சகோதரரும் வெளியே நின்று உம்மைத் தேடுகிறார்கள்'' என்றார்கள். அப்போது அவர் அவர்களுக்கு பிரதியுத்தரமாக என்ன சொல்றாரு? "என் தாயார் யார்? என் சகோதரர் யார்?" என்று சொல்லி, அவரைச் சூழ உட்கார்ந்து இருந்தவர்களைப் பார்த்து சொல்கிறார். "இதோ இவர்களே என் தாயும். என் சகோதரர்களும்!'' மேலும் அவர் என்ன சொல்றாரு. "தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ அவனே எனக்கு சகோதரனும், எனக்கு சகோதரியும், எனக்கு தாயுமாய் இருக்கிறார்கள்'' என்றார் (மாற்கு 3:31-35). ஒரு கூட்ட ஜனங்களுக்கு மத்தியில் இயேசு கிறிஸ்து மரியாளையோ அல்லது அவரோடு உடன்பிறந்தவர்களையோ அவர் கண்டுகொள்ளவே இல்லை. அது மாத்திரமல்ல. இவர்கள் என்னுடைய உண்மையான தாய், சகோதரர்கள் அல்ல. என் உண்மையான தாய், சகோதர, சகோதரி யார்?'' என்றும் விளக்கிக் கூறுகிறார். மரியாளை தெய்வமாக கொண்டாடும் என் இனிய கத்தோலிக்க சகோதரரும், சகோதரியும் இயேசு கிறிஸ்து மரியாளை எந்த இடத்தில் வைத்து இருந்தார் என்றும், அதை ஜனங்களுக்கு தெளிவுபடுத்தியும் உள்ளார் என்றும் உணர்ந்து கொண்டு ஆண்டவருக்கு கொடுக்க வேண்டிய கனத்தை அவருக்கு மாத்திரமே கொடுக்க வேண்டும். மற்ற யாருக்கும் அதை பகிர்ந்தளிக்கவோ அல்லது இயேசுவையோ, பிதாவையோ, பரிசுத்த ஆவியையோ இரண்டாம் இடத்திற்கோ, மூன்றாம் இடத்திற்கோ தள்ளி வைக்கக்கூடாது. அது கண்டிப்பாக நமக்கு ஆசீர்வாதமாக இருக்காது.

தாய் இல்லாமல் பிள்ளையா?

பொதுவாக நமது கத்தோலிக்க சகோதரர்கள் சொல்வது - தாய் இல்லாம பிள்ளையா? அதெப்படி மாதா

இல்லாம இயேசு வர முடியும்? கோழி முதல்ல வந்ததா? முட்டை முதல்ல வந்ததா என்று உலகத்தார் சொல்றதுபோல சொல்லுறாங்க. யோவான் 1:1-ஐ வாசிக்கும்போது "அவர் ஆதியிலே வார்த்தையாக இருந்தார். தேவனிடத்தில் இருந்த அந்த வார்த்தை தேவனாக இருந்தது" என்று எழுதப்பட்டுள்ளது. 3-வது வசனத்தில் "சகலமும் அவர் மூலமாகத்தான் இந்த பூமியிலே சிருஷ்டிக்கப்பட்டது" என சொல்லப்பட்டுள்ளது. ஆகவே, இந்த உலகத்தில் மரியாள் உள்பட அனைவருமே இயேசு கிறிஸ்துவின் மூலமாகத்தான் சிருஷ்டிக்கப்பட்டார்கள் என்பதுதான் உண்மை. 10-வது வசனத்தில மீண்டும் "உலகம் எல்லாமே அவர் மூலமாகத்தான் உண்டானது" என்று எழுதப்பட்டுள்ளது. 14-வது வசனத்தில "ஆதியில் இருந்த அந்த வார்த்தைதான் மாம்சமாகி, கிருபையினாலும். சத்தியத்தினாலும் நிறைந்தவராகி நமக்குள்ளே வாசம் பண்ணினார்" என்று தெளிவாக எழுதப்பட்டுள்ளது. இதைத்தான் தேவ ரகசியம் என்ற தலைப்பில் "வார்த்தையானது மாமிசமாகி நம்முடனே வாசமாய் இருந்தது" என நம் கத்தோலிக்கர்கள் ஜெபத்தில் கூறுகிறார்கள். இதன் அர்த்தம் என்ன என்று உணர்ந்து அறிந்து சொன்னால் மேலே உள்ள பிரச்சனை வர்றதுக்கு வாய்ப்பே இல்லை. மேலும் நமது விசுவாசப் பிரமாணத்திலும் அவரே ஜெனித்தவர், உண்டாக்கப்பட்டவர் அல்ல. பிதாவோடு ஒரே பொருளானவர் என்று சொல்றோமே. இதோட அர்த்தத்தை புரிஞ்சுக்கிட்டா இந்த பிரச்சனைக்கு தீர்வு கண்டிருக்கலாம். மாறாக நாம சொல்ற வார்த்தையே என்னன்னு தெரியாம சொல்றதுனாலதான் இப்படிப்பட்ட குழப்பங்கள் நம்ம மத்தியில வருது. இயேசு ஆதியிலேயே இருக்கிற தேவன். பிதாவோடு அவர் ஒரே பொருளானவர். அவரை யாருமே உண்டாக்க முடியாது. ஆறு கட்டளைகளில் ஒன்று "சர்வேஸ்வரன்" தாமாகவே இருக்கிறார் (Self existent) என்பதுதான். இரண்டாவது அவர் துவக்கமும், முடிவும் இல்லாம இருக்கிறார் னு சொல்றோமே. அவர்தான் இவர். எனவே, பாதியில வந்த மரியாள் இல்லாம இயேசு இல்லை என்றால் நம் தேவனோட மீட்புத் திட்டமும் வேதமும் பயன் அற்றதாகப் போயிடும். மேலும் தேவனை

ஒரு சாதாரண மனித நிலைக்கு தள்ளும் குற்றத்துக்கு நாம ஆளாவோம்.

யோ.1:15-ல யோவான் அவரைக் குறிச்சு சொல்லும்போது "அவர் எனக்கு பின் வந்தாலும் அவர் எனக்கு முன் இருந்தவர்" என்று சொல்கிறார். யோ.8:58-ல யூதர்களிடத்தில் இயேசு "நான் ஆபிரகாம் உண்டாகிறதுக்கும் முன்னமே இருக்கிறேன் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்" என்று சொல்வதின் அர்த்தம் என்ன? ஆபிரகாமில்தானே அந்த இஸ்ரவேலின் சந்ததி தெரிந்து கொள்ளப்பட்டது. அந்த இஸ்ரவேல் சந்ததியில்தானே மரியாள் பிறக்கிறார்? அந்த இஸ்ரவேல் சந்ததியை தெரிந்து கொண்டவர் அவர்தானே? அவர் ஆதியிலேயே இருக்கிற தேவனல்லவா? மரியாள் இல்லாமல் இயேசு இல்லை என்றால் அது இயேசுவின் தேவத்துவத்தை மறுதலிக்கின்ற ஒரு செயல் அல்லவா? நாம் சொல்லும் விசுவாசப் பிரமாணத்தை நினைத்தாவது இதை நிறுத்திக் கொண்டால் நலமாக இருக்கும்.

மேரி ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு ஸ்திரிதான். ஆனால்...

சென்ட்டிமெண்ட்ஸ் பார்க்காதீங்க. தாய் இல்லாமலா புள்ளை வந்தாரு? மேரி இல்லாமலா இயேசு பிறந்தாருன்னு எல்லாம் வாதம் பண்ணாதீங்க. மண்ணிலிருந்து மனிதனை உண்டாக்கிய கர்த்தருக்கு, ஆதாமின் விலா எலும்பிலிருந்து ஒரு ஏவாளை உண்டாக்கிய தேவனுக்கு, ஒரே ஒரு வார்த்தையால இந்த பிரபஞ்சத்தையும், கோள்களையும், சகல ஜீவ ராசிகளையும் படைத்த யகோவா தேவனுக்கு மேரி இல்லாமலே இயேசுவை பிறக்க வைத்திருக்க முடியாதா? முடியும். அவரால் எல்லாம் முடியும். அவரால் கூடாதது ஒன்றுமே இல்லை. நம்மைப்போல் ஒரு ஸ்திரியில் பிறந்தும் இயேசுவால் பாவமில்லாமல் வாழ முடியும்னு காட்டுவதற்கும், "ஸ்திரியின் வித்துக்கும், உனக்கும் பகை உண்டாக்குவேன்"னு சொன்ன தீர்க்கதரிசனம் நிறைவேறுவதற்காகவும், ஆண்டவர் மேரியைத் தெரிந்து கொண்டார். மேரி இல்லைன்னா இன்னொரு யூத ஸ்திரி. தாவீதின் வம்சத்தில் ஆளா இல்லை? எத்தனையோ

பேர் கிடைச்சிருப்பாங்க. மேரி பாக்கியம் பெற்றவர். அதுனால தான் "ஸ்திரிகளுக்குள்ளேயே ஆசீர்வதிக்கப்பட்ட ஒரு ஸ்திரியாக" ஆண்டவர் அவரைத் தெரிந்து கொண்டார். இயேசு கிறிஸ்து இப்பூமியில் மனித அவதாரம் எடுப்பதற்கு ஒரு கருவியாக பிதா மேரியைத் தெரிந்து கொண்டார். அவ்வளவே. வேற எந்த மகிமையையும் பிதாவும் மேரிக்கு கொடுக்கலை, இயேசு கிறிஸ்துவும் கொடுக்கலை. வேதாகமத்தை படிச்சுப் பார்க்கும் போது அது தெள்ளத்தெளிவாக தெரிகிறது.

மரியாள் இயேசு கிறிஸ்துவின் தாயா? அல்லது தேவதாயா?

ரோமன் கத்தோலிக்க சபையினர் மரியாளே தேவதாய் அதாவது தேவனுடைய தாய் என்று அழைக்கின்றனர். மரியாள் தேவனுடைய தாயா? அல்லது இயேசுவின் தாயா? என்று தெரிந்து கொள்ள வேண்டியது மிக முக்கியமான ஒன்றாகும்.

முதலாவதாக இயேசு யார் என்று பார்க்கும்போது யோ. 1:1-3 வசனம் "வார்த்தையாகிய தேவன் ஆதியிலே இருக்கிறவர். உலகம் முழுவதும் அவர் மூலமாகவே உண்டாகின" என்று கூறுகிறது. இதன் மூலம் அவர்தான் சிருஷ்டிகர் என்பது தெளிவாகிறது. மரியாளும், நாம் அனைவருமே அவர் மூலமாக சிருஷ்டிக்கப்பட்டவர்கள்தான். அடுத்து கத்தோலிக்க சபையில் ஆறு லட்சணங்கள் என்ற கட்டளையில் (1) தேவன் தாமாக இருக்கிறார், (2) தேவன் துவக்கமும், முடிவும் இல்லாமல் இருக்கிறார். உலகத்தில் உள்ள அனைத்திற்குமே ஒரு துவக்கமும் உண்டு, முடிவும் உண்டு. ஆனால் இயேசுவுக்கோ துவக்கமும் இல்லை, முடிவும் இல்லை. அவர் ஆதி அந்தம் இல்லாதவர். (3) நமது கத்தோலிக்க விசுவாச பிரமாணத்தில் அவர் ஜெனித்தவர், உண்டாக்கப்பட்டவர் அல்ல. பிதாவோடு ஒரே பொருளானவர் என்று சொல்வதிலிருந்து அவர் ஜெனித்தவர், யாரும் அவரை உண்டாக்க முடியாது என்பது உறுதியாகிறது. யோ.1:14-ன்படி "ஆதியிலே இருந்த வார்த்தைதான் மாமிசத்தில் இயேசுவாக உருவானவர் என்பது தெளிவு. அதாவது "வார்த்தையானது மாமிசமாகி நம்முடனேகூட

வாசமாய் இருந்தது" என்று இன்று நம்மோட ஜெபங்களில் சொல்வதோட அர்த்தம் இதுதான்.

கி.பி.428-லே அனஜ்தாசியஸ் என்ற குரு வெளிப் படையாக, தைரியமாக மரியாள் தேவனுடைய தாய் அல்ல (Not mother of God - theotokos) மாறாக இயேசுவின் தாய் மரியாள் (Mother of Christ - Kristotokos) என்று கூறினார். இதே கருத்தை கான்ஸ்டான்டிநோபிளின் தலைமை குருவாக இருந்த நெஸ்டோரியஸ் வலியுறுத்தி, எதிர்ப்பு தெரிவித்தார். தலைமை குழு இதைப்பற்றி கூறும்போது "மாமிசத்தில் வந்த இயேசுதான் சிலுவையில் மரித்தாரே ஒழிய, வார்த்தையாகிய தேவன் மரிக்கவில்லை" என்று கூறி வார்த்தையாகிய தேவனையும், மாமிசத்தில் வந்த தேவனையும் அவர் வேறு பிரித்துக் காட்டினார்.

வேதத்தில் எங்குமே "தேவனுடைய தாய் மரியாள்" என்று காணப்படவில்லை. மாறாக இயேசுவின் தாய் மரியாள் என்றே அநேக இடங்களில் காணப்படுகிறது. மத்.1:18, 2:11, 13, 14, 20, 21, 12:46, 47, மாற்கு 3:31, 32, லூக்.2:34, 8:19, 20, யோவான் 2:1, 3, 12, 6:42, 19:26 இன்னும் எத்தனையோ இடங்களில் தெளிவாகக் கூறப்பட்டு இருக்கிறது. கடைசியில் சிலுவையில் தொங்கும்போது மரியாளை "பெண்ணே" என்றுதான் அழைக்கிறார். எலிசபெத் ஒரே ஒரு இடத்தில் (லூக்.1:43)-ல் மரியாளை என் ஆண்டவருடைய தாயார் என்று அழைக்கிறார். ஆண்டவர் என்றால் இரட்சகர் என்றுதான் அர்த்தம் என்பதை இங்கு தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

இயேசு மனிதனாக அவதாரம் எடுத்தாலும், மனிதனுக்கு அப்பாற்பட்டவராகவே அவர் இருக்கிறார். ஏனெனில் அவர் தேவனாகவும் இருக்கிறார். மூவொரு தேவனுக்குள் அவரும் ஒருவர். பிதா, குமாரன் பரிசுத்த ஆவி மூவரும் ஒருவரே. தண்ணீர் இருக்கிறது. அதையே ஃபிரிஜ்ல வச்சீங்கன்னா அது ஐஸ் கட்டியா ஆகிடுது. அந்த தண்ணியையே அடுப்பில ஒரு பாத்திரத்தில ஊத்தி கொதிக்க வச்சீங்கன்னா அது வற்றி ஆவியாகிடுது. தண்ணீ, ஐஸ் கட்டி, ஆவி எல்லாமுமே

ஒண்ணுதான். என்னையே எடுத்துக்கொள்ளுங்கள். நான் என் தாய், தகப்பனுக்கு மகன், என் மனைவிக்கு கணவன், எனது புள்ளைகளுக்கு நான் தகப்பன். நானே புள்ளையாகவும், கணவனாகவும், தகப்பனாகவும் இருக்கேன். நான் மூணு ஆள் இல்லையே. ஒருவன்தானே. அதேபோலதான் இதுவும். யோ.1:3-ன்படி அனைத்துமே அவர் மூலமாகத்தான் சிருஷ்டிக்கப் பட்டது என்பதுவும் உண்மை. மரியாள் உட்பட நாம் அனைவருமே சிருஷ்டிக்கப்பட்டவர்கள் என்பதுவும் உண்மையிலும் உண்மை. அவருக்கு துவக்கமும் இல்லை. முடிவும் இல்லை. அவர் இருக்கிறவராகவே என்றென்றைக்கும் சதா காலங்களிலும் இருக்கிறவர்.

வானத்தில் இருக்கிற அவர் நமது மீட்புக்காக வானத்திலிருந்து இறங்கி வந்தவர். எனவே, அவரைப் பெற்றெடுக்க ஒரு தாயோ அல்லது ஒரு தகப்பனோ தேவையில்லை. அவர் மனுஷ ரூபமெடுக்க ஒரு கருவியாக மரியாள் தேவைப்பட்டார்கள். பிதாவாகிய தேவனுக்கு மரியாள் தாய் அல்ல. பரிசுத்த ஆவியான தேவனுக்கு மரியாள் தாய் அல்ல. அதுபோல குமாரனாகிய தேவனுக்கும் மரியாள் தாய் அல்ல. தேவன் மனிதனை உண்டாக்கினாரே ஒழிய, மனிதன் தேவனை உண்டாக்க முடியாது. அதேபோல மனுஷன் தேவனை பெற்றெடுக்கவும் முடியாது. மனுஷன் எந்தக் காலத்திலேயும் தெய்வமாக முடியாது. எனவே, மரியாள் தேவனைப் பெற்றெடுத்த தாய் அல்ல. மாம்சத்தில் வந்த இயேசுவை பெற்றெடுத்த தாய்தான் மரியாள் என்பதே வேதம் கூறும் சத்தியம். இதை நம் கத்தோலிக்க சகோதர, சகோதரிகளும், திருச்சபைகளும் புரிந்து கொள்ள வேண்டும்.

ரோமன் கத்தோலிக்க திருச்சபை மரியாள் கடவுளின் தாயார் (கடவுளுக்கே தாய்) என்று முழக்கமிடுகிறது. ஆனால் வேதம் தெளிவாகக் கூறுகிறது: "மரியாள் இயேசு கிறிஸ்துவின் தாய் அதாவது இயேசு இந்த உலகில் மனித அவதாரம் எடுத்துவர தேவன் பயன்படுத்திய ஒரு கருவி மட்டுமே" என்று. மரியாள் கடவுளின் தாயார் என்று வேத வாக்கியங்களில் எங்கேயுமே காண முடியாது. மரியாள்

கடவுளோட தாயாராக, கடவுளையே பெற்றெடுத்த தாயாக இருக்கணும்னா, அவர் இந்த உலகத் தோற்றத்திற்கு முன்பே இருந்திருக்க வேணுமே. வேதம் கத்தோலிக்கர்களின் இந்த கருத்தை ஆதரிக்கும் விதமாகவோ, சப்போர்ட் பண்ணும் விதமாகவோ எங்கும் வேதத்தில் காண முடியாது. மரியாள் கடவுளின் தாயாராக இருக்கணும்னா, மரியாளோட தாயான ஆனி கடவுளின் பாட்டியாக இருந்திருக்கணும். மரியாளின் கசின் எலிசபெத் கடவுளோட அத்தையாக இருந்திருக்கணும். ஆனா ரோமன் கத்தோலிக்க திருச்சபை இந்த மற்றவர்களை ஏற்றுக் கொள்வதில்லை. சிருஷ்டிக்கப்பட்ட ஒரு மனுஷி எப்படி சிருஷ்டிகரின் தாயாக இருக்க முடியும்? எதையும் சொல்வதற்கு முன்பு இவர்கள் சற்று தீர ஆலோசித்து, வேத ஆதாரங்களோட கூற வேண்டாமா? உலகம் முழுக்க எத்தனை கோடிக்கணக்கான மக்களுக்கு கத்தோலிக்கம் ஒரு தவறான, வேதத்திற்குப் புறம்பான சத்தியத்தை அறிமுகப்படுத்துகிறது என்பதை சற்றேனும் யோசித்துப் பார்த்துச் செய்ய வேண்டாமா? சும்மாவே நம் வேதத்தையும், நம் தேவனையும் புறஜாதி மக்கள் கரிச்சுக் கொட்றாங்க. வெறும் வாயை மெல்றவங்களுக்கு அவல் கொடுத்த கதையா ஒரு தவறான உபதேசத்தை நாம சொன்னா அது நமது கத்தோலிக்கத்திற்கு பெருமை சேர்ப்பதாகவா இருக்கிறது? இல்லையே.

மரியாள் கன்னியாகவே வாழ்ந்தாரா?

ரோம கத்தோலிக்க நண்பர்கள் இயேசுவின் தாயாகிய மரியாளை நாங்கள் வணங்கி ஆராதிப்பது இல்லை. மாறாக பெருமதிப்பு மட்டும்தான் (Veneration) கொடுக்கிறோம் என்று சொல்வதை கேட்டிருக்கிறோம். மேலும் மரியாள் எப்போதும் கன்னியாகவே வாழ்ந்தார் என்று கத்தோலிக்க பாரம்பரியம் கூறுகிறது. (Calechism of the Catholic Church, P.No.193, 969, 970, 971). ஆனால் வேதாகமம் கூறும் சத்தியம் என்ன என்று பார்ப்போமா?

மத்.1:25 கூறுகிறது. *"மரியாள் தன் மகனை (இயேசுவை) பெற்றெடுக்கும் வரை யோசேப்பு அவரோடு கூடி வாழவில்லை"*

என்று. "வரை" என்ற வார்த்தை இயேசு பிறந்த பிறகு, யோசேப்பும், மரியாளும் திருமணம் செய்துகொண்டு தம்பதிகளாக இல்லற வாழ்வில் இணைந்து வாழ்ந்தார்கள் என்கிற உண்மையையே பறைசாற்றுகிறது. மேலும் இயேசுவுக்கு சகோதரர்களும், சகோதரிகளும் இருந்தார்கள் என்று பரிசுத்த வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது. மத்.12:24-ல் அவரோட தாயும், சகோதரர்களும் வந்து அவருடன் பேச வேண்டும் என்று வெளியே நின்று கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒருவர் இயேசுவை நோக்கி "அதோ உம் தாயும், சகோதரர்களும் உம்மோடு பேச வேண்டும் என்று வெளியே நின்று கொண்டிருக்கிறார்கள்" என்றார். மரியாள் கன்னியாகவே இருந்திருந்தால் எப்படி இயேசுவுக்கு சகோதர, சகோதரிகள் பிறந்திருப்பார்கள் ?

இதை உறுதிப்படுத்தும் விதமாக மாற்கு 6:3-ல "இவர் தச்சர் அல்லவா? மரியாளின் மகன்தானே? யாக்கோபு, யோசேப், யூதா, சீமோன் ஆகியோர் இவருடைய சகோதரர்கள் அல்லவா? இவருடைய சகோதரிகள் நம்மோடு இருக்கிறார்கள் அல்லவா" என்றார்கள் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இதன் மூலம் இவர்கள் அனைவருமே மரியாளின் மூலமாக பிறந்த இயேசுவின் உடன்பிறந்த சகோதரர்கள் என்பது தெளிவாகிறது. மேலும் பவுல் கலா.1:19-ல், "ஆண்டவரின் சகோதரனான யாக்கோபைத் தவிர திருத்தூதருள் வேறு எவரையும் நான் போய் பார்க்கவில்லை" என்று குறிப்பாக இயேசுவின் சகோதரர் என்று எழுதியிருப்பதையும் நாம் மறுக்க முடியாது.

மேற்கூறியவைகள் மூலமாக தெரிவது என்ன ? மரியாள் கன்னியாக இருக்கும்போது இயேசுவை பெற்றெடுத்தார் என்றும், இயேசு பிறக்கும் வரை மரியாள் யோசேப்புடன் கூடி வாழாமல் கன்னியாகவே இருந்தார் என்றும், அதன் பின்பு யோசேப்புடன் கூடி வாழ்ந்து புள்ளைகளை பெற்றுள்ளார் என்பதுவும் மிகவும் தெளிவாகிறது. அப்படி இருக்கும்போது மரியாளை "கன்னி மரியாள்" (Virgin Mary) என்று சொல்வது பொருந்துமா ? கடைசிவரை, மரண பரியந்தம் திருமணம் செய்து கொள்ளாமல், பிள்ளைகள் பெறாமல், கன்னியாக

வாழ்ந்தால் அவரை "கன்னி மரியாள்" என்றும், "Virgin Mary" என்றும் சொல்வதும் சாலப்பொருந்தும். இயேசுவைப் பெற்றெடுக்கும் வரை அவர் கன்னியாகவே இருந்தார் என்பது மறுக்க முடியாத உண்மை. அதற்காக அவரை எப்போதும் கன்னி மரியாள் என்று கூறுவது பொருந்துமா? சரியா? சற்றே யோசித்துப் பாருங்கள்.

மத்.1:25-ல் அவள் முதற்பேறான குமாரனைப் "பெறுமளவும், அவளை அறியாதிருந்து" என்று எழுதப்பட்டுள்ளது. இதற்கு அர்த்தம் என்ன? நான் ஒரு இடத்திற்கு நேற்றுவரை போகவில்லை என்றால் இன்னிக்கு போயிருக்கலாம் என்று தானே அர்த்தம். என் வாழ்நாட்கள் முழுவதும் அந்த இடத்துக்கு போனதே இல்லை என்று அர்த்தம் கொள்ள முடியாதே. அதுபோல "முதற்பேறான குமாரனைப் பெற்றெடுக்கும் வரை" என்றால் பெற்றெடுக்கும் வரை எந்த உறவும் வைத்துக் கொள்ளவில்லை என்றுதான் அர்த்தம். அதன்பிறகு உறவு வைத்துக் கொண்டார்கள் என்றுதான் அர்த்தம். அதன்பிறகு யோசேப்பு மரியாளை அறியவே இல்லை என்று எழுதப்பட்டு இருந்தால் மரியாள் என்றென்றும் கன்னிகை என்பதை ஏற்றுக் கொள்ள முடியும்.

அடுத்து மத்.1:25-லே "முதற்பேறான குமாரன்" என்று எழுதப்பட்டுள்ளது. இதுக்கு என்ன அர்த்தம்? நான் எனது குடும்பத்தில் முதற்பேறான குமாரன் என்றால் என் வீட்டில் நான் முதலில் பிறந்த மூத்த பையன் என்றுதான் அர்த்தம். அதற்குப் பிறகு மற்றவர்கள் உண்டு என்றுதான் அர்த்தம். நான் என் குடும்பத்தில் ஒரே குமாரன் என்றால் அதன் பிறகு வேறு யாரும் இல்லை என்று சொல்லலாம். ஒருவேளை லூக்.8:41, 98:38-ல சொல்லப்பட்டுள்ளது போல ஒரே குமாரத்தி, ஒரே குமாரன் என்று எழுதப்பட்டு இருப்பதுபோல, ஒரே குமாரன் என்று எழுதப்பட்டு இருந்தாலும், அவர்கள் சொல்றபடி சரியானதாக இருந்திருக்கும். மாறாக மத்.1:25, லூக்.2:7 என எல்லா இடத்திலேயும் முதற்பேறான குமாரர் என்றுதான் சொல்லப்பட்டு இருக்கு. தேவனுக்கு மட்டும் "அவர் ஒரே பேறான குமாரன்" என்று யோ.3:16-ல் எழுதப்பட்டு இருக்கு. மத். 13:55, 56,

மாற்கு 6:3, மத். 12:46, மாற்.3:31-32, லூக். 8:19-20, யோ.2:12, 1 கொரி. 9:5, யூதா 1:1, அப். 1:14 என்று இப்படி பல வசனங்களில் இயேசுவுக்கு மரியாள் மூலம் பிறந்த சகோதர, சகோதரிகள் இருந்தார்கள் என தெள்ளத் தெளிவாக செல்லப் பட்டு இருக்கிறது.

யோ.19:25-27-ல் இயேசு மரியாளை யோவானிடத்தில் ஒப்புக் கொடுத்தாரே. அவருக்கு சகோதர சகோதரிகள் இருந்தால் ஏன் மரியாளை யோவானிடத்தில் ஒப்படைக்கணும் என்று சிலர் கூறுவதும் உண்டு. இயேசுவின் சகோதர. சகோதரிகள் கடைசிவரை அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. யோ.7:3-5-ஐப் பாருங்கள். அவருடைய சகோதரர்கள் அவரை விசுவாசியாமல் யூத குருக்களைப் போல அவரை எதிர்ப்பதைப் பார்க்கிறோம். அவருடைய குடும்பத்தில் அவரை கடைசிவரை பின்பற்றியவர் மரியாள் மட்டுமே. எனவேதான் இயேசு மரியாளை அவரது சீஷரான யோவானிடத்தில் ஒப்புக் கொடுத்தார். இயேசு மரித்து உயிர்த்தெழுந்த பிறகுதான் அவரது சகோதரர்கள் அவரை விசுவாசித்து, யாக்கோபு கி.பி.62-ல் எருசலேமில் இரத்த சாட்சியாக மரித்தான் என்பது வரலாற்று உண்மை.

அடுத்து கத்தோலிக்கச் சபையார் கூறும்போது, சகோதர, சகோதரிகள் என்று கூறப்பட்ட இடங்களில் Adelphos என்ற கிரேக்க வார்த்தை பயன்படுத்தியுள்ளது என்றும், இது சித்தப்பா, பெரியப்பா பிள்ளைகளையும் குறிக்கும் என்றும், அதுபோல ஏன் இருக்கக்கூடாது என்றும் சிலர் கூறுகின்றனர். ‘‘உம்முடைய சகோதர, சகோதரிகள்’’ என்றே வேதத்தில் எல்லா இடங்களிலும் தெளிவாக் சொல்லப்பட்டு இருக்கிறது. மாற்கு 6:2-3-ல் ‘‘*யாக்கோபு, யோசே, சீமோன் என்பவர்களுக்கு சகோதரன் அல்லவா இவன். இவன் சகோதரிகளும் நம்மிடத்தில் இருக்கிறார்களே என்று சொல்லப்பட்டு இருக்கிறது*’’.. சித்தப்பா, பெரியப்பா பிள்ளைகளை இங்கே குறிப்பிட்டு சொல்வதற்கு சாத்தியமே இல்லை.

மரியாளை கன்னி மரியாள்னு இவங்க சொல்றதுக்கு இன்னொரு முக்கியமான காரணம் ரோமன் கத்தோலிக்க

மார்க்கத்தில் கணவன், மனைவி என்ற தாம்பத்ய உறவு வாழ்க்கையே பரிசுத்தக் குறைச்சல் என்ற தவறான கண்ணோட்டம் இருக்கிறதுனால இப்படிக் கூறுகின்றனர். இப்படிப்பட்ட தவறான எண்ணத்தினாலேயே ஊழியம் செய்கிறவர்களும் திருமணம் செய்யக்கூடாது என்ற தவறான கொள்கைகள் உள்ளது. 1 தீமோ. 2:15-ல் தேவன் கணவன், மனைவி உறவை அங்கீகரித்து பரிசுத்தப்படுத்தியிருக்கிறாரே. ஆயர்கள் அநேக நூற்றாண்டுகளாக திருமணம் செய்தவர்கள் தான் என்பது மறுக்க இயலாத வரலாற்று உண்மை. ஊழியத்தை செய்கின்றவர்கள் திருமணம் செய்து கொள்ளாமல் அன்னகர்களாகவே இருக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தமானால் இயேசு கிறிஸ்து திருமணம் ஆகாதவர்களை மாத்திரமே ஊழியத்திற்கு அழைத்திருப்பார். ஆனால் திருமணம் ஆனவர்களைத்தானே அப்போஸ்தலர்களாக தெரிந்து கொண்டார். இல்லையா? தேவசித்தத்தையே நாம் நிறைவேற்ற வேண்டும். நமது மண்டை அறிவில் தேவனுக்கு இது பிடிக்கும் என்று எண்ணி தேவன் விரும்பாததை செய்யக்கூடாது.

மரியாள் பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப் பட்டாரா?

மரியாள் அவருடைய மகன் இயேசு கிறிஸ்துவைப் போல மரணத்தை வென்று, ஆவி, ஆத்தும சரீரத்தோடு பரத்தினுடைய மகிமைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு தேவலோக இராணியாக அவரின் வலது பாரிசத்தில் அமர்ந்திருக்கிறார் என கத்தோலிக்க திருச்சபை கூறுகிறது.

The Christian Faith No.713-™ "Like her son before her, to conquer death and to be raised body and soul to the glory of heaven, to shine refulgent as queen at the right hand of her son" என்று போப் 12-ம் பத்திநாதர் எழுதியுள்ளார்.

மரியாள் அரசியா?

இயேசு பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு பிதாவின் வலது பக்கம் வீற்றிருக்கிறார் என்றால் (ரோமர்

8:34) மரியாள் இயேசுவின் வலதுபக்கம் இருந்து நமக்காக பரிந்து பேசுகிறார் என்றும்; இயேசு இராஜா என்றால் மரியாள் ராஜாத்தி என்றும் கூறுவதிலிருந்து இயேசுவுக்கு இணையாக இப்படி அநேக காரியங்கள் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பது தெளிவாகிறது. இது இயேசுவின் மையத்தையே கேள்விக்குறியாக்கிவிட்டது. இப்படி வரம்பு மீறிப் போனதால்தான் திருச்சபை இரண்டாம் வாட்டிகன் சங்கத்திற்கு முன்னதாகவே அநேகப் பிரகடனங்கள் கைவிடப்பட்டதாக திருச்சபை கூறுகிறது.

திருச்சி இறையியல் கல்லூரியில் இறையியல் விரிவுரையாளராக பணிபுரியும் கோட்டாறு மறை மாவட்டத்தைச் சேர்ந்த தந்தை அல்போன்ஸ் அவர்கள் தோழன் என்ற பத்திரிக்கையில் எழுதிய கட்டுரையின் ஒரு பகுதியை கீழே தருகிறேன். வாசித்துப் பாருங்கள்.

“இயேசு அரசன்” என்றால் “மரியாள் அரசி”, இயேசு இறைவனுக்கும், மனிதனுக்கும் இடைநிலையாளர் என்றால், மரியாள் இயேசுவுக்கும், மனிதனுக்கும் இடைநிலை ஆள். எல்லா வரங்களுக்கும் மத்தியஸ்தி. இயேசு வழிதான் இறைவன் என்றால், மரியாள் வழிதான் இயேசுவிடம். இயேசு இரட்சகர் என்றால், மரியாள் துணை இரட்சகி. இயேசு பாவமற்றவர் என்றால், மரியாள் ஜென்ம பாவம்கூட இல்லாதவர். இயேசுவுக்கு ஆரோகணம் என்றால், மாரியாளுக்கு ஆரோபணம். இப்படி மெல்ல, மெல்ல மரியாள் ஒரு பாபிலோன் தேவதை நிலைக்கு உயர்த்தப்பட்டார். முற்காலத்தில் அவை திருமறைப் புற நூல்கள் புனைந்து காட்டிய மரியாள் புராணங்கள். சுற்றியிருந்த ஏனைய சமயங்களில் நிலவிய பெண் தெய்வ வழிபாடுகள் போன்றவற்றின் ஆழ்ந்த பாதிப்பில் உருவாகியவைகள். இடைக்காலத்தில் மக்களது அறியாமையினால் எழுந்த மூட நம்பிக்கைகளின் வெளிப்பாடுகள் அவைகள். இவைகள் காட்சிகளையும், கற்பனைகளையும் அடிப்படையாகக் கொண்டு அதிகம் வெளிவந்து இயேசு கிறிஸ்துவின் மைய இடத்தையே மங்க வைக்கும் அளவுக்கு வரம்பு மீறி அவைகள் வளர்ந்து விட்டன. ஐரோப்பிய இறையியலாளர்கள் எதிர்ப்பைத்

தெரிவித்தனர். ஆனால் இரண்டாம் வாட்டிகன் சங்கமோ மேற்சொன்ன அனைத்திலிருந்தும் வேறுபட்டு விவிலியம் காட்டும் மரியாள் ஒரு வானகப் பெண்ணோ, வெறும் வணக்கத்திற்குரிய பெண்ணோ அல்ல. மாறாக மரியாள் ஒரு ஒப்பற்ற விசுவாசி, இயேசுவின் தலையாய சீடத்தி'' என்றே விளக்கியுள்ளார்கள்.

ஒருபுறம் மேற்கண்டபடி சொல்கின்றனர். அதே சமயம் கத்தோலிக்க திருச்சபையோ வெளி.12-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ள ஸ்திரி மரியாள்தான் என்றும், சூரிய, சந்திரன் மற்றும் 12 விண்மீன்களை அதாவது நட்சத்திரங்களை அணிந்தவர் என்றும் கூறுகிறது. ஆனால் வேதத்தில் சொல்லப்பட்டுள்ள ஸ்திரி இஸ்ரவேலைக் குறிக்கிறது என்பதை வேதத்தை கூர்ந்து வாசித்தால் தெளிவாகப் புரிந்துகொள்ளலாம் (ரோமர் 9:5, ஆத 37:9-11). 12 நட்சத்திரங்கள் இஸ்ரவேலின் 12 கோத்திரங்களைக் குறிக்கிறது. மேலும் ஆதி 3:15-ல் உன் வித்திற்கும், அவள் வித்திற்கும் பகையை உண்டாக்குவோம். அவள் உன் தலையை நசுக்குவாள் என்று மரியாள் நசுக்குவதாக மொழி பெயர்த்திருக்கின்றனர். அதுபோல மரியாள் பாம்பின் தலையை நசுக்குவது போலவும், மரியாள் 12 விண்மீன்களை அணிந்தவர் போலவும், அநேகம் சிலைகள், படங்களை உருவாக்கி வெளியிட்டுள்ளனர். எதிர்ப்புகள் வலுக்கவே, தங்கள் தவறை உணர்ந்து புது மொழி பெயர்ப்பில் அவள் வித்து பாம்பின் தலையை நசுக்கும் என்று மாற்றம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் பாம்பை நசுக்குவதுபோல வடிவமைக்கப்பட்ட சிலைகள் அகற்றப்படவில்லை. படங்களும் அகற்றப்படவில்லை. அவர்கள் சொல்வது ஒன்று. செய்வது ஒன்றாக இருக்கிறது.

இயேசு கல்வாரி சிலுவையிலே தொங்கும்போது மரியாளைப் பார்த்து ''ஸ்திரியே'' என்று அழைத்து, யோவானி-டத்தில் ஒப்புக் கொடுக்கிறார். உதாரணமாக என்னோட தாய், தகப்பனாரின் கடைசிக் காலத்தைக் குறிச்சும், அவங்களோட மரணத்தைக் குறிச்சும் எனக்குத்தான் தெரியும். அதேபோல மரியாளை யோவானிடத்தில் ஒப்புக் கொடுத்தால், மரியாளோட கடைசிக் காலத்தைக் குறிச்சும், மரியாளின் மரணத்தைக்

குறிச்சும் யோவானுக்குத்தான் தெரிஞ்சிக்கணும். மரியாள் பரலோகத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள் என்றால், அது ஒரு மிக முக்கியமான பெரிய காரியமாக இருப்பதால், இதை யோவான் கண்டிப்பா எழுதாமல் இருந்திள்ளளருக்க மாட்டார். ஆனால் அப்போஸ்தலர்களில் அதிகமாக எழுதியவர் யோவான்தான். நற்செய்தி, கடிதங்கள், வெளிப்படுத்தின விசேஷம் என்று அநேகம் எழுதிய யோவான் இதுபற்றி எங்கயுமே எழுதலை. அப்படி ஏதேனும் உண்மையிலேயே நடந்திருந்தா, யோவான் கண்டிப்பாக இது குறித்து எழுதி இருப்பார். ஆனா எதுவுமே எங்கயுமே எழுதவில்லை.

இதுலேந்து என்ன தெரியுது? மரியாள் பரத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவோ, பரமேறிப் போகவோ இல்லை என்பதுதான். மாறாக அதே யோவான் யோ.3:13-லிலே "பரத்திலிருந்து இறங்கியவரும் பரத்திற்கு ஏறினவருமான இயேசுவை அல்லாமல் வேறு யாரும் பரலோகத்துக்கு செல்லவில்லை என்று தெளிவாக எழுதியுள்ளார். இந்த வசனத்தின்படி யாரும் பரலோகத்துக்கு செல்லவில்லை" என்று தெளிவாக எழுதி யுள்ளார். இந்த வசனத்தின்படி யாரும் பரலோகத்துக்கு செல்லவில்லை என்பதுதான் உண்மை. மேலும் யோ.14:2, 3-ன்படி பரலோகம் ஆயத்தப்படுத்தின பிறகு மீண்டும் வந்து நம்மை அழைத்துச் செல்வார் என்றே வேதம் கூறுகிறது. லூக்கா 23:43 வசனத்தின்படி தன்னோடு சிலுவையில் அறையப்பட்ட கள்ளன் மனம் திருந்திக் கேட்கும்போது, "இன்றைக்கு நீ என்னுடன் பரதேசில் இருப்பாய்" என்று தான் இயேசு சொன்னாரே ஒழிய பரலோகத்தில் இருப்பாய் என்று சொல்லவில்லை. எனவே, பரலோகம் என்பது இன்னும் ஆயத்த நிலையில்தான் இருக்கிறது. இதுவரை இயேசுவைத்தவிர வேறு எவரும் பரலோகத்துக்கு சென்றது இல்லை என்பதுதான் வேதம் கூறும் உண்மை.

ஏனோக்கும், எலியாவும் எடுத்துக் கொள்ளப் பட்டதாக எழுதப்பட்டு இருக்கிறது. அதேபோல் மரியாளும் எடுத்துக் கொள்ளப்பட்டு இருக்கக்கூடாதா? என்று கேட்கலாம். இந்த இருவரும் எடுத்துக் கொள்ளப்பட்டதற்கு ஆதாரம்

வேதத்தில் இருக்கிறது. மேலும் இவர்கள் பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை. மேலும், 1 கொரி.15:40-50-ல் மண்ணுக்குரிய சரீரம் வேறு. விண்ணுக்குரிய சரீரம் வேறு என்று எழுதப்பட்டுள்ளது. இந்த மாம்சமும், இரத்தமும் உள்ள உடம்பில் நித்ய ஜீவனைப் பெற்றுக் கொள்ள முடியாது. மரித்து உயிர்த்தெழுந்த சரீரத்தில் அல்லது ஆவிக்குரிய சரீரத்தில்தான் நித்ய ஜீவனைப் பெற்றுக் கொள்ள முடியும். இயேசுவும் உயிர்த்துத்தான் பரலோகம் சென்றார். ஒருவேளை அவரோட வருகையில நாம உயிரோட இருந்தா, நாமளும் மறுரூபமாக்கப்பட்டுத்தான் எடுத்துக் கொள்ளப்படுவோமே அல்லாமல் இந்த மானுட சரீரத்தில் இல்லை. நாம் இப்போ பெற்றிருப்பது இந்த மண்ணுக்குரிய, அழிவுக்குரிய சரீரமே. இந்த சரீரத்தில் யாருமே நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்ள முடியாது. எனவே, 1956 ஆண்டுகளாக இல்லாத ஒன்றாக மரியாள் பரலோகத்துக்கு இந்த ஆத்தும சரீரத்தோட எடுத்துக் கொள்ளப்பட்டார் என்றால் அது வேதத்திற்கு புறம்பானது. வெறும் கற்பனையே.

மேலும் மரியாள் இந்த உலகில் வாழ்ந்த நாட்களில் ஒரு பாவியாவது இரட்சிப்பை பெற மரியாளிடம் வந்தது கிடையாது. சுகத்தைப் பெற்றுக் கொள்வதற்கோ, பிசாசின் பிடிகளில் இருந்து விடுதலை பெறுவதற்கோ மரியாளிடம் எவரும் வந்தது இல்லை. அதுபோல மரியாள் குருடர்களுக்கு பார்வை கொடுத்தார், முடவர்களை நடக்க வைத்தார், மரித்தோரை உயிரோடு எழுப்பினார், பிசாசின் கட்டுகளில் இருப்பவர்களை விடுவித்தார் என்று எந்த ஒரு அற்புதத்தையும் செய்யவில்லை. யாருக்காகவும் மரியாள் பரிந்து பேசவும் இல்லை. மத்தியஸ்தராக இருந்ததும் இல்லை.

இயேசு ஒருவரே பாவங்களை மன்னித்து இருக்கிறார். தன்னிடம் வந்த பாவிகளை, நோயாளிகளை மரியாளிடம் செல்லுங்கள் என்றோ, மரியாள் உங்கள் பாவங்களை மன்னித்து இரட்சிப்பார் என்றோ ஒருபோதும் கூறியது இல்லை. இரட்சிக்கும் வல்லமையை இயேசு மரியாளுக்கு கொடுக்கவும் இல்லை. தேவைகளோடு வந்தவர்களை நோக்கி மரியாளிடம் வேண்டிக்

கொள்ளுங்கள் என்று சொன்னதும் இல்லை. "வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே, என்னிடத்தில் வாருங்கள். நான் இளைப்பாறுதல் தருவேன்" என்று தன்னிடத்தில் வரும்படிதான் இயேசு கூறியுள்ளாரே ஒழிய, மரியாளிடமோ அல்லது என் சீடர்களிடமோ செல்லுங்கள் என்று சொன்னதில்லை. மேலும் தன்னிடம் ஒருவரும் நேரடியாக தொடர்பு கொள்ளக்கூடாது என்றும் சொன்னது இல்லை. இயேசுவை ஏற்றுக்கொண்ட அனைவரையும் பிதா தன் பிள்ளைகளாக ஏற்றுக் கொண்டுள்ளார். பிள்ளைகள் ஆவதற்குரிய அதிகாரத்தையும், உரிமையையும் கொடுத்து இருக்கிறாரே (யோ.1:12). ஆகவே, இயேசுவிடம் நேரடியாக எதையும் கேட்க நமக்கு எந்த தடையுமே இல்லை. அது மாத்திரமல்ல. "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக அதைச் செய்வேன். என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் நான் அதைச் செய்வேன்"னு ஆண்டவராகிய இயேசு யோ.14:14-ல் வாக்கு கொடுத்து இருக்கிறாரே. அவரோட நாமத்தினாலேதான் நாம எதையும் கேட்கணும். அதையும் அவர்கிட்டயே நேரடியா கேக்கணும். வேறு யாரிடமுமோ, வேறு யார் பெயரிலும், வேறு யார் மூலமாயும் நாம் கேட்கக்கூடாதுன்னு வேதம் தெளிவாகக் கூறுகிறது.

திருச்சபையின் தவறான எண்ணங்கள்

கத்தோலிக்க சபைதான் அனைத்து சபைகளுக்கும் தாய் சபையா?

ரோமன் கத்தோலிக்க நண்பர்கள் கத்தோலிக்க திருச்சபைதான் "தாய் சபை" என்றும், மற்ற புராட்டஸ்டெண்ட், பெந்தெகொஸ்தே சபையினரை "பிரிந்துபோன சகோதரர்கள்" என்றும் கூறுவதைக் கேட்டிருக்கலாம். கத்தோலிக்க மதத்தின் ஞான உபதேசமும் (Catechism of the catholic church, P.No.166, 818, 818, 169 & 830). "கிறிஸ்துவின் ஒரே சபை இதுவே. இதையே நாம் ஒரே பரிசுத்த கத்தோலிக்க மற்றும் அப்போஸ்தல சபை என்று நம்முடைய கொள்கையாக அறிக்கையிடுகிறோம்" எனக் கூறுகிறது.

திருச்சபை சரித்திரம் என்ன கூறுகிறது என்று பார்ப்போம்: (1) கத்தோலிக்க என்ற பதம் கத்தோலிக்கோஸ் (Katholikos) என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தது. கத்தோலிக்கம் என்றால் அண்டங்கள் முழுவதும் சார்ந்த "Universal" என்று பொருள்படும். கி.பி.1054-லிலே மேற்கு சபையானது கிழக்கு மற்றும் மேற்கு சபையாக பிரிந்து போனபோது மேற்கு சபையை "ரோம கத்தோலிக்க சபை" என்று அடையாளம் காட்டப்பட்டது. (Quote - 200 Years of Christ Power, NR Needham, P.No.368). (2) கி.பி.313-ம் ஆண்டு ரோம சாம்ராஜ்யத்தின் அரசன் கான்ஸ்டன்டைன் யுத்தத்திற்கு செல்லும்போது ஒரு சிலுவை தரிசத்தை வானத்தில் கண்டு அதோடு "இந்த அடையாளத்தினால் நீ வெற்றியைக் காண்பாய்" என்று லத்தீன் மொழியில் எழுதப்பட்டதையும் கண்டு, தன்னோட இராணுவத்துக்கு சிலுவை சின்னத்தை தரித்து யுத்தம் செய்து வெற்றி பெற்றதினால் அவன் கிறிஸ்தவத்திற்கு ஆதரவாக செயல்பட்டான். அதுவரை கிறிஸ்தவ விசுவாசிகளுக்கு இருந்து வந்த உபத்திரவங்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டன. கி.பி. 380-ம் ஆண்டில் முதலாம் தியோடோசியஸின் (Theodosinus - I) காலத்தில்தான் கிறிஸ்தவம் ரோம சாம்ராஜ்யத்தின் தேசிய மார்க்கமாக அறிவிக்கப்பட்டது. எனவே, இயேசு கிறிஸ்துவின் காலம் முதல் கி.பி.380-ம் ஆண்டு வரையிலும் ரோமன் கத்தோலிக்க சபை உருவாக்கப்படவில்லை. அப்போஸ்தலர் காலத் திருச்சபையே இருந்தது என்று சரித்திரத்தின் வாயிலாக அறிய முடிகிறது.

பேதுருவின் மீதுதான் சபை கட்டப்பட்டுள்ளதா?

பேதுருவின் மீதுதான் சபை கட்டப்பட்டுள்ளது, அவரையே சபைக்கு முதல் தலைவராக இயேசு ஏற்படுத்தினார் என்றும், பேதுருவே முதல் ரோமாபுரி பிஷப்பாக இருந்தார் என்று ஒரு பாரம்பரிய கருத்து நமது கத்தோலிக்கர்கள் மத்தியில் ஊறிப்போய் இருக்கிறது. வேதாகமத்தின்படியேயும், சரித்திரத்தின் படியேயும் இதற்கு எவ்வித ஆதாரமுமே இல்லை. இவர்களின் இந்தக் கருத்துக்கு அடிப்படையாக மத்.16:18-ஐயும், யோவான் 21:15-17-ஐயும் சொல்வார்கள்.

மத்.16:18-19 என்ன சொல்கிறது? "உன் பெயர் பேதுரு. இந்தப் பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்" என்றார். பேதுரு என்றால் பெட்ராஸ் அதாவது பாறை, சிறிய கல் என்று கிரேக்கத்தில் பொருள்படும். மூலப்பிரதியில் இது "பெட்ரா" என்று எழுதப்பட்டுள்ளது. பெட்ராஸ் என்றால் சிறிய கல். "பெட்ரா" என்றால் பெரிய படர்ந்த பாறை என்று பொருள்படும்.

1 பேதுரு 2:6-8 வசனங்களில் பேதுருவே சொல்கிறார் "கிறிஸ்து தானே மூலைக்கல்லாய் இருக்கிறார் (பெட்ராவாக -- - கற்பாறையாக, கன்மலையாக, ஜீவனுள்ள கல்லாக) தேவன் இயேசு கிறிஸ்து என்ற கற்பாறையின் மீது திருச்சபையை கட்டி எழுப்புகிறார்". மத்.16:18-ல சொல்லப்பட்டுள்ளதின் சரியான வேத சத்தியத்தை, தேவ திரு உள்ள திருச்சித்தத்தை புரிந்து கொள்ள வேண்டுமானால் மத்.16-ல் 13-ம் வசனம் முதற்கொண்டு படித்துப் பார்க்க வேண்டும். இயேசுவே கேட்கிறார் "மனுஷ குமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்கிறார்கள்?" என்று (மத்.16:13)-ல் கேட்கிறார். அதற்கு "சிலர் உம்மை யோவான் ஸ்நானன் என்றும், வேறு சிலர் எரேமியா அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்கிறார்கள்" என்று சீஷர்கள் சொல்கின்றனர். அப்பொழுது அவர் "நீங்கள் என்னை யார் என்று சொல்கிறீர்கள்?" என்று கேட்கிறார். அதற்கு சீமோன் பேதுரு "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்கிறார். அப்போது இயேசு பேதுருவை நோக்கி "மாம்சமும். இரத்தமும் உனக்கு இதை வெளிப்படுத்தவில்லை. பரலோகத்திலிருக்கிற என் பிதா உனக்கு இதை வெளிப்படுத்தி இருக்கிறார்" (மத்.16:17). மேலும், இயேசு கூறுவதாவது "நீ பேதுருவாக (பெட்ராஸ்) இருக்கிறாய். (அதாவது இப்போது நீ சரியாக புரிந்துகொண்டு, விசுவாசித்து, அதில் உறுதியாய் நிலைத்து நிற்கிறாய்). இந்தக் கல்லின்மேல் நான் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீ புரிந்து கொண்டுள்ள இந்த சத்தியத்தின் மீது, என்மீது கொண்டுள்ள இந்த விசுவாசத்தின் மீது என் சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாசல்கள் அதை (இந்த சத்தியத்தை, விசுவாசத்தை) மேற்கொள்வது இல்லை" என்கிறார். ஆக இங்கே குறிப்பிடப்பட்டுள்ள "இந்தக் கல்"

என்பது பேதுருவைக் குறிக்கவில்லை. இயேசு கிறிஸ்து உண்மையிலேயே யார் என்று பேதுரு அறிந்து கொண்டுள்ள அந்த சத்தியத்தை, அவர்மீது கொண்டுள்ள கற்பாறை போன்ற விசுவாசத்தையே சுட்டுகிறது.

இந்தப் புரிந்து கொள்ளுதலோடு இப்போது 1 பேதுரு 2:4 முதல் 6 உள்ள வசனத்தை படித்துப் பாருங்கள். "மனுஷரால் தள்ளப்பட்டதாயினும், தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டதும், விலையேறப்பட்டதுமாய் இருக்கிற ஜீவனுள்ள கல்லாகிய அவரிடத்தில் சேர்ந்தவர்களாகிய நீங்களும், ஜீவனுள்ள கற்களைப் போல ஆவிக்கேற்ற மாளிகையாகவும் இயேசு கிறிஸ்து மூலமாய் தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளை செலுத்தும்படிக்கு பரிசுத்த தேவனுக்குப் பிரியமான ஆவிக்கேற்ற பலிகளை செலுத்தும்படிக்கு பரிசுத்த ஆசாரியக்கூட்டமாகவும் கட்டப்பட்டு வருகிறீர்கள். அந்தப்படியே, இதோ தெரிந்து கொள்ளப்பட்டதும், விலையேறப்பட்டதுமாய் இருக்கிற மூலைக்கல்லை சீயோனில் வைக்கிறேன். அதன்மேல் விசுவாசமாய் இருக்கிறவன் வெட்கப் படுவதில்லை".

ஆக இங்கு மத்.16:13-18 வரை உள்ள வசனங்களில் உள்ள முக்கிய கேள்வி "கிறிஸ்து யார்?" என்பதே. "பேதுரு யார்?" என்பது அல்ல. அதற்கு இயேசு கேட்ட "மனுஷகுமாரனாகிய என்னை ஜனங்கள் யார்?" என்று கேட்ட கேள்வியிலிருந்தும், அதற்கு பேதுரு சொன்ன "நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து" என்ற பதிலுக்குப்பிறகு ஆண்டவராகிய இயேசு சொல்கிறார். "இந்தக் கல்லின்மேல் என் சபையைக் கட்டுவேன்" என்கிறார். திருச்சபைக்கு அஸ்திபாரம், கல், மூலைக்கல், தலை, சரீரம் எல்லாமே கிறிஸ்து ஒருவர் மட்டுமே. அவர் மீது வைக்கிற அசைக்கமுடியாத அந்த விசுவாசமே. இதை பவுல் ஆணித்தரமாக 1 கொரி 3:11-ல் "போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசு கிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தை போட ஒருவனாலும் கூடாது" என்று கூறிவிட்டார்.

அதுமட்டுமல்ல மூன்று முறை சத்தியம் செய்து இயேசு கிறிஸ்துவை மறுதலித்த ஒரு பலவீனமான, தவறு செய்த

ஒருவன் எப்படி திருச்சபைக்கு கற்பாறையான அஸ்திபாரமாக இருக்க முடியும்? சான்ஸே கிடையாது. இருக்க வாய்ப்பே இல்லை. மேலும் சங்கீதக்காரனாகிய தாவீது சங்.19:14-ல என்ன சொல்லிப் பாடுகிறான். II சாமுவேல் 22:2-ஐப் பாருங்கள். "கர்த்தர் கன்மலையும், என் கோட்டையும் என் இரட்சகருமானவர்" என்று சொல்லிச் சொல்லிப் புகழ்கிறான். 23:47-ஐப் படியுங்கள். "கர்த்தர் ஜீவனுள்ளவர். என் கன்மலையானவர், ஸ்தோத்தரிக்கப்படுவாராக. என் இரட்சிப்பின் கன்மலையாகிய தேவன் உயர்ந்திருப்பாராக" என்று மனம் நெகிழ்ந்து துதிக்கிறார். இயேசு கிறிஸ்து மனித அவதாரம் எடுப்பதற்கு முன்பும் கன்மலையாக இருந்தவரும் அவரே. "அவர் அவர்களை (இஸ்ரவேலர்களை) வனாந்திரங்களில் நடத்தும்போது அவர்களுக்கு தாகமிடாய் இருந்ததில்லை. கன்மலையிலிருந்து தண்ணீரை அவர்களுக்கு சுரக்கப் பண்ணினார். கன்மலையைப் பிளந்தார்" என்று ஏசாயா தீர்க்கதரிசி ஏசாயா 49:21-ல் சொல்கிறார். 1 கொரி.10:4-ல் பவுல் எவ்வளவு தெளிவாக கொரிந்து சபைக்கு எழுதுகிறார் பாருங்கள்: "எல்லோரும் ஒரே ஞான பானத்தைக் குடித்தார்கள். எப்படியெனில் அவர்களோடே கூடச்சென்ற ஞானக் கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள். அந்தக் கன்மலை கிறிஸ்துவே. திருச்சபை கட்டப்பட மூலைக்கல்லாக அஸ்திபாரமாக இருந்தது கன்மலையாகிய கிறிஸ்துவே" என்று வேதத்தில் ஒரு இடத்தில் அல்ல, பல இடங்களில் தெளிவாகக் கூறப்பட்டு இருக்கிறது.

சொல்வது ஒன்று, செய்வது ஒன்று

இது அத்தனைக்கும் மேல நமது கத்தோலிக்க திருச்சபையின் ஞான உபதேசம் சொல்வது ஒன்று. ஆனால் நடைமுறையில் அவர்கள் கடைப்பிடிப்பது வேறு ஒன்றாக இருக்கிறது. Catechism of the Catholic church சொல்வதைப் பாருங்கள். 'I also admit the Holy Scriptures, according to that sense which our Holy Mother of the Church has held, and does hold to which it belongs to judge of the true sense and interpretation of the scriptures. Neither will I ever take and interpret them otherwise than according to the universe consent of the Fathers!"

அதாவது "நான் பரிசுத்த வேதாகமத்தை ஏற்றுக் கொள்கிறேன். பரிசுத்த வேதாகமத்தின் வார்த்தைகள் எந்த உண்மையான கருத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது என்று நமது திருச்சபையின் பரிசுத்த மாதா ஏற்றுக் கொண்டார்களோ அல்லது ஏற்றுக் கொண்டிருக்கிறோமோ அவ்விதமாக ஏற்றுக் கொள்கிறேன் என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். ஆனால் குருமார்களின் ஏகோபித்த ஒப்புதலுக்கு மாறாக ஒரு போதும் மாறுபட்டு ஏற்றுக் கொள்ளமாட்டேன்" என்று கூறப்பட்டுள்ளது. அதாவது பரிசுத்த வேதாகமத்தை அப்படியே ஏற்றுக் கொள்ள மாட்டார்களாம். (என்ன கொடுமை, அநியாயம்டா இது!) அதை மரியாள் எப்படி ஏற்றுக் கொண்டார்களோ, அவ்விதமாக ஏற்றுக்கொள்வார்களாம் (மரியாள் பரிசுத்த வேதாகமத்திற்கு அவருடைய interpretation-ஐ எழுதிக் கொடுத்திருக்கிறார்களா?, இல்லை எங்காவது கருத்தை வெளியிட்டு இருக்கிறார்களா? அப்படி ஒரு interpretation முதலில் தேவையா?

"வேத வாக்கியங்கள் எல்லாம் பரிசுத்த ஆவியினால் அருளப்பட்டு இருக்கிறது" என வேதம் தெளிவாகச் சொன்னாப் பிறகும், அதில் ஒரு வார்த்தையை கூட்டவோ, குறைக்கவோ செய்தால், எதையாகிலும் எடுத்துப் போட்டாலும் பரிசுத்த நகரத்திலிருந்தும், இந்த வேதத்தில் எழுதப்பட்டவைகளிலிருந்தும் அவர்களுடைய பங்கை தேவன் எடுத்துப் போடுவார் என்ற வெளி.22:19-ல கடுமையா எச்சரிக்கை விடுத்த பிறகும் இப்படி செய்கின்றனரே. கடைசியில் குருமார்கள் அனைவரும் ஒருமனதோடு ஒப்புதல் அளிப்பதின் பிரகாரம் ஏற்றுக் கொள்வோம். அப்படி ஒருமனப்பட்டு ஏகோபித்த ஒப்புதலை கொடுக்கவில்லை என்றால் அதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம் என்று வேறுபட்டு ஏன் சொல்வானேன்?

பேதுரு என்ற கல்லின்மேல் சபை கட்டப்பட்டு இருக்கிறது என்ற கருத்துக்கு குருமார்களிடையே ஒருமனப்பட்ட ஏகோபித்த ஒப்புதல் இல்லை என்று தந்தை ஜான் லவ்னாய் (Father John Launoy) கீழ்க்கண்டவாறு ஆதாரத்தோடு கூறியுள்ளார். (Quote: Sage 19 for book 'How to lead Roman Catholics to Christ' by J.B. Rowell, Th.D.).

1) குருமார்களில் 17 கொட்டேஷன்ஸ் பேதுருவே கல் என்று நிரூபிக்கிறது என்கின்றனர்.

2) எட்டுபேர் திருச்சபை எல்லா அப்போஸ்தலர்கள் மீதும் கட்டப்பட்டுள்ளது என கருத்து தெரிவித்துள்ளனர்.

3) 45 பேர் பேதுரு வெளிப்படுத்தின விசுவாசம் என்ற பாறையில் கட்டப் பட்டுள்ளது என்றனர்.

4) 16 பேர் இயேசு கிறிஸ்து என்ற பாறையின் மீது சபை கட்டப்பட்டுள்ளது என கூறியுள்ளனர்.

இப்போ ஒருமனப்பட்ட ஏகோபித்த கருத்து எங்கே இருக்கிறது? கருத்து பிளவுபட்டு இருக்கிறதே. அப்படி இருக்கும்போது அவர்களே ஒப்புக் கொண்டுள்ளபடி செய்யாமல். பேதுருவின் மேலேயே சபை கட்டப்பட்டு இருக்கிறது என கூறுவதோடு, அதை பறைசாற்றியும், வேதாகமத்திற்கும், அவர்களே ஒத்துக் கொண்ட நிலைப்பாட்டிற்கும் விரோதமாக செயல்படுகின்றனரே. அதைவிட மோசம் "இயேசு கிறிஸ்துவின் மேல் திருச்சபை கட்டப்படவில்லை" என்று கூறுவதுதான். அது இயேசுவையே மறுதலிப்பது ஆகாதா?

திருச்சபை மரியாளின் கையில் இருக்கிறதா?

திருச்சபை பேதுருவின் (இராயப்பர்) மேல்தான் கட்டப் பட்டது என்ற தவறான போதகத்தை சரிசெய்வதற்கு முன்பாகவே, சபை தற்போது மரியாளுடைய கரத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக திருச்சபை ஒரு உபதேசத்தைக் கொண்டு வந்துள்ளது. "It is to her that Jesus entrusts His Church and all humanity" (Encyclical letter veritates splendor by Pope Paul II in August 1993) என்று Christian Faith No.726, பிரிவு 120-ல் கூறப்பட்டுள்ளது. அப்படியானால் திருச்சபை மரியாளின் கரத்திலா ஒப்படைக்கப்பட்டுள்ளது? திருச்சபை கிறிஸ்துவின் சரீரம் என்றும் (எபே. 4:12) (கொலோ. 1:24), அதன் தலை இயேசு கிறிஸ்து என்றும் (கொலோ. 1:18, எபே. 5:23) பவுல் கூறுவதின் அர்த்தம் என்ன? சபை மரியாளுடைய கரத்தில் உள்ளது என்றால் திருச்சபைக்கு

தலையாக மரியாள் அல்லவா இருக்க வேண்டும்? ஆனால் பவுல் இயேசுவே சபையைக் கட்டுகிறார் என்றும் (மத். 16:18), சபைக்கு அஸ்திபாரம் இயேசு கிறிஸ்து என்றும் (1 கொரி.3:11), இயேசு தன் சுய இரத்தத்தினால் சம்பாதித்தது சபை என்றும் (அப். 20:28), அவருடைய சரீரமான சபையில் கர்த்தரே நம்மைச் சேர்க்கிறார் என்றும் (அப். 2:47) கூறுவதெல்லாம் பொய்யா? தவறா?

திருச்சபையை இயேசு மரியாளுடைய கரத்தில் கொடுத்தார் என்று வேதத்தில் எங்காவது எழுதப்பட்டுள்ளதா? இப்படி இல்லாத ஒன்றை உபதேசித்து ஜனங்களை குழப்பு-வதினாலோ அல்லது தேவையில்லாத கனத்தை, மகிமையை மரியாளுக்கு கொடுக்கிறதுனாலே, தாங்கள் அறிந்தோ அறியாமலோ மரியாளை ஆராதிக்கின்றதை நியாயப்படுத்த விரும்புகிறார்களா? ஏன் வேத சத்தியங்களுக்கு மாறாக இத்தனை தவறான உபதேசங்கள், கருத்துக்கள்? வேண்டாமே ப்ளீஸ். இப்படி தவறு மேல் தவறுகளை செய்து நீங்கள் தேவ ஆக்கிணைக்கு உள்ளாக வேண்டாம் என்ற உண்மையான கரிசனையில் இவைகளை எல்லாம் எடுத்து எழுதுகிறேன். வேதப் புத்தகம் உங்கள் கையில் இருக்கிறது. அதில் உள்ள தேவனின் வார்த்தைகள் என்றுமே மாறாதவைகள்.

அதற்கு புறம்பாக, மாறாக, யார் சொன்னாலும், எப்பேர்ப்பட்டவர்கள் சொன்னாலும் தூக்கி எறியுங்கள். கத்தோலிக்க சகோதர, சகோதரிகள் வேதத்தை தினமும் ஒழுங்காக வாசித்தாலே சத்தியத்தை அறிந்து கொள்ள முடியுமே. வேதத்தை அனுதினமும் அனைவரும் வாசிக்காத வரையில் இதுபோன்ற உபதேசக் குழப்பங்கள் தொடரவே செய்யும். உண்மையான சத்தியத்தை விட்டு நாம் ரொம்ப தூரம் விலகிப் போய்க்கொண்டேதான் இருப்போம்.

ஜெபமாலை (Rosary Beads)

அடுத்து நமது கத்தோலிக்க சகோதரர்கள் செய்வது "விசுவாச அறிக்கை செய்து, பரமண்டல ஜெபத்தைச் சொல்லி, பத்துமுறை தொடர்ந்து "மரியே வாழ்க" என்று ஜெபம்

செய்து, ஒரு திரித்துதி சொல்லி, 15 செட்டாக 150 முறை ஜெபிக்கிறார்கள். அதற்கு ஜெபமாலையை பயன்படுத்துகின்றனர். இப்படி கர்த்தரிடத்தில் ஜெபிப்பதைக் காட்டிலும், மரியாளிடம் வேண்டிக்கொள்வதே அதிகமாக இருக்கிறது. ஜெபிப்பதற்கு ஜெபமாலையை பயன்படுத்துங்கள் என்று இயேசுவோ அல்லது அவரது சீஷர்களோ எங்கேயும் சொன்னதில்லை. வேதத்தில் சொல்லப்படாத ஒன்றை நமது சகோதரர்கள் கடைப் பிடிக்கிறார்கள்.

பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே புற ஜாதி மக்கள் ஜெபமாலை மணிகளைப் பயன்படுத்தி மந்திர உச்சாடனம் செய்தார்கள். பிரார்த்தனை செய்தார்கள் என்று வரலாறு கூறுகிறது. கி.பி.456-ம் ஆண்டில் ஜெயின் மதத்தினர் "போபர்களாப்" (Bober Kahj) என்கிற ஜெபமாலையை பயன் படுத்தினர். இந்த போபர்களாப் என்கிற ஜெபமாலையில் பலவிதமான எண்ணிக்கையில் மணிகள் இருக்கும். 6, 9, 12, 18, 36 என்ற கணக்கில் மணிகள் இருக்கும். இஸ்லாமியர் கி.பி.610-ஆம் ஆண்டு 99 மணிகளைப் பயன்படுத்தி ஜெபம் செய்தார்கள். புத்த மதத்தினர் 108 ஜெபமணிகளை ஒரு வளையத்தில் கோர்த்து ஜெபம் செய்தார்கள். எனவே, ஜெபமாலை என்பது புற மதத்தினர் பழக்கத்தில் இருந்து வந்ததே தவிர, கி.பி.1000-க்கு முன்பாக எந்த கிறிஸ்தவர்களும் ஜெபமாலையைப் பயன்படுத்தி ஜெபித்ததே இல்லை. இயேசு கிறிஸ்துவோ, அப்போஸ்தலர்களோ வேறு எவருமோ ஜெபமாலையை பயன்படுத்தி ஜெபித்ததாக பரிசுத்த வேதாகமத்தில் கூறப்படவில்லை. பின்பு இது எப்படி நமது கத்தோலிக்க திருச்சபைக்குள் நுழைந்தது?

ஜெபமாலையை பயன்படுத்தி ஜெபிக்க வேண்டும் என்ற முறையை முதன்முதலில் கி.பி.1090-ம் ஆண்டு பீட்டர் என்ற துறவி (Peter the Hermit) என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டது. பின்பு செயிண்ட் டோமினிக் (St. Dominic) என்பவரால் கி.பி. 1208-ம் ஆண்டு இந்த ஜெப மாலையை பயன்படுத்த பிரபலம் செய்யப்பட்டது. மரியாள் செயிண்ட் டோமினிக் முன்பாகத் தோன்றி இந்த ஜெபமாலை மணிகளை வெளிப்படுத்தினார் என்று கத்தோலிக்கர்கள் நம்புகின்றனர்.

ஜெபமாலையை உருட்டிக் கொண்டு இன்று உலகம் முழுவதும் பலகோடி மக்கள் "மரியாள் வாழ்க" என்று ஒரு நாளில் பல முறை கூறி ஜெபிக்கின்றனர். இப்படி திரும்பத் திரும்ப செய்யப்படுகின்ற ஜெபமாலை ஜெபத்தில் நமது பிதாவுக்கு செய்யப்படுகின்ற ஒவ்வொரு ஜெபத்திற்கும் பத்து தடவை மரியாள் வாழ்க என்று கூறிவிட்டு, கடைசியில் "பரிசுத்த ராணி வாழ்க" என்று வாழ்த்தி முடிக்கின்றனர். இப்படியாக கத்தோலிக்க சபை மரியாளுக்கு பதினோரு தடவை ஜெபம் செய்து வாழ்த்துக் கூறும்போது, இயேசுவுக்கு ஒரே ஒரு தடவை வாழ்த்துக் கூறுகின்றனர். இது எந்தவிதத்தில் நியாயம்? 1 திமோத்தேயு 1:17-ல் "அழிவில்லாத, கண்ணுக்கும் புலப்படாத, எக்காலத்துக்கும் அரசராய் இருக்கின்ற ஒரே கடவுளுக்கு என்றென்றும் மாண்பும், மாட்சியும் உரித்தாகுக" என்று வாசிக்கிறோம். ஆனால் செய்வது என்ன? சற்றே யோசித்துப் பாருங்கள். ஒரே கடவுளாக நம் தேவனாகிய இயேசுவுக்கு கொடுக்க வேண்டிய கனத்தை, மாண்பை, மாட்சியை கொடுக்காதிருந்தால், நம்மீது எப்பேர்ப்பட்ட கொடிய ஆக்கிணை வரும் என்று தெரிந்தேதான் செய்கிறோமா, இல்லை தெரியாமல், புரியாமல் செய்கிறோமா? தெரியாமல் செய்கிறோம் என சொல்வதற்கு வாய்ப்பே இல்லை. ஆகவேதான், வேதம் வேதனையோடு ஓசேயா 4:6-ல் கூறுகிறது. "(வேத) அறிவின்மையினால் என் மக்கள் அழிகின்றார்கள். நீ (வேத) அறிவைப் புறக்கணித்தால், நானும் உன்னைப் புறக்கணிப்பேன். நீ உன் கடவுளின் திருச்சட்டத்தை மறந்து விட்டால், நானும், உன் பிள்ளைகளை மறந்து விடுவேன்". பார்த்தீர்களா? வேத அறிவில்லாமையினால் என் ஜனங்கள் சங்காரமாகிறார்கள் என்று ஆண்டவர் வருந்துகிறார்.

நாம் தேவனுடைய வேதத்தை மறந்தால் அவர் நம்மை புறக்கணிப்பது மாத்திரமல்ல, நமது மக்களையும் அவர் மறப்பேன் என்கிறார். அவர் நமது பிள்ளைகளை மறந்தால், நமது பிள்ளைகளின் கதி என்ன ஆகும் என்று ஒரு நிமிடம் நினைத்துப் பார்க்கவே குலை நடுங்குகிறது.

உலகமெங்கும் இருக்கிற பலகோடி கத்தோலிக்கர்களின் விண்ணப்பத்திற்கும், ஜெபத்திற்கும் மரியாள் பதில் கொடுத்து

ஆவன செய்ய வேண்டும் என்றால் மரியாள் ஒரு சர்வ வல்லமையுள்ள, சர்வத்தையும் அறிந்த, ஆள்கின்றவராக, சர்வ வியாபியாக இருக்கணும். ஆனால் அப்பேர்பட்ட வல்லமை, அருட்கொடை, கிருபை நிறைந்தவர் அவர் என்றோ, அல்லது மரியாளிடம் இந்த வல்லமை இருந்ததாகவோ வேதம் கூறவில்லை. தேவன் ஒருவருக்கே இத்திறமைகள், வல்லமை, ஞானம், சக்தி இருப்பதாக வேதம் கூறுகிறது.

விவிலியம் கூறும் சத்தியம் என்னவென்றால், மத்.6:7, 8-ல் இயேசு கிறிஸ்து "மேலும் நீங்கள் இறைவனிடம் வேண்டும்போது பிற இனத்தவர்களைப்போல பிதற்ற வேண்டாம். மிகுதியான சொற்களை அடுக்கிக்கொண்டே போவதால் தங்கள் வேண்டுதல்கள் கேட்கப்படும் என அவர்கள் நினைக்கிறார்கள். நீங்கள் அவர்களைப்போல இருக்க வேண்டாம்" என்று கூறியுள்ளார். ஜெபிக்க வேண்டுமென்றால் எந்த நேரத்திலும் இயேசு கிறிஸ்துவினுடைய நாமத்தினால் மன உறுதியுடனும், தூய்மையான மனத்துடனும் நாம் ஜெபிக்கும்போது இறைவன் நம் ஜெபங்களுக்கு பதில் கொடுப்பார்" என யோ.14:14 சொல்கிறது.

ஒரே ஜெபத்தை திரும்பத் திரும்ப சொல்வதினால் எந்த பயனும் இல்லை என ஆண்டவர் கூறுகிறார். முழு இருதயத்தோடும், ஆத்துமாவோடும் நாம் ஜெயிக்க வேண்டும். அதுமட்டுமல்ல, தேவனுடைய கட்டளைகளை புறக்கணித்து, மீறி நடந்து அவரை கனவீனம் பண்ணிய பிறகு நாம் எத்தனை தடவைதான் மன்றாடி ஜெபித்தாலும் அந்த ஜெபத்திற்கு தேவனிடமிருந்து பதில் கிடைக்குமா? கிடைக்காதே.

(நன்றி: ரெவரெண்ட் வி.ரூபஸ் இராஜரத்தினம் அவர்கள் எழுதிய "கத்தோலிக்க வேதாகமம் கூறும் உபதேங்கள்", பக்.15, 16, World of Christ வெளியீடு).

தெளிப்பு ஞானஸ்நானம்

குழந்தை ஞானஸ்நானம்

குழந்தைகள் ஞானஸ்நானத்தில் மறுபடியும் புதிதாய் பிறக்க வேண்டும் என்றும், அது பாரம்பரியம் என்று கூறி (Catechism of the Catholic Church, P.No.244, 1250, 246 and 1252) கத்தோலிக்க திருச்சபை குழந்தைகளுக்கு அவர்கள் மேல் தண்ணீரைத் தெளித்து ஞானஸ்நானம் கொடுக்கின்றனர். குழந்தைகளுக்கு திருமுழுக்கு கொடுக்க வேண்டும் என்று வேதத்தில் எங்குமே சொல்லப்படவில்லை. இயேசு கிறிஸ்துவோ அல்லது அவரது சீஷர்களோ சொன்னதும் இல்லை.

குழந்தை ஞானஸ்நானம் என்பதே இரண்டாம் நூற்றாண்டுக்குப் பிறகுதான் ஏற்பட்டது என்று சபை சரித்திரம் கூறுகிறது. அந்தக் காலத்தில் வாழ்ந்த தெற்நூலியன் (Tertulian) என்கிற இறை இயல் வல்லுனர் குழந்தை ஞானஸ்நானம் தவறு என்று சுட்டிக்காட்டி, அந்த பழக்கத்தை கடுமையாக எதிர்த்தார். திருமுழுக்கு (Baptism) என்ற வார்த்தை Baptizo என்ற கிரேக்க வார்த்தையிலிருந்து வந்தது. Baptizo என்றால் மூழ்குதல் (to dip to immerse) என்றே பொருள்படும். திருமுழுக்கு என்பது தண்ணீரை தெளிப்பது அல்ல. தண்ணீருக்குள் மூழ்குதலே. ஞானஸ்நானம் எடுத்துக் கொள்வதற்கு முதல் தகுதி பாவ வாழ்க்கையிலிருந்து மனம் மாறுதல். (திருத்தூதர் பணிகள் 2:38). அதற்கு முதலில் நாம் ஒரு பாவி என்ற உணர்வு வரணும். நாம் ஒரு பாவ வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று உணர்ந்து, அவைகளுக்காக மனங்கசந்து பிறகு அவைகளை அறிக்கையிட்டு பாவமன்னிப்பு பெறுவதற்காக இயேசுவின் நாமத்தில் திருமுழுக்குப் பெற வேண்டும். "ஆண்டவரே, உம்முடைய தூய ரத்தத்தால் நான் செய்த பாவங்களை எல்லாம் ஒரு விசை மன்னியும்"னு சொல்லி அழுது புலம்பி அறிக்கையிட்டு தண்ணீரில் மூழ்கின்ற சமயத்தில் நாம் பாவத்துக்கு மரித்து இயேசு கிறிஸ்துவோடு சேர்ந்து அடக்கம் பண்ணப்படுகிறோம். தண்ணியை விட்டு எழும்போது நாம பாவத்துக்கு மரித்து புதிய ஜீவனைப் பெற்றுக்

கொண்டு "மறுபடியும் பிறந்த கிறிஸ்தவனாக" தண்ணியை விட்டு இயேசு உயிர்த்தெழுந்தது போல எழுந்திரிக்கிறோம். இதுதான் அங்கு திருமுழுக்கில் நடக்கிறது. இது எல்லாமே விசுவாசத்தில நடக்குது. "நம்பிக்கை கொண்டு திருமுழுக்குப் பெறுவோர் மீட்புப் பெறுவர். நம்பிக்கையற்றவரோ தண்டனைத் தீர்ப்பு பெறுவர்" என்று மாற்கு 16:16 சொல்லுதே.

திருமுழுக்கு என்பதே நாம் பாவி என்ற உணர்வு அடைந்தபிறகுதான். குழந்தைகளுக்கு தான் பாவின்னு தெரியுமா? பாவம்னால என்னன்னே தெரியாதே. அதுனால மனந்திருந்துதலும் இல்லையே. செய்த பாவங்களை அறிக்கை யிடாமல், மனம் திருந்தாமல், பாவ மன்னிப்பு இல்லையே. திருமுழுக்கே பாவ மன்னிப்பு பெறுவதற்குத்தானே. குழந்தையின் தெளிப்பு ஞானஸ்நானத்தில் இந்த ஞானஸ்நானம், இந்த உயர்ந்த கோட்பாடுகள் எல்லாம் அப்படியே அடிபட்டுப் போகிறதே. அது வெறும் ஒரு சடங்காக, சடங்காச்சாரமாக மாத்திரமே ஆகிப்போகிறது. குழந்தை தெளிப்பு ஞானஸ்நானத்தை குழந்தை பிரதிஷ்டை என்று வேண்டுமானால் சொல்லலாம். குழந்தை பிரதிஷ்டை என்பது அக்குழந்தையை பெற்ற தாய் தந்தையர் ஆகிய நாங்களும், சபை மக்களாகிய நாங்களும் இந்தக் குழந்தை கிறிஸ்துவுக்குள், கிருபையில், சத்தியத்தில் வளர, ஒரு நல்ல கிறிஸ்தவனாக உருவாவதற்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் நாங்கள் செய்வோம் என உறுதிமொழி அளித்தலே. பிரதிஷ்டையோ, தண்ணீர் தெளிப்போ திருமுழுக்கு ஆகாது.

எந்தவொரு பாவமுமே செய்யாத இயேசு கிறிஸ்துவே முழுகி ஞானஸ்நானம் எடுத்துள்ளார். யோவான் ஸ்நானன் தடுத்தபோது இயேசு என்ன சொன்னார்? "கடவுளுக்கு ஏற்புடையவை அனைத்தையும் நாம் நிறைவேற்றுவதுதான் முறை" என்று கூறி திருமுழுக்கு எடுத்தாரே (மத்.3:15). முழுக்கு ஞானஸ்நானம் என்பது கடவுளுக்கு ஏற்புடையது. அது தேவ நீதி. அது மாத்திரமல்ல அது இயேசுவின் கட்டளை. மத்.28:19, 20-ஐப் பாருங்கள். "நீங்கள் போய் எல்லா மக்கள் இனத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக்

கொடுங்கள். நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள்" என்றாரே. மேலும், "அது குற்றமற்ற மனச்சான்றுடன் கடவுளுக்குத் தரும் வாக்குறுதி ஆகும்" என்று 1 பேதுரு 3:21 சொல்லுதே. கொலோ. 2:12-ல் "நீங்கள் திருமுழுக்குப் பெற்றபோது அவரோடு அடக்கம் பண்ணப்பட்டீர்கள். சாவிலிருந்து அவரை உயிர்த்தெழச் செய்த கடவுளின் ஆற்றல்மீது கொண்டுள்ள நம்பிக்கையால் அவரோடு நீங்களும் உயிர் பெற்று எழுந்துள்ளீர்கள்" என்று சொல்லப்பட்டு இருக்கிறதே. ஆக திருமுழுக்கு என்பது பாவத்திற்கு மரித்து அடக்கம் பண்ணப்படுதல். பின்பு இயேசுவோடு பாவம் மன்னிக்கப்பட்டு உயிர்த்தெழுதல் என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது. இது பெந்தேகோஸ்து சபையார்கள் கொண்டு வந்த ஒரு சபைச்சட்டமல்ல. இது தேவ திருச்சித்தம். நீதி, கட்டளை. "ஒருவர் தண்ணீராலும் (திருமுழுக்கு) தூய ஆவியாலும் பிறந்தாலன்றி இறையாட்சிக்கு உட்பட இயலாது" என்று யோவான் 3:5 திட்டமாக கூறுதே. தூய ஆவியை எப்போ பெற்றுக் கொண்டோம்? "பாவ மன்னிப்புக்கென்று இயேசுவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளும்போது, பரிசுத்த ஆவியை கொடையாக பெற்றுக் கொள்வீர்கள்"னு திருத்தூதர் 2:38-ம் சொல்லுதே.

1) திருமுழுக்கை தண்ணீர் அதிகம் இருக்கும் இடத்தில் தான் கொடுக்க வேண்டும் (யோவான் 3:23).

2) தண்ணீருக்குள் இறங்கிப் பெற வேண்டும் (திருத் தூதர் பணிகள் 8:38, 29, மத்.3:16). தண்ணீரில் இறங்கி, முழுகித்தான் ஆதித்திருச்சபை வாசிகள் திருமுழுக்குப் பெற்றார்கள். இயேசுவும் அப்படியே திருமுழுக்குப் பெற்று நமக்கு ஒரு முன் உதாரணமாக இருக்கிறார். இந்த முழுக்கு ஞானஸ்நானத்தை இரட்சிக்கப்பட்டவுடன் (மனந்திரும்பி, பாவ மன்னிப்பை இயேசுவிடம் பெற்ற பின்பு) எடுக்க வேண்டும். (திருத்தூதர் பணிகள் 22:16). இதுதான் விவிலியம் கூறும் சத்தியம். சத்தியத்திற்கு புறம்பாக நடப்பது நியாயமா?

பாவ சங்கீர்த்தனம்

பாவ அறிக்கை

நமது கத்தோலிக்க திருச்சபை செய்கின்ற மற்றுமொரு மிகப்பெரிய தவறு, உபதேசம். "எல்லாப் பாவங்களும் ஒரு பாதிரியாரிடத்தில் அறிக்கை செய்யப்பட வேண்டும்" என்பது. "தேவனோடும், சபையோடும் சமாதானமாய் இருக்க விரும்புகிற எவரும், தன்னுடைய மனசாட்சியை கவனமாய் ஆராய்ந்து பார்த்து ஞாபகத்துக்கு வருகிற அறிக்கை செய்யப்படாத மறைவான எல்லாப் பாவங்களையும் ஒரு பாதிரியாரிடத்தில் அறிக்கையிட வேண்டும்" என்று Calechism of the Catholic Church, P.No.28, 1493, 280, 1456:274, 1424 கூறுகிறது. மேலும் "கத்தோலிக்க சாமியார் பாவங்களை மன்னிக்கிற வல்லமை உள்ளவர்" என்று இந்த உபதேசத்தின் இரண்டாவது பகுதி கூறுகிறது. "சபையின் அதிகாரத்திடமிருந்து மன்னிக்கிற திறனைப் பெற்றிருக்கிற ஒரு குருவானவரே கிறிஸ்துவின் நாமத்தில் பாவங்களை மன்னிக்க முடியும்" என்று Catechism P.No.286, 1495 கூறுகிறது.

புற ஜாதிகளின் பழக்கமான மனிதர்களின் பாவங்களைக் கேட்டு, அவைகளை மன்னித்து அவர்களுக்காக பிரார்த்தனை செய்யும் பழக்கம் 5-ம் நூற்றாண்டில் போப் லியோ (AD 440-461)-வினால் திருச்சபைக்குள் வந்தது. 16-ம் நூற்றாண்டில் போப் லியோ X-வினால் ரோமில் செயிண்ட் பீட்டர்ஸ் கத்தீட்ரல் கட்டுவதற்கு பணம் சேர்ப்பதற்காக இந்த பாவ அறிக்கை சீட்டு என்கிற பணம் கொடுப்பதின் மூலம் பாவ மன்னிப்பு பெறலாம்கிற பழக்கமும் சபைக்குள் வந்தது.

ஆனால் இது விஷயமாக விவிலியம் என்ன கூறுகிறது பாருங்கள்.

1) லூக்கா 18:9-14-ஐ வாசிக்கும்போது, வரிதண்டலர் இறைவனிடம் வேண்டிக் கொள்வதற்கு ஆலயத்துக்கு வந்து தன் பாவங்களை ஒரு பாதிரியாரிடத்தில்

அறிக்கையிடவில்லை. மாறாக, தேவனிடத்தில் நேரடியாகவே பாவ அறிக்கை செய்து கொள்கிறான்.

2) லூக்கா 15:11-12 வசனங்களில் மனம் திரும்பி வந்த இளைய் மகன் நேரடியாக தன் தந்தையிடம் "அப்பா, நான் கடவுளுக்கும், உமக்கும் எதிராக பாவம் செய்தேன்" என்று முதலாவது தேவனிடமும், இரண்டாவதாக சம்பந்தப்பட்ட நபரிடமும் பாவ அறிக்கை செய்ததை வேதம் சுட்டிக்காட்டுகிறது. உனக்கும், உன் சகோதரனுக்கும் விரோதம் உண்டானால், பாதிரியாரிடம் போய் அறிக்கை பண்றதுனால பாவ மன்னிப்பை பெற முடியாது. மாறாக, நீ யாரிடம் விரோதம் கொண்டுள்ளாயோ அவனிடத்தில் சென்று ஒப்புரவாக வேண்டும் என்று வேதம் போதிக்கிறது.

3) மத்தேயு 5:23-25 சொல்லுவதைப் பாருங்க. "நீங்கள் உங்க காணிக்கையை பலிபீடத்தில் செலுத்த வரும் போது உங்க சகோதர, சகோதரிகள் எவருக்கும் உங்கள் மேல ஏதோ மனத்தாங்கல் உண்டென அங்கே நினைவுற்றால், அங்கேயே அந்த பலிபீடத்தின் முன் உங்கள் காணிக்கையை வைத்துவிட்டுப் போய், முதலில் அவரிடம், ஒரு நல்லுறவு ஏற்படுத்திக் கொள்ளுங்கள். பிறகு வந்து காணிக்கையை செலுத்துங்கள்" என்று வேதம் கூறுகிறது. மனத்தாங்கல் இருக்கிறது என்று பாதிரியாரிடம் அறிக்கையிடுவதால் எந்த பயனும் இல்லையே. அந்த சம்பந்தப்பட்ட நபரோடு ஒப்புரவாகவே வேதம் போதிக்கிறது.

4) மத்தேயு 18:15 கூறுவதையும் பாருங்கள். "உங்கள் சகோதரர், சகோதரிகளுள் ஒருவர் உங்களுக்கு எதிராகப் பாவம் செய்தால், நீங்களும் அவரும் தனித்திருக்கும்போது அவரது குற்றத்தை எடுத்துக் காட்டுங்கள். அவர் உங்களுக்கு செவி சாய்த்தால் நல்லது. உங்கள் உறவு தொடரும்"

இயேசுவைத் தவிர வேறு யாருக்கும் பாவத்தை மன்னிக்க அதிகாரம் இல்லை

5) இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்ட நாளிலே இயேசுவின் இரண்டு சீஷர்கள் அவர்களின் பாவத்தினால் பெரிய குற்ற மனசாட்சியுடையவர்களாக இருந்தார்கள். பேதுரு இயேசுவை மறுதலித்தார். யூதாஸ் காரியோத்து இயேசுவை காட்டிக் கொடுத்தான். பேதுரு மனங்கசந்து அழுதார். இயேசு அவரை மன்னித்து மறுபடியுமாக ஐக்கியத்தில் நிலைநிறுத்தினார். ஆனால் யூதாஸ் பிரதான ஆசாரியனிடத்தில் போய் "பழி பாவமில்லாதவரைக் காட்டிக் கொடுத்து பாவம் செய்தேன்" (மத்.27:4) என்றான். ஆனால் ஆசாரியர்கள் என்ன சொன்னார்கள்: "அதைப் பற்றி எங்களுக்கென்ன? நீயே பார்த்துக் கொள்" என்றார்கள். யூதாஸ் இதைக்கேட்டு நாண்டுகொண்டு செத்தான் (மத்.27:6).

பேதுரு தன் பாவங்களுக்காக தேவனிடத்தில் மனங் கசந்து அழுது வேண்டிக் கொண்டமையால் அவன் பாவங்கள் மன்னிக்கப்பட்டு மற்ற சீஷர்களோடும், இயேசு கிறிஸ்துவோடும் தன் உறவை நிலைநிறுத்திக் கொண்டான். ஆனால் யூதாஸ் தன் பாவத்தை ஆசாரியனிடத்தில் அறிக்கை செய்ததால் பாவ மன்னிப்பை பெற முடியாமல் நித்திய அக்கினியில் தள்ளப்பட்டான்.

6) அப்போஸ்தலனாகிய யோவான் கூறும்போது, "பாவம் நம்மிடம் இல்லை என்போமானால் நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்வோம். உண்மையும் நம்மிடம் இராது. மாறாக நமது பாவங்களை நாம் ஒப்புக் கொள்வோமென்றால் கடவுள் நம் பாவங்களை மன்னித்து, குற்றம் அனைத்திலிருந்தும் நம்மைத் தூய்மைப் படுத்துவார். ஏனெனில் அவர் நம்பிக்கைக்குரியவர். நேர்மையுள்ளவர்" (1 யோ.8:9). இங்கே யோவான்

தன்னை மற்ற சாதாரண விசுவாசிகளைப் போலவே நாம் பாவங்களை அறிக்கை செய்யும்போது கிறிஸ்து நம் பாவங்கள் அனைத்தையும் மன்னிப்பார் என்று கூறுகிறார்.

7) மேலும் பேதுரு கூறும்போது "அவரிடம் நம்பிக்கை கொள்ளும் அனைவரும் அவரது பெயரால் பாவ மன்னிப்பு பெறுவர் என்று இறைவாக்கினர் அனைவரும் அவரைக் குறித்து சான்று பகர்கின்றனர்" என்கிறார் (தி.பணி.10:43, 2:30).

8) மாய வித்தைக்காரனான சீமோன் திருத்தூதுவர்களிடம் இருந்த வல்லமையையும், அதிகாரத்தையும் தானும் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று அதற்காக பணம் கொடுக்க முன் வந்தான். அப்பொழுது பேதுரு அவரிடம் "கடவுளுடைய கொடையை பணம் கொடுத்து வாங்க எண்ணியதால் நீயும் உன் பணத்தோடு நாசமாய்ப் போ" என்று சபித்ததாக தி.பணி.8:20-ல் பார்க்கிறோம். பேதுரு இந்த விஷயத்தில் மாயவித்தைக்காரனோடு ஒத்துப்போகவில்லை. மேலும், "இப்போது மனம் மாறி ஆண்டவரிடம் மன்றாடு. ஒருவேளை உன் உள்ளத்தில் எழுந்த இந்த எண்ணம் மன்னிக்கப்படலாம்" என்று தி.பணி.8:22 சொல்வதையும் பார்க்கிறோம். முதல் போப்பாக நமது கத்தோலிக்க சகோதரர்களால் அங்கீகரிக்கப்பட்ட பேதுருவுக்கு ஒரு பாவியோட பாவங்களைக் கேட்டு மன்னிக்கின்ற அதிகாரம் இருந்திருந்தால் அதைச் செய்திருப்பாரே. ஏன் செய்ய வில்லை? ஏனென்றால் அப்படிப்பட்ட அதிகாரத்தை தேவன் எந்த அப்போஸ்தலருக்கும் கொடுக்கவில்லை. தேவன் ஒருவரே பாவங்களை மன்னிக்கிற அதிகாரம் உடையவராக இருக்கிறார்.

ஆகவே, எந்த ஒரு ஆசாரியருக்கோ, பாதிரியாருக்கோ, குருமார்களுக்கோ, போப்பிற்கோ, பாவங்களைக் கேட்டு மன்னிக்கின்ற அதிகாரத்தை கொடுக்கவில்லை என்று வேதம்

தெளிவாகக் கூறுகிறது. கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும் இதை சந்தேகத்துக்கு இடமின்றி தெளிவு செய்திருக்கின்றனர். தேவ சித்தத்திற்கு, வேதத்திற்கு புறம்பான காரியங்களை கடைப்பிடித்து விசுவாசிகளை குழப்ப வேண்டாம், ஏமாற்றவும் வேண்டாம்.

மரியாளுக்கு பாவத்தை மன்னிக்கும் அதிகாரம் இல்லை

பாபத்தில் சிக்குண்டு, பாவப் பழக்கவழக்கங்களுக்கு அடிமையாகி, நரகத்துக்கு சென்று கொண்டிருக்கும் மக்களை விடுவித்துக் காப்பதற்கே இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் மனித அவதாரம் எடுத்து வந்தார் என்று வேதாகமம் கூறுகிறது. "பாவிகளை மீட்க (இரட்சிக்க) இயேசு கிறிஸ்து இவ்வுலகத்திற்கு வந்தார் என்ற வார்த்தை உண்மையும், எல்லா அங்கீகரிப்பிற்கும் பாத்திரமுமானது" என்று 1 தீமோ.1:15 கூறுகிறது. "இரத்தம் சிந்தாமல் பாவ மன்னிப்பு உண்டாகாது" என எபி.9:22 சொல்கிறது. ரத்தம் சிந்தியது யார்? மரியாள் இரத்தம் சிந்தலையே.

இயேசு கிறிஸ்து மாத்திரமே உலகத்தின் பாவத்திற்காக இரத்தம் சிந்தினார்

இயேசுவின் சீஷர்களும் மற்றும் எண்ணிமாளாத பரிசுத்தவான்களும் இரத்த சாட்சியாக மரித்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் மரித்தது இயேசுவுக்காக, ஜனங்களின் பாவ மன்னிப்புக்காக இல்லை. இயேசு ஒருவரே நமது பாவங்களுக்காக மரித்தவர். அதனாலேயே வேதம் தெளிவாகக் கூறுகிறது. "இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மை சுத்திகரிக்கும்" என்று 1 யோவான் 1:7 கூறுகிறது. "அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாகி இருக்கிறது" என்று கொலோ 1:14 அடித்துக் கூறுகிறது. "அவராலே அன்றி (இயேசுவாலே அன்றி) வேறு ஒருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷருக்குள்ளே அவருடைய (இயேசுவுடைய) நாமமே அல்லாமல் வேறொரு நாமம்

கட்டளையிடப்படவில்லை" என்று சத்திய வேதம் (அப்.4:12-ல்) அறுதியிட்டு உறுதியாகக் கூறுகிறது.

"நாம் பாவங்களுக்கு செத்து, நீதிக்கு பிழைத்திருக்கும்படிக்கு இயேசு கிறிஸ்துதாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களை சிலுவையின்மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்" என்று 1 பேதுரு 2:24, 25 திட்டவட்டமாகக் கூறுகிறது. இயேசு கிறிஸ்து ஒருவரே நமது இரட்சிப்புக்கு, பாவ விமோசனத்திற்கு வழியாக இருக்கிறார் என்பதை அவரே சந்தேகத்துக்கு இடமில்லாமல் "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாய் இருக்கிறேன்" என்று யோவான் 14:6-ல் கூறுகிறார். "நம்முடைய பாவங்களை நிவர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே"

"நம்முடைய பாவங்களை மாத்திரமல்ல. சர்வ லோகத்தின் பாவங்களையும் நிவர்த்தி செய்கிற பலியாய் இருக்கிறார்"னு 1 யோ.2:2-ல சொல்லப்பட்ட பிறகும் மரியாள் நம் பாவத்தை மன்னிக்கிறார், புண்ணியர்கள் பேதுரு, பவுல், அந்தோணியார் நம் பாவங்களை எல்லாம் மன்னிக்கிறார்கள், கத்தோலிக்க குருமார்கள் நம் பாவங்களை மன்னிக்க முடியும் என்று நம்பினால் நாம் கண்ணிருந்தும் குருடர்களாய் இருப்பது போலத்தானே ஆகும்? "நம்முடைய பாவங்களை (இயேசுவிடம்) நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் (இயேசு) உண்மையும், நீதியும் உள்ளவராக இருக்கிறார்" என்று அழுத்தம் திருத்தமாக 1 யோ.1:9 கூறுகிறது. இயேசு ஒருவரால் மட்டுமே நம்மை பாவமற சுத்தீகரிக்க முடியும். வேறு யாராலும் அல்ல. அந்த அதிகாரம் வேறு எவருக்குமே கிடையாது. வேறு யாருக்கும் அதிகாரம் கொடுக்கப்படவில்லை. திருச்சபையை நம்பி வருகிற பாமர மக்களுக்கு நாம் நல்வழி காட்ட வேண்டும். வேதத்திற்கு புறம்பானதைக் கூறி அவர்களை ஏமாற்றக்கூடாது. "போதர்களின் வாயில் ஜனங்கள் சத்தியத்தை எதிர்பார்ப்பார்களே" அதற்காகவாவது குருமார்கள் வேதத்தை வாசிக்கணும். வேதம் சம்பந்தமாக வேத வல்லுனர்கள் எழுதியுள்ள விளக்கங்களையும் இவர்கள் கற்றுத் தேறணும்.

ஜனங்களின் ஆத்துமாக்களுக்கு உத்திரவாதம் அளிக்கின்ற ஆவிக்குரிய தந்தை அல்லவா குருமார்கள்?

ஓகே... சரி. அப்போ கத்தோலிக்க திருச்சபையும் அவர்கள் காட்டும் இந்த மேரி அல்லது மரியாள் யார் என்று தெரிய வேண்டுமா?. கத்தோலிக்கத்தில் தவறான உபதேசங்கள், சடங்காச்சாரங்கள், சிலை வழிபாடு, பண்டிகைகள் எல்லாம் எப்படி நுழைந்தது என்று தெரியணுமா?. அதற்கு சில பழைய வரலாற்றை, சரித்திரத்தை புரட்டி உங்களுக்கு காண்பிக்க வேண்டி இருக்கிறது. அது ஒரு நீடிய, பெரிய வரலாறு. ஆனால் அதைச் சொல்லித்தானே ஆகவேண்டி இருக்கு. கொஞ்சம் கசப்பாகத்தான் இருக்கும். பரவாயில்லையா? சரி படியுங்கள்.

பாபிலோன்

பாபிலோன் என்று அழைக்கப்படும் பாபிலோனிய சாம்ராஜ்யம் மிகவும் பழமை வாய்ந்ததாகும். மத்திய கிழக்குப் பகுதியில் இன்றைய துபாய் நாட்டினை முகத்துவாரமாகக் கொண்டு, ஈராக் தேசத்தின் வடபகுதி வரை, டைக்கிரிஸ் - யூப்ரட்டிஸ் நதிகளின் செழிப்பு மிக்க சமவெளிப் பகுதி முழுவதும் பாபிலோனிய சாம்ராஜ்யம் பரவி இருந்தது. இதற்கு முன்பு அது மெசபடோமியா என்று அழைக்கப்பட்டது. இங்கு சுமேரிய இனத்தவர்கள் வாழ்ந்து வந்தனர். இவர்களின் நாகரீகம் சுமேரிய நாகரீகம் என்றும், மெசபடோமிய நாகரீகம் என்றும் அழைக்கப்பட்டது. பைபிளில் இந்த பாபிலோனிய தேசத்தை "ஷினார் தேசம்" என்று குறிக்கப்பட்டு இருக்கிறது. கி.மு.12-ஆம் நூற்றாண்டில் இவர்களோடு கல்தேயர் இனமும் கலந்து பாபிலோன் மிகப் பெரிய சாம்ராஜ்யமாக உருவாகியது. இதன் காலம் கி.மு. 1125 முதல் 539 வரையாகும்.

பாபிலோனியக் கடவுள் வழிபாடு

இப்பிரபஞ்சத்தில் உள்ள கிரகங்களையும், இந்த பூமிக்கென்று இவர்கள் கற்பனையாய் செய்த தேவர்களையும், தேவதைகளையும், தேவ தூதர்களையும், பஞ்ச பூதங்களையும்

இவர்கள் வணங்கி வந்தனர். சூரியக்கடவுளாகிய ஷமாஷ் முக்கிய கடவுள். அப்கூ, திபாமத், ஈயா, மர்தூக் ஆகியவைகளை இரண்டாம் நிலைக் கடவுள்களாக வழிபட்டனர். கற்பனையாக உருவாக்கப்பட்ட இந்த தெய்வங்களுக்கு இவர்கள் கற்பனையாக பல கதைகளையும், புராணங்களையும், இதிகாசங்களையும் உருவாக்கி, அதன் அடிப்படையில் பண்டிகைகளையும், திரு-விழாக்களையும் கொண்டாடி வந்தனர். இவர்களுடைய கடவுள் கொள்கைகளும், அஞ்ஞானப் பழக்கவழக்கங்களும் பாபிலோனுடன் தொடர்புடைய பல அண்டை நாடுகளுக்கும், பிற மதங்களுக்கும் பரவியது. இந்த அஞ்ஞான மதப் பழக்க வழக்கங்களை வேதாகமம் பாபிலோன் என்ற பெயரிலேயே அழைக்கிறது.

பாபிலோனியத்தின் வேர்

பாபிலோன் ராஜ்யம் வேரூன்றுவதற்கு முந்திய தொடக்கக் காலத்தில் ஷினார் (சிநேயார்) தேசத்திற்கும் முன்பு இருந்த தேசங்களின் தலைவனாக நிம்ரோத் என்பவன் விளங்கினான். இவன் வேட்டையாடுவதில் மாவீரன். மிகுந்த பராக்கிரமசாலி (ஆதி. 10:8, 9, 1 நாளா. 1:10). இவன் நோவாவின் கொள்ளுப் பேரன். இவன்தான் பாபேல் பட்டிணத்தையும், மிக உயர்ந்த பாபேல் கோபுரத்தையும் கட்டியவன். கற்பனை தேவர்களையும், தேவதூதர்களையும், விக்கிரஹ வழிபாட்டின் மூலம் வணங்கும் அஞ்ஞான மார்க்கத்தை தொடங்கியவனும் இவனே. இவனுடைய மனைவியின் பெயர் செமிராமீஸ். இவளை வேதாகமம் வானராக்கினி என்று அழைக்கிறது (எரே. 44:16, 19).

நிம்ரோத்தை அவனுடைய இராஜ்யத்தின் மக்கள் கடவுளாகவே வணங்கினர். அதிலும் சூரியகிரஹத்துக்குரிய கடவுளாகவே பாவித்து வணங்கினார். நிம்ரோத் இறந்தபிறகு செமிராமீஸ் என்ற வானராக்கினியாகிய ராணியையும் ஜனங்கள் கடவுள் ஸ்தானத்தில் வைத்து வணங்கினார்கள். செராமீஸ் ராணிக்கு திடீரென்று ஒரு ஆண் குழந்தை பிறந்தது. ராஜ்யத்தின் மக்கள் அவளை சந்தேகத்துடன் பார்க்க ஆரம்பித்தனர். உடனே

தேசம் முழுவதற்கும் இவள் ஒரு செய்தியை பரப்பினாள். இறந்து போன இராஜாவும், சூரியக் கடவுளுமாகிய நிம்ரோத் தனக்கு மகனாக பிறந்திருக்கிறார் என்று அறிவித்தாள். மக்கள் அதை நம்பி ஏற்றுக்கொண்டு அவள் மகனை சூரியக் கடவுளாக வணங்கினார்கள். செமிராமீஸ் மகன் தம்மூசை நிம்ரோத்தின் இடத்தில் வைத்து தேவனாகக் கருதியதால், தம்மூஸின் தாயாகிய செமிராமீஸ் என்ற வானராக்கினியை தேவமாதாவாக அங்கீகரித்து வணங்கினர்.

தம்மூஸ் வளர்ந்து வாலிபனாக இருந்த காலத்தில் இஷ்டார் என்ற ஒரு தேவதை அவன்மீது பிரியமாக இருந்து, அவனை திருமணம் செய்து கொள்ள விரும்பியதாக ஒரு புராணக்கதை உள்ளது. இஷ்டாரை தேவதைகளின் தாயாகவும், வானத்தின் இராணியாகவும் மக்கள் வணங்கி வந்தனர். மக்களின் நம்பிக்கையின்படி இஷ்டார் என்ற தேவதையின் வேலை என்னவென்றால், இனப்பெருக்கத்தை கவனிப்பதும், தாவரங்களை நன்றாக விளையச் செய்வதும், பூத்துக் கனியச் செய்வதும், அனைவரிடத்திலும் அன்பாக இருப்பதுவும் ஆகும்.

தம்மூஸ் ஒருமுறை காட்டில் வேட்டையாடச் சென்ற போது ஒரு காட்டுப்பன்றி அவனைத் தாக்கிக் கொன்றுவிட்டது. அவன் ஆத்துமா பாதாளத்துக்கு சென்று விட்டதாகக் கருதினார்கள். இஷ்டார் தேவதைக்கு ஒரு சகோதரி தேவதை (தங்கை) இருந்தது. இதன் பெயர் நேரே ஏரஸ்கிகால். இது பாதாளத்துக்கு அதிபதி. இந்த தேவதை பாதாளத்துக்கு வந்த தம்மூஸ் மீது காதல் கொண்டு அவனை சிறைப்படுத்திக் கொண்டது. தம்மூஸ் மரணமடைந்துவிட்டதால் தம்மூசுக்காக இராஜ்யத்தின் மக்கள் அனைவரும் அழுதனர். அவன் இறந்த நாளை ஆண்டுதோறும் துக்க நாளாக அனுஷ்டித்தனர். புராணக் கதையின்படி தம்மூஸ் மீது பிரியமாக இருந்த இஷ்டார் தேவதை தம்மூசைத் தேடி பாதாளத்துக்கு சென்றது.

பாதாளத் தேவதையாகிய அவளின் தங்கை, இஷ்டாரையும் சிறைப்படுத்தினாள். அந்த நாட்களில் திடீரென்று

பயிர் விளைச்சல் நின்று போனது. இஷ்டார் இல்லாததால் தான் பூமியில் தாவரங்களின் விளைச்சல் பாதிக்கப்பட்டு, பூப்பதும், காய்ப்பதுவும் நின்று போயிற்று என்று கருதி மக்கள் இஷ்டார் தேவதைக்காக அழுதார்கள். பலி செலுத்துவதையும் நிறுத்தி விட்டார்கள். பலி நிறுத்தப்பட்டதால் தேவர்கள் பூமிக்கு இறங்கி வந்தார்கள். இஷ்டார் இல்லாததால்தான் பிரச்சனை ஏற்பட்டுள்ளது என்பதை அறிந்து இஷ்டார் தேவதையை கண்டுபிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டு கடைசியில் பாதாளத்தில் இருப்பதை கண்டுபிடித்தார்கள். பாதாளத்தில் இஷ்டாருக்காக பாதாளத் தேவதையிடம் வழக்காடி இறுதியில் இஷ்டாரை அழைத்துச் செல்ல அனுமதி பெற்றார்களாம். ஆனால் தம்மூஸ் வராமல் நான் வரமாட்டேன் என்று இஷ்டார் சொல்லிவிட்டதாம். கடைசியில் தம்மூசையும் பாதாள தேவதை அனுமதித்ததால் இருவரும் பூலோகத்துக்கு வந்தார்கள். பூமியில் தாவரங்கள் மீண்டும் பூத்துக் காய்த்தது என்று கூறி மக்கள் கொண்டாடினர். இது பிற்காலத்தில் இஷ்டாரின் பெயரில் ஈஸ்டர் பண்டிகை நாளாக மாறியது. (Ref: Babylon History, Hamlyn Encyclopedia / Will Durant History of Civilization, Vol.1, Page 238-239).

பாபிலோனிய சூரிய வழிபாடு

உலக மக்களினங்களில் எகிப்தியர், சுமேரியர், பாபிலோனியர், திராவிடர், ஆரியர் ஆகிய அனைவருமே சூரியனையே முதன்மைக் கடவுளாக கொண்டிருந்தனர். தென் பாபிலோனிய பகுதியைச் சேர்ந்த சுமேரியர்கள் தங்களை சூரியனிடமிருந்து தோன்றிய தேவர்கள் என்று பெருமையுடன் சொல்லிக் கொண்டனர். ஆரியர்களின் முதல் வேதமாகிய ரிக் வேதம் சூரியனை கடவுளாக போற்றிப் புகழ்கின்றது. பிற்காலத்தில் இதுவே காயத்ரி மந்திரமாகவும், ஸ்தோத்திரத் துதியாகவும் மாறியது. சூரிய வழிபாட்டுக்கென்றே இந்தியாவின் பல்வேறு இடங்களில் புராணப் புகழ்மிக்க கோயில்கள் உள்ளன. அக்கினி, ஆதித்தியன், மித்திரன், பாஸ்கரன் ஆகிய பெயர்களால் சூரியன் வணங்கப்படுகிறான். நாராயணன் என்ற நாமமும் சூரியனுக்கே உரியது.

பெர்ஷியாவின் ஜொராஷ்ட்ரிய சூரிய வழிபாடு அக்னி வழிபாடாகவே உள்ளது. மத்திய அமெரிக்க பழங்குடி மக்களாகிய மாயன் இனத்தவரும், அசிரியர்களும், கிரேக்கர்களும், ரோமானியர்களும் சூரிய வழிபாட்டையே முக்கிய வழிபாடாக கொண்டிருந்தனர். நமது நாட்டில் ஆரியர்கள் சூரிய வழிபாட்டை அக்னி வழிபாடாக ஹோமம், வேள்விகளை வளர்த்து தீ வழிபாட்டையே இன்றும் செய்து வருகின்றனர். வார நாட்களில் முதலாம் நாளை இவர்கள் யாவரும் சூரியனுக்குரிய நாளாகவும், விடுமுறை நாளாகவும் அனுசரித்தனர். இதன் மூலம் இப்பிரபஞ்சத்தின் அதிபதி சூரியக் கடவுளாக வணங்கப்பட்டு மகிமைப்படுத்தப்பட்டான். இதுவே பாபிலோனிய ஞாயிறு வழிபாடாக (ஞாயிறு=சூரியன்) Sunday Worship ஆக ஆகியது.

பாபிலோனிய தேவாலய ஊடுருவல்

ரோம சாம்ராஜ்யத்தின் பிற்பகுதியான 4-ம் நூற்றாண்டில் கான்ஸ்டைன்டின் என்பவன் ரோம சாம்ரஜ்யத்தின் சக்ர வர்த்தியாக இருந்தான். இவனுடைய மனைவியாகிய ராணி ஹெலினா ஒரு கிறிஸ்தவ மார்க்க விசுவாசியாக இருந்தாள். பிற தேசங்களின் மீது படையெடுத்துச் சென்று தோல்வி அடைந்து மனம் நொந்து திரும்பிக் கொண்டிருந்த கான்ஸ்டைன்டின் அரசனிடம், நீங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை வணங்கிவிட்டு படையெடுத்துச் செல்லுங்கள் என்று ராணி கூறினாள். அதை அவன் ஏற்றுக்கொண்டு இயேசு கிறிஸ்துவை வணங்கிவிட்டுச் சென்றான். போர்க்களம் நோக்கி படைகளும், கான்ஸ்டைன்டினும் போய்க்கொண்டு இருக்கையில், வானத்தில் பற்றி எரியும் ஒரு சிலுவைச் சின்னம் தோன்றியது. அதன் கீழே “இன் ஹாக் சின்னோ வின்சஸ்” என்ற லத்தின் வாசகமும் காணப்பட்டது. இதன் அர்த்தம் “இந்த அடையாளச் சின்னத்தின் மூலம் நீ வெற்றி பெறுவாய்” என்பதாகும். கான்ஸ்டைன்டின் உடனே தனது போர் வீரர்களின் கேடயங்களில் சிலுவை சின்னத்தை வரையுமாறு கட்டளையிட்டான். போரில் கான்ஸ்டைன்டின் மிக எளிதாக மாபெரும் வெற்றியை பெற்றான். தொடர்ந்து

பல வெற்றிகளையும் கண்டான். அவன் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு அவன் வெளியிட்ட நாணயத்தின் ஒரு பக்கத்தில் இயேசு கிறிஸ்துவின் உருவத்தையும், மறுபக்கம் சூரியக்கடவுளின் உருவத்தையும் பொறித்தான். இதன் காரணமாக ரோம ராஜ்யம் முழுவதும் கிறிஸ்தவ மதத்தை ஏற்றுக்கொண்டது. அது முதல் கிறிஸ்தவ மதம் என்பது ரோம சாம்ராஜ்யத்தின் அதிகாரப்பூர்வமான மதமாக மாறியது.

ஞாயிறு ஆராதனை

ரோம சாம்ராஜ்யத்தின் மக்கள் வாரத்தின் முதல் நாளையும், ஞாயிற்றுக் கிழமைகளில் ஓய்ந்திருந்து சூரியக் கடவுளை வணங்கி வந்தனர். ஞாயிறே ராஜ்யத்தின் விடுமுறை நாளாகவும் இருந்தது. அதுவரை கிறிஸ்தவ தேவாலயத்தின் ஒய்வு நாள் ஆசரிப்பாக வாரத்தின் ஏழாம் நாள் (சனிக்கிழமை) அனுசரிக்கப்பட்டு வந்த ஆசரிப்பு ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றப்பட்டது. (A doctorinal catechism by Stephen Keenan - p.174 Decretal - de - Translantic Episode / The Canverts Catechism Catholic Doctrine, P.50). புனிதத்தன்மை வாய்ந்த நாளாகிய ஞாயிறு அன்று ஓய்ந்திருக்க வேண்டும் என்று அறிவிக்கும் சட்டத்தை கான்ஸ்டைன்டின் கி.பி.321-ல் வெளியிட்டான். இதுவே உலகத்தின் முதலாவது ஞாயிறு ஆசரிப்புச் சட்டம் (Edict of March 7, 321 AD. Corpus Juris Civilis Code Lib. 3, tit. 12, Lex 3). சூரியனையும், இதர கிரஹங்களையும், கற்பனையான தேவர்களையும், தேவதைகளையும், சூரியனுக் குரிய ஞாயிற்றுக்கிழமைகளில் வணங்கி வந்த அஞ்ஞான மார்க்க ரோமாபுரி மக்கள் தேவாலயத்திற்குள் பிரவேசித்து பெரும்பான்மையினர் ஆகிவிட்டபடியால் சனிக்கிழமையில் ஓய்ந்திருந்து ஆலயம் செல்வோர் மிகச் சிறுபான்மையினர் ஆகி, ஆலயத்துக்கு ஆகாதவர்களாக ஆக்கப்பட்டனர். கான்ஸ்டைன்டின் வெளியிட்ட சட்டத்தைத் தொடர்ந்து கி.பி.336-ல் பிஷப்மார்கள் லவோதிக்கியாவில் ஒன்று கூடி கீழ்க்கண்ட தீர்மானத்தை நிறைவேற்றினர்.

“கிறிஸ்தவர்கள் யூதருக்குரிய சடங்காச்சார முறைமை-யின்படி சாபத் ஓய்வு நாளில் (சனிக்கிழமையில்) ஓய்ந்திருத்தல்

கூடாது. கர்த்தருடைய நாளை மதித்து ஓய்ந்திருப்பதற்குப் பதில் அந்த நாளில் வேலை செய்ய வேண்டும்" என்று முடிவு செய்யப்பட்டது. (Canon XXIX Index Canonum P.259 and Commentary on the Psaloms, Vol:23, Eve.1171).

சூரியக் கடவுளை ஞாயிற்றுக்கிழமை ஓய்வின் மூலமாக கனப்படுத்தப்பட வேண்டும் என்று ஜஸ்டினியன் மன்னனின் காலத்தில் உத்தரவிடப்பட்டது. (The code of Justinian, Book III, Title 12, Law 3). ரோமாபுரிக்கு வெளியில், ஐரோப்பிய - ஆசிய பகுதிகளிலும், எகிப்திலும் இயங்கி வந்த திருச்சபைகளில் அதுவரை ஆசரிக்கப்பட்டு வந்த ஏழாம் நாள் ஆசரிப்பு (சனிக்கிழமை), அச்சபைகள் ரோமாபுரி பிஷப்புகளின் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வரப்பட்டபோது முதலாம் நாளில் (ஞாயிற்றுக்கிழமைகளில்) ஓய்வு நாள் ஆராதனையை ஆசரிக்கும்படி மாற்றம் செய்யப்பட்டது (Champer's Encyclopedia "Art Sunday").

தேவாலயத்தில் பாபிலோனிய ஆதிக்கம்

ரோம சாம்ராஜ்யம் தனது அஞ்ஞான மத நம்பிக்கை களுடன் அப்படியே முழுமையாக கிறிஸ்தவத்தை பெயரளவில் தழுவிக் கொண்டது. சுருங்கச் சொல்லப்போனால் பாபிலோனியம் எனப்படும் அஞ்ஞான மதம் பெயர் மாற்றமும், உருமாற்றமும் செய்து கொண்டது. அது முதல் ரோம சாம்ராஜ்யமும், கிறிஸ்தவ மதமும் ஒன்றாயின. முதலாம் நூற்றாண்டில் தொடங்கிய அப்போஸ்தலர்களின் மெய்க்கிறிஸ்தவக் காலத்தை அடுத்து கி.பி. 4-ஆம் நூற்றாண்டில் ரோமன் கத்தோலிக்கம் உருக்கொண்டபோது உலக மகா சாம்ராஜ்யங்களின் அஞ்ஞான மார்க்கக் கொள்கைகள் ரோமன் கத்தோலிக்கத்தில் பிரதி பலிக்கத் தொடங்கின. (Christian thought by Tony Lane - Page 11). பெயரளவில் கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்ட அஞ்ஞான மதத்தினரின் ஆதிக்கத்தின் கீழான ரோமப் பேரரசு தேவ கட்டளைகளுக்கு கீழ்படியும் மெய்ஞான கிறிஸ்தவ மார்க்கத்தாரை தொடர்ந்து வேட்டையாடியது. ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவ பொது ஆலோசனைச் சங்கம் லவோதிக்கியாவில் கி.பி.364-ல்

கூடி சிலை வழிபாட்டையும், சூரிய வழிபாட்டுக்குரிய ஞாயிறு தின ஆசரிப்பையும் அங்கீகரித்தது. கி.பி.538-ல் போப்பின் ஆதிக்கம் முழுமை பெற்றது.

கி.பி.787-ல் கூடிய இரண்டாவது நிசாயா சங்கம் இவைகளை அங்கீகரித்ததுடன், பத்துக் கட்டளைகளில் இரண்டாம் கட்டளையை முழுமையாக அகற்றிவிட்டு, நான்காம் கட்டளையில் உள்ள ஏழாம் நாளை எடுத்துவிட்டு, பத்துக் கட்டளைகளின் எண்ணிக்கை குறையாமல் இருப்பதற்காக பத்தாம் கட்டளையை இரண்டாகப் பிரித்து உத்தரவிட்டது. (Eccalesiastical Annals, Vol.9, Page 39, 40) (இதன் விபரத்தை கத்தோலிக்க பட்லர் கேட்டசிஸம் புத்தகம் பக்கம் 28-ல் உள்ள பத்துக் கட்டளைகளுடன் இன்றைய புராட்டஸ்ட்டெண்ட்டின் பைபிள் யாத். 20:3-17-ல் உள்ள பத்துக் கட்டளைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கவும்).

இதன் காரணமாக ரோமன் கத்தோலிக்கத்தில் சூரிய வழிபாட்டுக்குரிய ஞாயிறு தின ஆசரிப்பு, சிலை வணக்கங்கள், தேவமாதா வழிபாடு, அப்போஸ்தலர்கள் வழிபாடு, மரண மடைந்தவர்கள் மோட்சத்திலோ அல்லது உத்தரிக்கும் ஸ்தலத்திலோ இருக்கிறார்கள் என்ற நம்பிக்கை, மோட்சம், நரகம் குறித்த தவறான கருத்துக்கள், இம்மை வாழ்க்கை, இவ்வுலக வாழ்க்கை குறித்த பல தவறான நம்பிக்கைகள் ஏற்பட்டன.

கிறிஸ்தவத்தில் பாபிலோனியப் பண்டிகைகளும், வழிபாடுகளும்

கிறிஸ்தவத்தை பெயரளவில் ஏற்றுக்கொண்ட மக்களின் மனம் பழைய அஞ்ஞான மார்க்க தேவதூதர் - தேவதை வழிபாடுகளிலேயே நிலைத்திருந்தது அவர்களின் மனதில் பாரம்பரியப் புராண இதிகாசக் கதைகளே நிறைந்திருந்தன. சிலை வணக்கத்தில் ஊறிப்போயிருந்த அவர்கள் மனதுக்கு தேவாலயத்திற்குள்ளும் சிலைகள் தேவைப்பட்டன. அஞ்ஞான மார்க்கத்தை அப்படியே மனதில் வைத்துக் கொண்டு தங்கள்

வழிபாட்டுக்குரிய கடவுளர் பாத்திரங்களுக்கு உருவ மாற்றமும், இட மாற்றமும் செய்து கொண்டனர். இதன்படி அவர்கள் மனதில் இருந்த சூரியக்கடவுளாகிய தம்மூசின் இடத்தில் இயேசு கிறிஸ்துவை வைத்தனர். தம்மூசின் மாதாவாகிய செமிராமீசின் இடத்தில் இயேசு கிறிஸ்துவின் மாதாவாகிய மரியாளுக்கு மட்டுமின்றி, யோசேப்பிற்கும், அப்போஸ்தலர் களுக்கும் சிலைகளை உண்டாக்கிக் கொண்டு தங்கள் சிலை வணக்க தாகத்தை தணித்துக் கொண்டனர்.

தம்மூசுக்காக வருஷத்தில் ஒருநாள் அழுது கொண்டிருந்த அழுகையை இயேசு கிறிஸ்துவின் பாடு மரண நாளுக்காக புனித வெள்ளி (Good Friday) என்று மாற்றிக் கொண்டனர். தேவனுடைய தேவாலயத்தின் வாசலில் தம்மூசுக்காக அழுது கொண்டிருப்பதை எசேக்கியல் 8:14-ல் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டு இருக்கிறது. தம்மூசுக்காக அழுகின்ற அழுகை இயேசுவுக்காக அழுவதாக பெயர் மாறியது. இஷ்டார் தேவதை பாதாளத்திலிருந்து மீண்டும் பூலோகத்திற்கு வந்த மகிழ்ச்சியின் நாளை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த மூன்றாம் நாளுக்கு மாற்றிக் கொண்டு மகிழ்ச்சியின் நாளாக கொண்டாடப்படுகிறது. இப்படியே இஷ்டார் நாள் ஈஸ்டர் தினமாக மாறியது.

சுமேரியர், செமித்திய அக்காடியர், அசீரிய அம்மோனியர், கல்தேயர் ஆகிய இனத்தவரின் ஆளுகையின் கீழ் பாபிலோன் இருந்த காலங்களில் வழக்கில் இருந்த மத நம்பிக்கைகள், பண்டிகைகள், சடங்காச்சாரங்கள், கலாச்சாரங்கள் ஆகிய யாவும் கிழக்கு மற்றும் மேற்கு தேசங்களுக்குப் பரவியதுடன் அரபு மற்றும் எகிப்து தேசங்களுக்கும் சென்றடைந்தன. சனிக்கிரஹ கடவுளுக்கென்று டிசம்பர் மாதம் 17-ஆம் தேதி முதல் 24-ஆம் தேதி வரை சாட்டர்னாலியா பண்டிகை கொண்டாடப்பட்டது. மறுநாள் டிசம்பர் 25 அன்று சூரிய கிரஹணத்துக்குரிய மித்ராஸ் பண்டிகை கொண்டாடுவது வழக்கம். சாட்டர்னாலியா பண்டிகையையும், மித்ராஸ் பண்டிகை வழிபாடும் மெசபட்டோமியா பூமியில் தொடங்கி மத்திய தரைக்கடல் வழியாக கிரேக்கம் சென்று பின்னர் ரோமானிய

தேசத்தில் நிலை கொண்டது. ரோமானியம் கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டபோது சேட்டர்னஸ் மற்றும் மித்ராஸ் வழிபாடும், பண்டிகையும் பெயர் மாற்றத்துடன் கிறிஸ்மஸ் பண்டிகையாக மாறியது.

ரோமானிய ஜனூஸ் தெய்வத்தின் ஜனவரி முதல் நாள் புத்தாண்டு பிறப்பு கொண்டாட்டம் கிறிஸ்தவத்திற்குரிய புது வருட ஆராதனையாக பின்னர் மாறியது. [(1) The Buffalo News Nov.22, 1984, (2) Encyclopedia of World Religions by GT Bettany, Page 363 - 364, (3) Encyclopedia Britanica 15th Edition, Vol.II, Page 903, (4) Biblical Sacca, Vol.12, page 152 - 155].

சூரியக்கடவுளின் இடத்தில் இயேசு கிறிஸ்துவை வைத்துக் கொண்டதால் அந்தப் பண்டிகையின் கடைசி நாளாகிய டிசம்பர் 25 கிறிஸ்மஸ் ஆனது. பரிசுத்த வேதாகமத்தில் கிறிஸ்மஸ் என்ற வார்த்தையும் இல்லை. கிறிஸ்துவின் பிறப்பையும். இறப்பையும் கொண்டாடச் சொல்லி எங்கேயும் எழுதப்படவும் இல்லை.

1998-ஆம் ஆண்டு, டிசம்பர் 25-ஆம் தேதி அன்று இந்து ஆங்கில நாளிதழ் வெளியிட்டுள்ள ஒரு கட்டுரைச் செய்தியை பாருங்கள்.

“வரலாறு வெளிப்படுத்துகிறபடி கிறிஸ்மஸ், புது வருடம் ஆகிய பண்டிகைகள் அஞ்ஞான மார்க்கத்தார் தங்களுடைய விக்கிரஹ கடவுள்களை மகிமைப்படுத்துவதற்காக பாபிலோனில் கொண்டாடியவைகள் ஆகும். இவைகள் பின்னாட்களில் ரோமாபுரி கான்ஸ்டைன்டின் ராஜாவின் புதிய கிறிஸ்தவ மதத்திற்கு அஞ்ஞான மார்க்கத்தினரை மதம் மாற்றி கொண்டு வருவதற்காக கிறிஸ்தவ தேவாலயத்தின் மூலம் கிறிஸ்தவ அர்த்தம் கற்பிக்கப்பட்டன. அஞ்ஞான மார்க்கத்தினரை மதம் மாற்றிக் கொண்டு வருவதற்காகவே கத்தோலிக்க தேவாலயம் பழங்காலப் பாரம்பரிய பாபிலோனிய விருந்துகளையும், பண்டிகைகளையும் மிகவும் அர்த்தப்படுத்தி கிறிஸ்துவின் பெயரால் மறுபெயர் இட்டு அழைத்தன.

தேவன் தனது தீர்க்கதரிசி மூலம் அறிவிக்கிறார் "அஞ்ஞான மார்க்கத்தினரின் வழியை கற்றுக் கொள்ளாதிருங்கள்" என்று வெளி.18:4 மூலம் கூறுகிறார். "பின்பு வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளை விட்டு வெளியே வாருங்கள்" என்று எச்சரிக்கிறது. (அவள் என்பது பாபிலோனியம்) கிறிஸ்மஸ் என்ற பெயரில் கொண்டாடும் இந்த கொண்டாட்டங்கள் 4000 வருஷங்களுக்கு முன்னதாகவே தொடங்கி விடுவதால் அதில் கிறிஸ்தவத்திற்கே இடமில்லை. கிறிஸ்து பெத்லகேமில் பிறப்பதற்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகவே பழமையான பாபிலோனிய கொண்டாட்டமாக அது தொடங்கி விடுகிறது.

பன்னிரெண்டு நாட்கள் கிறிஸ்மஸ், பிரகாசமான நெருப்பு, யூல் மரம், அன்பளிப்பு, பரிமாற்றம், திருவிழா, ஆடல் பாடல், கேளிக்கை ஆகிய யாவும் கிறிஸ்து பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தொடங்கி விட்டன. பழமையான இந்த பாபிலோனிய திருவிழா கிரேக்கத்தின் வழியாக ரோமாபுரிக்கு சென்று அங்குள்ள சாட்டர்னாலியா திருவிழாவில் இரண்டறக் கலக்கிறது. இறுதியில் ரோமப் பேரரசின் கான்ஸ்டைன்டின் ராஜா காலத்தில் கிறிஸ்தவத்தை அரசாங்க மதமாக ஏற்றுக் கொண்டபோது கிறிஸ்தவ மதத்திற்குரியதாக கிறிஸ்மஸ் என்ற புதிய பெயர் சூட்டப்பட்டது. பழங்கால களிப்பூட்டும் நிகழ்ச்சிகளும், அன்பளிப்பு, பரிமாற்றம், விருந்து, விசேஷமரம் எல்லாமுமே முன்பு இருந்தது போலவே இப்பவும் தொடர்கின்றன. ஆனால் தற்போது அது கிறிஸ்தவக் கடவுளை துதிப்பதற்காக என்று புதிய அர்த்தம் கற்பிக்கப்படுகிறது". The Hindu, 23.12.1998. மேலும் சில ஆதாரப்பூர்வமான செய்திகளைப் பாருங்கள்.

"கிறிஸ்மஸ் என்ற பண்டிகை ஆரம்ப காலத்தில் திருச்சபையில் கொண்டாடப்படவில்லை. இது எகிப்திய அஞ்ஞானப் பண்டிகை கொண்டாட்டங்களில் ஒன்றாக இருந்தது. எகிப்தியர் காலண்டர் முறையை ஏற்றுக்கொண்டபோது இந்தப்

பண்டிகை கிறிஸ்துவின் பெயருக்குரியதாக மாற்றப்பட்டது" Catholic Encyclopedia 1911.

"சோல் என்ற ரோமானிய சூரியக் கடவுளின் பிறந்த நாள் கொண்டாட்ட நாளில் கிறிஸ்துவின் பிறந்த நாள் பண்டிகையை கொண்டாட வேண்டும் என்று மேற்கத்திய (ஐரோப்பிய) சபை கிழக்கத்திய சபைக்கு உத்திரவிட்டது" Encyclopedia, America, 1956.

"கிறிஸ்மஸ் தாத்தா சாண்டா கிளாஸ் என்ற பெயரை செயிண்ட் நிக்கோலஸ் என்பவருடன் தொடர்புபடுத்துகின்றனர். ஆனால் இந்தப் பெயர் பழைய பாபிலோனின் நிக்கோலஸ் மதத்துடனும், பிள்ளைகளை பலி கேட்கும் சாண்டா என்ற பேய் தெய்வத்துடனும் தொடர்புடையதாக இருக்கிறது" - Langer's Encyclopedia of World History.

"ஐரோப்பாவில் கிறிஸ்தவம் பரவியபோது குறிப்பிட்ட பருவகால கொண்டாட்டங்கள் (Seasonal Celebrations) சில சிக்கல்களை ஏற்படுத்தின. உருவ வழிபாட்டுக்காரர்கள் கிறிஸ்தவக் கோட்பாடுகளை ஏற்றுக் கொள்ள உடன்பட்டாலும், அவர்கள் கொண்டாடி வந்த திருவிழாக்களை கைவிடத் தயாராக இல்லை. இதனால் பழைய விழாக்களுக்கு கிறிஸ்தவ மறைபொருள் கொடுக்கப்பட்டது. இதன் அடிப்படையிலேயே இயேசு பிறந்த நாளான கிறிஸ்மஸ், புனிதர் பெருவிழா, அனைத்து ஆத்துமாக்களின் நாள் (All Souls Day) போன்ற விழாக்கள் தோன்றின" - Smith 1972, Page 162 - 63.

பாபிலோனிய "ஆங்க்"

கி.மு.2500-க்கு முந்திய எகிப்தில் வாழ்க்கைக்குரிய அடையாளமாக சிலுவை போன்ற ஒரு சின்னத்தை எகிப்தியக் கடவுள்கள் சுமந்து செல்வதாக சித்தரிக்கப் பட்டிருந்தனர். இந்த சின்னத்திற்கு "ஆங்க்" என்று பெயர். இது ஏறக்குறைய சிலுவை வடிவத்தைப் போன்ற ஒரு சின்னமாகும். இதன் தலைப்பகுதி மாத்திரம் முட்டை வடிவத்தில் வளையமாக அமைந்திருக்கும். எகிப்தியர்களின் சந்ததியர்களாகிய காப்ட்

(copt) இனத்தவர்கள் தங்களின் ஆலய வழிபாட்டுச் சின்னமாக இந்த "ஆங்க்" சின்னத்தை பயன்படுத்தினர். பிற்காலத்தில் இவர்கள் கிறிஸ்தவத்தைத் தழுவியபோது, "ஆங்க்" சின்னத்தையும் வழிபாட்டுக்குரியதாக தங்களுடன் தொடர்ந்து கொண்டு வந்தனர். இதுவே கத்தோலிக்க மதச்சின்னமாக பின்பு மாறியதாக சில ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ஏனெனில் கிறிஸ்துவின் காலத்தில் அப்போஸ்தலர்கள் சிலுவை சின்னத்தை மதச் சின்னமாக அறிமுகப்படுத்தியதாகவோ அல்லது தங்களுடன் எடுத்துச் சென்றதாகவோ எந்த வேதாகமக் குறிப்புகளோ அல்லது வரலாற்றுக் குறிப்புகளோ இல்லை. சிலுவை என்பது ஒரு மெய்க் கிறிஸ்தவன் இந்த உலகில் அனுபவித்துத் தீர வேண்டிய பாடுகள் மற்றும் உபத்திரவங்களின் சின்னம் என்றே வேதாகமம் கூறுகிறது.

பாபிலோனிய மதக் கொள்கைகள்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மானிடப் பிறப்பிற்கு தாயாகிய மேரியை ஒரு கடவுளாக வணங்குவதற்கு பரிசுத்த வேதாகமம் எங்கேயும் கூறவில்லை. இயேசு கிறிஸ்து மனிதனாய் இந்த உலகில் வாழ்ந்தபோது மேரியாகிய தன் தாயை எந்த ஒரு சூழ்நிலையிலும் அம்மா என்று ஒருமுறைகூட அழைக்கவில்லை. மாறாக ஸ்திரியே என்றுதான் அழைத்துள்ளார். மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய புத்தகங்களுக்குப் பிறகு மேரியைக் குறித்து வேதாகமத்தில் எந்தவிதக் குறிப்பும் இல்லை. ஏற்கனவே குறிப்பிட்டு இருக்கிறபடி அஞ்ஞான மத இதிகாச புராணக் கதைகளின்படி நம்பிக்கைகளை வளர்த்துக் கொண்ட மக்கள் மனம், கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்டபோது தாங்கள் முன்பு வணங்கி வந்த பழைய கடவுளர் பாத்திரங்களை கைவிட முடியாதபடி, கிறிஸ்தவ தேவாலயத்திற்குள்ளும் அவைகளுக்குரிய இடத்தைத் தேடினர். பாபிலோனின் முன்னோடி ராஜ்யத்தில் செமிராமீஸ் என்ற ராணி தேவமாதா ஆனதையும், அவள் கையில் தம்மூஸ் என்ற குழந்தை சூரியக் கடவுளாக இருந்ததையும் மானிட மனம் அழியாத சித்திரமாக உள்ளத்தில் பன்னெடுங்காலமாக தீட்டி இருந்தது. இந்த மனோச்சித்திரம் காலங்களைக் கடந்து

தேவாலயத்திற்குள் நுழைந்தபோது, அதற்குப் பொருத்தமான ஒரு புதிய கதாபாத்திரத்தை கண்டு கொண்டது. இதற்குரிய அங்கீகாரம் கொடுப்பதற்காகவே கி.பி.431-ல் எபேசு சங்கத்தால் "தியோடோகோஸ்" என்ற பட்டம் மேரிக்கு புனையப்பட்டு இயேசு கிறிஸ்துவுக்கும் மேலான ஒரு கடவுள் ஸ்தானம் மேரிக்கு கொடுக்கப்பட்டது. தியோடோகோஸ் என்றால் "தேவனுடைய தாய், தேவமாதா, தேவனை சுமந்து கொண்டிருப்பவள்" என்று அர்த்தமாகும்.

இதுபோலவே எபேசு பட்டணத்தின் அர்த்தெமிஸ் என்ற பெண் தெய்வத்தை வணங்கி வந்த மக்கள், கிறிஸ்தவத்தை ஏற்றுக்கொண்டு தேவாலயம் வந்தபோது அர்த்தமிஸ் இடத்தில் மேரியை வைத்துக் கொண்டனர். கிறிஸ்தவத்தை ஏற்றுக் கொண்ட எகிப்தியர்கள் தாங்கள் வணங்கி வந்த ஐசிஸ் என்ற தேவதையின் இடத்தில் மேரியை வைத்துக் கொண்டனர். இதில் வியப்பிற்குரிய இன்னொரு உண்மை என்னவென்றால் ஹோரஸ் என்ற சூரியக்கடவுளுக்கு இந்த ஐசிஸ் தேவதை தாய். ஐசிஸ் தனது மடியில் ஹோரசை வைத்திருப்பதாகவே இதன் உருவச்சிலை அமைந்திருக்கிறது. அதேபோல தம்மூஸ் என்ற சூரியக்கடவுளை செமிராமீஸ் என்ற வான தேவதை தன் கையில் வைத்திருப்பதையும் இங்கு நினைவுபடுத்திக் கொள்ளவும்.

மேற்கொண்ட அஞ்ஞானக் கற்பனைக் கொள்கைகளின் ஆதிக்கத்தின் காரணமாகவே, "இயேசு கிறிஸ்து ஒரு கடவுள். எனவே, அவரின் தாயாக இருப்பவரும் கடவுளே" என்ற கொள்கை கி.பி.431-ல் கத்தோலிக்கத்தால் முறைப்படி வகுத்துக் கொள்ளப்பட்டது. (General Councils of the Church, Page.30).

சாத்தானின் உபதேசங்கள்

"ஆத்துமா அழியவே அழியாது" என்று ஏதேன் தோட்டத்தில் சாத்தான் தொடங்கிய மூல உபதேசம் அஞ்ஞான மார்க்கங்களின் வழியாய் செழித்து வளர்ந்தது. கிறிஸ்தவத்தின் பெயரால் மத ஆட்சியைத் தொடங்கிய ரோமன் கத்தோலிக்கத்தில் இக்கொள்கை வலுவடைந்து வேதாகமத்திற்குப் புறம்பான

பாதையில் மக்களை வழிநடத்தியது. மரணமடைந்தவர்கள் எல்லாவற்றையும் உணரும் உணர்வுகளுடன் ஆத்துமாவாக இருக்கிறார்கள். கிரியை செய்கிறார்கள், உத்தரிக்கும் ஸ்தலத்தில் இருக்கிறார்கள், நம்முடைய ஜெபங்களைக் கேட்கிறார்கள், அழைத்தவுடன் வருகிறார்கள். நமக்கு நன்மைகளை செய்கிறார்கள் என்ற நம்பிக்கைகள் "ஆத்துமா அழியவே அழியாது" என்ற சாத்தானின் மூல உபதேசத்தை அடிப்படையாகக் கொண்டது. வருஷத்தில் ஒருநாள் அவர் களுக்காக ஜெபம் பண்ணி அவர்களை வழிபடும் "அனைத்து ஆத்துமாக்களின் நாள்" (All Souls Day) என்ற தினத்தை ரோமன் கத்தோலிக்கம் ஏற்படுத்தித் தந்தது. வருஷத்துக்கு ஒருமுறை இறந்தவர்களுக்காக திதி - தெவசம் செய்வதும், கல்லறைகளுக்கு சென்று கல்லறைத் திருநாள் கொண்டாடுவதும் சாத்தானிய உபதேசத்தின் காரணமாக ஏற்பட்டவைகளாகும். அவர்கள் நியாய விசாரணைக்கு உட்பட்டவர்களாய் நியாயத் தீர்ப்புக்கு என்று வைக்கப்பட்டு இருக்கிறார்கள் என்று வேதம் தெளிவாய் போதிக்கிறது. அவர்களை வணங்குவதால், வணங்குகிறவர்களுக்கும் பயன் இல்லை. வணங்கப்படுகிற மரித்தோருக்கும் எந்தவொரு பயனும் இல்லை. இப்படிச் செய்வதினால் நாம் தேவ கோபத்திற்கு ஆளாவதைப் பார்த்து சாத்தான் திட்டம் வெற்றி அடைந்ததாக அவன் கைகொட்டிச் சிரிக்கிறான்.

ஆண்டவருடைய பாடுகளின் மரணத்தை எண்ணி 40 நாட்கள் லெந்து என்ற பெயரில் துக்கம் கொண்டாடுவதன் மூலமும், விரதம் இருந்து நோன்பு இருப்பதன் மூலமும், ஜெபமாலையை உருட்டியவண்ணம் தேவ நாமத்தை ஜெபிப்பதன் மூலமும், கால்நடையாய் புண்ணிய சேக்ஷத்திரங்களுக்கு புனிதப் பயணம் செய்வதின் மூலமும், துறவி வேடம் தரித்துக் கொள்வதின் மூலமும், புரியாத அந்நிய பாஷைகளைப் பேசுவதின் மூலமும், மோட்சம் போய்விடலாம் என்று எண்ணுவதெல்லாம் பாபிலோனிய அஞ்ஞான மார்க்க போதகங்களின் தொடர் விளைவுகளே ஆகும். ஆல் கோஸ்ட் டே, ஆஷ் வெட்னஸ் டே, குட் ஃபிரைடே, ஈஸ்டர், கிறிஸ்மஸ், நியூ இயர், பாம்

சண்டே, டிரினிட்டி நாள், கருவுற்ற நாள், பரலோகம் சென்ற நாள் என்பவைகளுக்கு வேதத்தில் எந்த ஆதாரமும் இல்லை. இவைகள் அனைத்தும் பாபிலோனிய உபதேசங்களின் மறுபதிப்புக்களே.

போப் ஆதிக்கம்

கத்தோலிக்கத்தின் பதினேழு நூற்றாண்டுகளுக்கும் மேலான வரலாற்றில் சில போப்புகள் கொலை செய்யப்பட்டு இருக்கிறார்கள். சில போப்புகள் கொலைகளைத் தூண்டி இருக்கிறார்கள். சிலர் ஒழுக்கக்கேடான வாழ்க்கை வாழ்ந்திருக் கிறார்கள். சிலர் முறையற்ற வகையில் பல பிள்ளைகளுக்கு தந்தையாக இருந்திருக்கிறார்கள். பலர் ஏழை எளியோரின் உழைப்பின் மீதும், பணத்தின் மீதும் தங்களின் சுகபோக வாழ்க்கையை அமைத்திருக்கிறார்கள். ஆதி அப்போஸ்தலர்கள் காலத்திற்குப் பிறகு உருவாகிய போப் மார்க்கம் அதிகார ஆதிக்க அரசியல் ஆட்சியாக மாறியது.

போப் இன்னசென்ட் III (கி.பி.1198-1218) என்பவர் கத்தோலிக்க எதிர்ப்பாளர்களை திருச்சபை நீதிமன்றத்தின் மூலம் விசாரித்து கடுமையான தண்டனைகளை வழங்கினார். இந்த நீதிமன்றம் 500 ஆண்டுகள் தொடர்ந்து இயங்கியது. கத்தோலிக்க எதிர்ப்பாளர்கள் இந்த விசாரணையின் போது கடுமையான சித்திரவதைகளுக்கு ஆளாகி கொடூரமாக கொலை செய்யப்பட்டனர். கத்தோலிக்க எதிர்ப்பு இயக்கம் (புராட்டடஸ்டன்ஸ்) தோன்றிய காலக்கட்டத்தில் சுமார் 9 லட்சம் கிறிஸ்தவர்கள் கொலை செய்யப்பட்டனர் (Night Journey from Rome, Page 54, 101, 102).

மேரியை தேவமாதாவாக வணங்கும்படி செய்யும் போதனைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்த கத்தோலிக்க பிஷப் நெஸ்டோரியஸ் என்பவரையும், அவரது ஆதரவாளர்களையும் மதத்துரோகிகள் என்று கண்டனம் செய்து திருச்சபையை விட்டு போப்பாதிக்கம் வெளியேற்றியது. (General Council of the Church, Page 25, 31).

தேவனுடைய பத்துக் கட்டளைகளின்படி வாழ வேண்டும் என்று போதித்த மணிக்கீஸ் என்ற மார்க்கத்தினரும் (கி.பி. 3-ம் நூற்றாண்டு வரையில் இருந்தவர்கள்), அல்பிஜென்ஸ் என்ற மார்க்கத்தினரும் (கி.பி.12 முதல் 14-ம் நூற்றாண்டு வரையில் வாழ்ந்தவர்கள்), ஆதி அப்போஸ்தலர் காலத்தில் திருச்சபை இருந்த நிலைக்கு அனைவரும் திரும்ப வேண்டும், தேவனுடைய பத்துக் கட்டளைகளின்படி வாழ வேண்டும் என்று போதித்த வால் தென்சியர் என்ற மார்க்கத்தினரும் (கி.பி.12 முதல் 19-ம் நூற்றாண்டு வரை இருந்தார்கள்) மற்றும் ஷ்யூக்னாட்ஸ் லோலாட்ஸ் கூட்டத்தாரும் போப்பாதிக்கத்தால் நாடு கடத்தப்பட்டனர். வேட்டையாடி கொல்லப்பட்டனர் (General Council of the Church, Catholic publication, P.77, 81, 82).

கான்ஸ்டைன்டின் மன்னனின் காலத்திலும் (கி.பி.4-ம் நூற்றாண்டில்) அதற்குப் பின்னும் வாழ்ந்த ஆதி அப்போஸ்தல கிறிஸ்தவத்தை பின்பற்றிய கிறிஸ்தவர்கள் போப்புகளின் ஆதிக்க அதிகாரத்திற்கும் கொடுமைக்கும் பயந்து பல தேசங்களுக்கு தப்பிச் சென்றனர். பலர் இந்தியாவுக்கும் வந்தனர். கேரளாவிலும், மலபார் பகுதியிலும், திருவிதாங்கூரிலும், கோவாவிலும் குடியேறி, அவர்களின் பழைய முறையின்படியே தேவனை மட்டும் ஆராதித்து வந்தனர். கி.பி.1502-ல் வாஸ்கோடகாமா வருகைக்குப் பிறகு தென் இந்தியாவிலும் கத்தோலிக்க ஆதிக்கம் காலூன்றியது. அவர்களுடைய ஆதிக்கப் பகுதியிலும், குறிப்பாக போர்ச்சுக்கீசிய கோவாவிலும் தங்கள் மதக் கொள்கைகளுக்கு புறம்பானவர்கள் அழிக்கப்பட்டனர்.

கத்தோலிக்க திருச்சபையின் தேவ விரோதப் போக்கைக் கண்டித்து எதிர்ப்பு தெரிவித்த கிறிஸ்தவ மெய் பக்தர்கள் காலம் நெடுகிலும் கொன்று குவிக்கப்பட்டனர். சித்திரவதைக்கு ஆளாக்கப்பட்டனர். பரிசுத்த வேதாகமம் சங்கிலியால் கட்டி வைக்கப்பட்டு இருந்தது. அதை வைத்திருப்போர் வேட்டையாடப் பட்டு கொல்லப்பட்டனர். போப் ஆதிக்கத்திற்கு கீழ்படியாத பெரும்பான்மையினர் தாங்கள் வசிக்கும் இடங்களில் இருந்து மனைவி, பிள்ளைகளுடன் வெளியேற்றப்பட்டனர். நிர்வாண

மாக்கப்பட்டு சவுக்குகளால் அடிக்கப்பட்டனர். பலர் மிகக் கொடூரமாக கொலை செய்யப்பட்டனர்.

போப்பாதிக்கத்தின் கொடுச் செயல்களுக்கு ஆதாரத்தை கீழ்கண்ட நூல்களில் காணலாம்.

1. The Birks - The First Two Versions of Daniel, Page.258, 259.
2. The History of Popes - Vol.2, Page.334.
3. The History of Inquisition in Spain by Larando
4. The History of Inquisition by Lim Borchs.
5. The Western Watchman (RC) of St. Lovis.
6. Council Tolo Sarum Pope Gregory IX Annochr - 1229.
7. D.Lordsch Historde la Bible En France 1910, Page 14.
8. Quanta Cura, Pope Fiex, IX - 8.12.1686
9. The History of Romanism, P.541 - 542.
10. Christ and Anti Christ - Rev. Samuel & J. Cassels
11. The History of Protestantism - Rev.J.A. Wylie, vol.I & II.

ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் இத்தகைய இரக்கமற்ற தேவ விரோதக் கொடுங்கோல் நடவடிக்கைகளை இந்த கடைசிக் காலத்தில் திரும்பிப் பார்த்த போப் 2-ம் ஜான்பால் 12.3.2000 அன்று வாட்டிகன் புனிதப் பீட்டர் தேவாலயத்தில் திருச்சபையின் 2000 வருட கொடுமைகளுக்காக பகிரங்கப் பொது மன்னிப்பு கேட்டார் (தினமணி 13.3.2000).

போப் இரண்டாவது ஜான் பாலின் இருதயத்திலிருந்து வெளிப்பட்ட பாவ மன்னிப்பின் காரணமாக போப் ஆதிக்க பாவ வரலாறு முழுவதும் மாற்றி எழுதப்படவில்லை. இரத்த வெறி கொண்ட பாபிலோனிய மிருகம் கால சூழ்நிலைகளுக்கு ஏற்ப தன் வேடத்தை மாற்றிக் கொண்டு இருக்கிறது. அவ்வளவே.

பாபிலோனிய விசுவாசத் துரோகம்

கத்தோலிக்க திருச்சபைகளின் தலைவராகிய போப்பு "தேவனுக்கு பதிலாள்" என்றும், "அவரே ஆண்டவர்" என்றும் அழைக்கப்படுகிறார். இது லத்தின் மொழியில் Vicarius Filll Dei

என்று எழுதப்பட்டு இருப்பதுடன், அவரோட கிரீடத்திலும் அது பொறிக்கப்பட்டு இருக்கிறது. "உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக" என்று எழுதப்பட்டு இருக்கிற தேவ வார்த்தைகளுக்கு புறம்பாக, ஒரு மனுஷனை ஆண்டவர் என்று அழைத்தனின் மூலம், 3-ம் கட்டளையையும், இரண்டாம் கட்டளையையும், முதல் கட்டளையையும் திருச்சபை ஒரு சேர மீறுகிறது. "விசுவாசத் துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் அப்போது வெளிப்பட்டான். அவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தேவன் என்று எண்ணப்படுவது எதுவோ, ஆராதிக்கப்படுவது எதுவோ அவை எல்லாவற்றிற்கும் மேலாக தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல் உட்கார்ந்து தன்னைத்தான் தேவன் என்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்" என்ற தீர்க்க தரிசனம் பவுல் அடியார் மூலம் முன்னதாகவே அறிவிக்கப்பட்டுள்ளது. (2 தெச. 2:3-7) The Catholic National பத்திரிக்கையில் July 1985-ல் இப்படி எழுதி இருக்கிறது. "போப் இயேசு கிறிஸ்துவின் பிரதிநிதி மாத்திரமல்ல. மாம்சத்திரைக்குள் மறைந்திருக்கும் இயேசு கிறிஸ்துவே இவர்" என்று எழுதி இருக்கின்றது.

கத்தோலிக்க திருச்சபை இறைவனுக்கு எதிராக செயல்படுகிறது

கத்தோலிக்க திருச்சபை அல்லது கத்தோலிக்க மதம் எவ்விதத்திலெல்லாம் இறைவனின் கட்டளைக்கு எதிராக செயல்படுகிறது என்று இதுவரை பார்த்தோம். இப்படி செய்வது தவறு என்று தெரிந்த பிறகும் இதைத் தொடர்ந்து செய்யும்போது அவர்கள் மேல் அமரும் தேவ குற்றமும் இன்னும் அதிகமாக பெரிதாக ஆகிறது. இப்படியாக இதுவரை இறைவனை எதிர்த்து செயல்படுகின்ற மத அரசியல் ஸ்தாபனங்களிலேயே மிகவும் தலைமையானதாக கத்தோலிக்க கிறிஸ்தவ ஸ்தாபனம் இருக்கிறது. எப்படி எனில் தேவன் அருவருக்கின்ற பல காரியங்களை கத்தோலிக்கம் செய்கின்ற இதே சமயத்தில் தேவனின் முதல் நான்கு கட்டளைகளையும் வேண்டுமென்றே தரையில் போட்டு மிதிக்கிறது. அது

மட்டுமல்ல, சபை மக்களுக்கும் இந்த கட்டளைகளை மீறி நடக்கும்படி கற்பிக்கிறது. கி.பி.538 முதல் கி.பி. 1798 வரை 1260 ஆண்டுகள் கத்தோலிக்கம் ஒரு வலிமை மிக்க மத ஸ்தாபனமாக மட்டுமின்றி, ஒரு வலிமை மிக்க அரசியல் ஸ்தாபனமாகவும் விளங்கி இந்தக் . காலத்தில் பல்வேறு அடக்குமுறைகளின் மூலமாக 5 கோடி பேர்களுக்கு மேலாக கொலை செய்திருக்கிறது. கத்தோலிக்க வரலாறு இரத்தக் கறைகள் அதிகம் படிந்த வரலாறு என்றும், இந்தக் காலத்தை "ஐரோப்பாவின் இருண்ட காலம்" என்றும் சரித்திர ஆசிரியர்கள் அழைக்கின்றனர். 5 கோடிப் பேருக்கும் அதிகமாக கொலை செய்யப்பட்டது மட்டுமல்ல, அதில் அதிகமானோர் சித்திரவதை செய்யப்பட்டு கொலையாகினர். இதற்காகவே புதுப்புதுவிதமான சித்திரவதை யுக்திகளை கத்தோலிக்க மதத் தலைவர்கள் கண்டுபிடித்தனர்.

இப்படித்தான் ஜான்விக்ளிப் என்பவர் பைபிளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து விட்டார் என்பதற்காக அவரை பிடித்து கொலை செய்யப் பார்த்தார்கள். ஆனால் ஜான் விக்ளிப் தப்பித்துக் கொண்டே வந்தார். இறுதியில் வயதாகி இறந்து விட்டார். ஆனாலும் கத்தோலிக்க மதத் தலைவர்களுக்கு அவரைச் சும்மா விட்டு விட மனமில்லை. நாற்பது வருஷங்களுக்குப் பிறகு ஜான் விக்ளிப் புதைக்கப்பட்ட கல்லறையை தோண்டி, அவரது எலும்புகளை எடுத்து சுட்டெரித்து சாம்பலாக்கி, அந்த சாம்பலை அருகில் ஓடிக்கொண்டிருந்த ஒரு ஆற்றில் கரைத்து அழித்தனர். அதற்குப்பிறகுதான் அவர்களின் ஆத்திரம் அடங்கி நிம்மதி அடைந்தனர். மெய்யான இறைவனின் உண்மையான பக்தர்களுக்கு எதிராக கத்தோலிக்க மதம் கொண்டிருந்த ஆங்காரமும், வெறியும் எப்படிப்பட்டவைகளாக இருந்தன என்பதற்கு இது ஒரு சின்ன சாம்பிள்.

பிதாவுக்கு இணையான ஆண்டவராக போப் ஆண்டவர்

"பிதாவாகிய இறைவன்" என்கிற பதம் இறைவனைக் குறிப்பது. இறைவனைக் குறிப்பதற்கு மட்டுமே இந்தப் பதம்

பயன்படுத்தப்பட வேண்டும். எந்தவொரு மனிதனையும் குறிப்பதற்கு இந்த பதத்தை பயன்படுத்துவது மிகத் தவறான செயலாகும். ஆனால் கத்தோலிக்க மதத்தலைவராக இருப்பவரை "போப் ஆண்டவர்" என்று அழைக்கப்படுகிறார். போப் என்ற லத்தீன் வார்த்தைக்கு பிதா என்று அர்த்தம். ஆண்டவர் என்பது இறைவனைக் குறிக்கும் சொல். "போப் ஆண்டவர்" என்பதுவும், "பிதாவாகிய இறைவன்" என்பதுவும் ஒன்றுதான். இறைவனுக்குரிய ஒரு பதத்தை ஒரு மனிதருக்கு கொடுத்து ஒரு மனிதனை தேவனுக்கு இணையாக உயர்த்துவது எவ்வளவு பெரிய பாவம், தவறு என்று தெரிந்தே செய்கின்றார்களே. தேவன் இவர்களை மன்னிப்பாரா?

பரிசுத்த வேதாகமத்தின்படி பாவங்களை மன்னிக்கும் அதிகாரம் இறைவனுக்கு மட்டுமே இருக்கிறது. ஆனால் அதைப்பற்றி எல்லாம் கொஞ்சமும் கவலைப்படாமல் கத்தோலிக்க மதம் இந்த அதிகாரத்தை எடுத்து தனது குருமார்களுக்கு தாராளமாக வழங்கியுள்ளது. அதோடு நிற்கவில்லை. மனிதர்களின் பாவங்களை மன்னிப்பதில் இறைவனுக்கு இருக்கின்ற அதிகாரத்தைவிட தனது குருமார்களுக்கு உள்ள அதிகாரமே அதிகம் என்பது கத்தோலிக்க மதத்தின் கோட்பாடாக இருக்கிறது. கத்தோலிக்க மதத்தின் கையேடாக இருக்கிற "Dignities and Duties of the Priest, Vol.12, Page 27-ல் "குருமார்களை இறைவனே நியமித்திருக்கிறார் என்றாலும் அதன்பிறகு குருமார்கள் எடுக்கும் முடிவுகளுக்கு இறைவன் கட்டுப்பட்டவரே. குருமார் மன்னித்தால் இறைவன் மன்னிக்கவும், குருமார் மறுத்தால் இறைவன் மறுக்கவும் வேண்டும். குரு எழுதிய தீர்ப்பே முடிவானது. இறைவன் அதை ஏற்றுக் கொள்கிறார்". மனிதர்களாகிய குருமார்களை இப்படி இறைவனுக்கு சமமாகவும், அதற்கு மேலும் உயர்த்தும் இந்த பெருமையின் ஆவி யாருடையது என்று தெரிகிறதா? அது லூசிபரின் ஆவியே.

தேவகட்டளைகளுக்கு விரோதமான பாபிலோனியம்

"நானே தேவன். என்னை அன்றி வேறு ஒரு தேவனும் இல்லை" என்ற முதலாம் கட்டளையை மீறியும்,

"ஒரு சொருபத்தையாகிலும், ஒரு விக்கிரஹத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்" என்ற இரண்டாம் கட்டளையை நீக்கி உருவ வழிபாடு செய்தும் "நீ அவைகளை நமஸ்கரிக்கவும், சேவிக்கவும் வேண்டாம்" என்ற மூன்றாம் கட்டளையையும் மீறி நடந்து தேவதூஷணம் செய்துள்ளனர். இன்னும் பரிசுத்த வேதாகமத்திற்கு மாறாக, புறம்பாக மீறி, தேவனாகிய இயேசு கிறிஸ்துவுக்கு நிகராக உயர்த்தி, அவரை தேவ மாதா, பூமியின் ராணி, பரலோக ராணி, இயேசுவின் வலது பாரிசத்தில் அமர்ந்து நமக்காக மத்தியஸ்தம் பண்ணுகிறார், பரிந்துரை செய்கிறார், நம் பாவத்தை எல்லாம் மன்னிக்கிறார், நம்மோட ஜெபத்துக்கு பதில் அளிக்கிறார், இரட்சிப்பை, நித்ய ஜீவனைக் கொடுக்கிறார், அவர் ஜென்ம பாபமில்லாதவர், கன்னியாகவே கடைசிவரை வாழ்ந்தவர், மரித்த பின்பு பரலோகம் ஏறிச் சென்றவர், இப்போ அவர் பரலோகத்தில் இருக்கிறார், அவர் தேவமாதா, கடவுளுக்கும் அவரே தாய் என்று இப்படி வேதத்தில் கூறப்படாத ஒன்றா, இரண்டா எத்தனையோ விஷயங்களை திருச்சபை மூலமாக, சபை விசுவாசிகளுக்கு கூறி அவர்களை தவறான உபதேசத்தில், வழிகளில் நடக்க வைக்கின்றனர்.

ஜெபமாலை ஜெபம், மரித்தோருக்காக ஜெபம், உத்தரிக்கும் ஸ்தலம், பரிசுத்தவான்களுக்கு ஆராதனை, குழந்தை இயேசுவாக இருந்த அவர் வளர்ந்து வாலிபனாகி, 33½ வயதில் மரித்து, அப்படியே உயிர்த்தெழுந்து அனைவரும் பார்க்க பரமேறிப்போனார். அவரை இன்றும் ஒரு பச்சைக் கைக்குழந்தையாகவே உருவகித்து, சிலை வடித்து, ஆராதிப்பது, குழந்தை இயேசுவுக்கு கோயில் கட்டுவது என்று இப்படி எண்ணி மாளாத வேதத்திற்குப் புறம்பான அநேக காரியங்களை இன்றளவும் செய்து வருகின்றனரே. கத்தோலிக்க குருமார்கள் பைபிளை படித்தார்களா, இல்லையா? படித்திருந்தால் இப்படி வேதத்திற்கு புறம்பாக செய்ய அவர்களுக்கு எப்படி தைரியம் வந்தது? ஆதாம் ஏவாளின் ஒரே ஒரு கீழ்படியாமைக்கு என்ன தண்டனை கிடைத்தது என்று வேதத்தில் பார்த்த பிறகும் தேவன் அருவருக்கின்ற இத்தனை காரியங்களை செய்கின்றார்கள் என்றால், தேவன் இவைகளை மன்னிப்பார்

என்று தைரியத்தில் செய்கின்றார்களா ? இல்லை மரியாள் இவர்களை எல்லாம் காப்பாத்துவார் என்ற நம்பிக்கையிலா ?

அழைக்கப்பட்ட அநேகர் விழுந்து போனார்கள்

சின்ன, சின்ன விஷயங்களுக்கே அபிஷேகம் பெற்றவர்கள், பெயர் சொல்லி அழைக்கப்பட்ட ஆசாரியர்கள், தாயின் கருவில் உருவாவதற்கு முன்பே முன் குறிக்கப்பட்டவர்கள், வேறு பிரிக்கப்பட்டவர்கள் எல்லாம் விழுந்து போனார்கள் என்று வேதம் திருஷ்டாந்தமாக கூறுகிறதே. இதெல்லாம் நம் கத்தோலிக்க குருமார்களுக்கும், பிஷப்புகளுக்கும், பங்குத்தந்தைக்களுக்கும், போப்புக்கும் புரியவில்லையா ?

1) ஒரு கனியின் இன்பம் ஆதாம், ஏவாளுக்கு ஏதேன் தோட்டத்தை இழக்க வச்சது (ஆதி. 3:6).

2) ஒரு வேசியின் இன்பம் சிம்சோனுக்கு கண்களை இழக்க வச்சுது (நியா. 16:21).

3) மதுவின் இன்பம் நேபுகாத் நேச்சாரின் மகன் பெல்ஷாத்சாருக்கு இராஜ்யத்தை இழக்க வச்சது (தானி. 5:1-31).

4) சோதோமின் இன்பம் பரிசுத்தத்தை இழக்க வச்சது (ஆதி. 19:30-34).

5) மோகத்தின் இன்பம் ரூபனுக்கு சாபத்தைக் கொண்டு வந்தது. (ஆதி. 42:4).

6) அற்பமான காணிக்கையின் மேல வச்ச ஆசை கேயாசிக்கு குஷ்டரோகத்தை கொண்டு வந்தது (2 ரோஜா 5:27).

7) முப்பது வெள்ளிக் காசுகளின் மேல வச்ச ஆசை யூதாசுக்கு சிங்காசனத்தை இழக்க வச்சு தற்கொலையும் பண்ண வச்சது.

8) பாபிலோனின் சாபப்பொருட்களின் மேல வச்ச ஆசை ஆகானுக்கு அற்ப ஆயுளைக் கொடுத்தது (யோக. 7:24).

9) கர்த்தரிடம் "என் வீட்டில் எங்கும் உண்மையுள்ளவன்" என்று சாட்சி பெற்ற மோசே செய்த ஒரே ஒரு தவறுக்காக கானான் தேசத்தில் கால் வைக்க முடியலை.

10) கானான் தேசத்துக்கு மோசேயால் அழைத்துச் செல்லப்பட்ட 25 லட்சம் இஸ்ரவேலர்களில் இரண்டே இரண்டு பேர் மட்டுமே கானான் தேசத்தில் கால் வைக்க முடிந்தது. மற்ற அனைவரும் வழியிலேயே அழிந்தனர். கானான் தேசத்தை கண்ணால் கூட அவர்களால் காண முடியவில்லை.

மேலே சொல்லப்பட்டுள்ள அனைவருமே தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், பெயர் சொல்லி அழைக்கப் பட்டவர்கள், கொடிய பாவங்கள் எதையும் இவர்கள் செய்துவிட வில்லை. நாம் அன்றாடம் நமது வாழக்கையில் செய்து கொண்டிருக்கும் சின்ன சின்ன தவறுகளை, பாவங்களைத்தான் இவர்களும் செய்தனர். ஆனால் அவர்களின் கதி என்ன ஆயிற்று என்று பார்த்தீர்களா? தேவன் இரக்கமுள்ளவர், இரக்கத்தில் ஐசுவரியமுள்ளவர். கருணை உள்ளவர். தயவுள்ளவர். ஒரு தாயைப் போல அரவணைப்பார், ஒரு தந்தையைப் போல தாங்குவார், சுமப்பார், ஆலோசனைக் கர்த்தர், நமக்காக தன் மகனையே தியாகம் செய்தவர், அன்பே உருவானவர், வாக்கு மாறாதவர் என்றெல்லாம் அவரைக் கூறுகிறோம். இதெல்லாம் அவரோட ஒரு பக்கம். அவரோட மற்ற ஒரு பக்கத்தை நாம் சுத்தமாக மறந்திடுறோம். "அவர் பட்சிக்கின்ற அக்கினி" (உபா. 4:24), அவர் நம்மை நியாயந்தீர்க்கிறவர். அவர் நீதியுள்ள நியாயாதிபதி (சங். 7:11), அவர் சர்வ லோக நியாயாதிபதி (ஆதி. 18:25). அவர் எரிச்சலுள்ள தேவன். அவர் கோதுமையை களஞ்சியத்திலும், பதரையோ அவியாத அக்கினியினாலும் சுட்டெரிப்பார்" என்று (லூக்கா 3:17) கூறுகிறது. அவர் மகா உக்கிரமுள்ள தேவன் என்பதை நாம் மறந்துவிடுகிறோம். அவர் வார்த்தைகளுக்கு, கட்டளைகளுக்கு முழுமையாக கீழ்ப்படிகிறபோது அவர் நல்லவர். அவருடைய கட்டளைகளை மீறி, கீழ்படியாமல் போனால் அவரைப்போல ஒரு தண்டிக்கிற தேவன் வேறு ஒருவரும் இல்லை. அவருக்குரிய

கனத்தையும், மகிமையையும், கொடுக்காத இஸ்ரவேலர்களை, அவரே தமக்கென தெரிந்துகொண்ட ஜனங்களை 1900 வருஷம் உலகமெங்கும் சிதறடிச்சு எத்தனை பாடுகளை, உபத்திரவங்களை அனுபவிக்க வைத்தார். அதை எல்லாம் நாம மறக்கலாமா?

கர்த்தரின் வார்த்தைகள் இருபக்கமும் கருக்குள்ள பட்டயம்

அவைகளைப் பற்றி தெளிவாகத் தெரிந்து கொள்ளணுமா? நான் எழுதியிருக்கிற "இஸ்ரவேலைக் குறித்து நிறைவேறிய தீர்க்கதரிசனங்கள்" (பாகம் 1 & 2) என்ற புத்தகங்களை வாங்கிப் படித்துப் பாருங்கள். அதை நான் எழுதுகின்ற சமயத்தில் எனக்கு கைகால்கள் எல்லாம் நடுங்கிவிட்டன. ஏன்னா, ஆண்டவர் சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் அட்சரம் பிசகாமல் அப்படியே வார்த்தைக்கு வார்த்தை நிறைவேறி இருக்கு. அப்பேர்ப்பட்ட சர்வ வல்ல சர்வேஸ்வரரின் கட்டளைகளை, வேதத்தை மீறி நம்ம இஷ்டத்துக்கு அவைகளை மாற்றி, மீறி நடந்தால் என்ன நடக்கும்னு எனக்கு நினைச்சாவே குலை நடுங்குது. "ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதும் கைக்கொண்டிருந்தும் ஒன்றே ஒன்றில் தவறினாலும் அவன் எல்லாவற்றிலும் குற்றவாளியாக இருப்பான்னு" யாக்.2:10 சொல்லுதே. "கர்த்தருடைய கட்டளை களில் யாதொன்றையும் மீறி செய்யத்தகாததைச் செய்தால் நாம் பாவத்திற்கு உட்பட்டு குற்றவாளிகளாய் இருப்போம்"னு லேவி. 4:13-ல நமக்கு பேதிக்கு கொடுக்கிறாரே. "நீ என்னைப் பார்க்கிலும் உன் குமாரரை மதிப்பானேன்?" என்று ஆசாரியனான ஏலியிடம் கோபம் கொண்டு ஏலியையும், அவன் குமாரரையும் அழித்த தேவனை நாம் கனவீனம் பண்ணி, அவருக்கு கொடுக்க வேண்டிய கனத்தை அப்போஸ்தலர்களுக்கும், தேவன் படைத்த மனிதர்களுக்கும் கொடுத்தால் நம் கதி என்ன ஆகும் என்று என்னிக்காவது யோசித்துப் பார்த்து இருக்கிறீர்களா? ஆண்டவரை ஆராதித்துக் கொண்டிருந்த விடிவெள்ளி நட்சத்திரமாக திகழ்ந்த லூசிபர் தன்னைத்தானே உயர்த்தியதால் தானே ஆண்டவர் அவனையும், அவனுடன் சென்ற சேனைகளையும் கீழே தள்ளி, நரஹாக்கிணைக்காக அவர்களை வைத்திருக்கிறார்.

“என்னைக் கனம் பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன், என்னை அசட்டை பண்ணுகிறவர்கள் கனவீனப்படுவார்கள்” என்று ஆண்டவர் 1 சாமுவேல் 230-ல எச்சரித்திருக்கிறாரே.

மற்ற விஷயங்களில் நாம் சரியாக நடந்து கொண்டு அவரை மதியாமல், அவருக்கு கொடுக்க வேண்டிய கனத்தை மற்றவர்களுக்கு கொடுத்தால், அவரின் கட்டளைகளை மீறி நடந்தால் என்ன பிரயோஜனம்? நியாயத்தீர்ப்பின் போது நீ ஆர்.சி.யா? சி.எஸ்.ஐ.யா? சி.பி.எம்.மா? ஏ.ஜி.யா? அட்வென்ட்டா? என்றெல்லாம் ஆண்டவர் கேக்கமாட்டாரே. “சத்தியத்தை அறிவீர்கள். சத்தியம் உங்களை விடுதலை ஆக்கும்”னு தானே வேதம் சொல்லுது. அந்த சத்தியத்தையே நாம மதிக்காம மீறி நடந்தா நமக்கு ஏது விடுதலை? அந்த தேவ கோப ஆக்கிணையிலிருந்து நம்மை விடுவிப்பவர் யார்?

நித்ய ஜீவனும் மரணமும் உங்களுக்கு முன்பாக!

நான் வாரம் தவறாம தேவாலயத்துக்குப் போனேனே, தசமபாகம், காணிக்கை ஒழுங்கா கொடுத்தேனே, தேவனை நான் வஞ்சிக்கலையே, ஆலய கட்டுமானப் பணிக்கு நான் அள்ளி அள்ளிக் கொடுத்தேனே, ஞானஸ்நானம் எடுத்தேனே, திருவிருந்து தவறாம எடுத்தேனே, நிறைய சமூக சேவை செயதேனே, ஜெபமாலை ஜெபம் செய்தேனே, பங்குத் தந்தைக்கு உரிய மரியாதை கொடுத்து அவரைக் கனம் பண்ணி, அவரோட வார்த்தைக்கு கீழ்ப்படிஞ்சு நடந்தேனே என்று நீங்கள் கதறலாம். என்ன பிரயோஜனம்? நான் பங்குத்தந்தையாக இருந்தேன், பிஷப்பாக இருந்தேன், கார்டினலாக இருந்தேன். திருமணம் செய்யாமல் என் வாழ்க்கையையே இறைப்பணிக்கு அர்ப்பணித்தேனே. எத்தனையோ சமூக சேவைகள் செய்தேனே, மருத்துவமனைகள், பள்ளிக் கூடங்கள் நடத்தினேனே, தேவாலயங்களைக் கட்டினேனே என்று சொல்வது எதுவுமே நியாயத் தீர்ப்பின் போது எடுபடாது. வேத வார்த்தைகளோட அர்த்தம் புரியாமல் அதை படிச்சு என்ன பயன்? படிச்சாப்பிறகும் அதன்படி நடக்கலைன்னா என்ன யூஸ்?

இப்படி எல்லாம் நான் எழுதுவது உங்க மனசை புண்படுத்தவேண்டும், குற்றப்படுத்த வேண்டும், உங்களை நோகடிக்க வேண்டும் என்பதற்காக அல்ல. உண்மையிலே கலங்கிய கண்களோடு இருதயத்தில் மிகுந்த பாரத்தோடு, வேதனையோடு, ஆதங்கத்தோடுதான் இவைகளை எழுது கிறேன். 58 வயதுக்குப் பிறகு இந்த ஆண்டவரை தெரிஞ் சுக்கிட்ட நான், என்னுடைய இந்த 69 வயசிலும் ஒவ்வொரு நிமிஷமும் ஆண்டவருக்காக ஓடிக்கொண்டு இருக்கிறேன். எப்படியாவது ஜனங்கள் இரட்சிக்கப்படட்டும், ஒருவரும் கெட்டு நரகத்துக்கு போகக்கூடாதே என்ற ஆதங்கத்தில் ஓடிக்கொண்டு இருக்கிறேன். மாதத்தில் 20 நாளுக்கு மேல ஊழியம் செய்கிறேன். சபை பாகுபாடு இல்லாமல் எல்லா சபைகளுக்கும், ஊர்களுக்கும் போயி பப்ளிக் மீட்டிங்களிலும் பேசுகிறேன். இயேசுவை அறியாத ஜனங்கள் எப்படியாவது அவரை அறிந்து கொள்ளணுமே என்ற கரிசனையில் ஓடுகிறேன். பிரசிங்கிக்கிறேன். எழுதுகிறேன். லாப நோக்கமில்லாமல் என்னோட எல்லா புத்தகங்களையும், சீடிக்களையும் பத்து ரூபாய்க்கே கொடுக்கிறேன். ஆனால் ஏற்கனவே இயேசுவை அறிந்த என் கத்தோலிக்க சகோதர, சகோதரிகள் இன்னும் இரட்சிக்கப்படாமல், நரஹாக்கினைக்கு ஆட்படுவதை என்னால் எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்? ஆகவேதான் கண்ணீரோடு இந்த புத்தகத்தை எழுதுகிறேன்.

உங்களை பெந்தேகோஸ்து கிறிஸ்தவர்களாக மாற்று வதற்காக இவைகளை நான் எழுதவில்லை. நீங்க ஆர்.சி.யாகவே இருங்க. ஆர்.சி.சபையிலேயே இருங்க. பெந்தகோஸ்தே சபைக்கு போக வேண்டாம். ஆனா நீங்களும் உங்க பாதையை விட்டு விலகுங்க, மனம் மாறுங்க. வேதத்தின் பிரகாரம் நடங்க. உடன் இருக்கின்ற மற்றவர்களையும் மாத்துங்க. வேதத்துக்குப் புறம்பா யார் சொன்னாலும் சரி, அவர் பங்குத்தந்தையா இருக்கலாம், பிஷப்பா இருக்கலாம், போப்பா இருக்கட்டும், யார் சொன்னாலும் அது வேதத்தின் பிரகாரமா இருக்கான்னு செக் பண்ணிட்டு அதுக்கப்புறம் அதை ஏத்துக்கோங்க. இந்த பூலோக வாழ்க்கை நமக்கு நித்தியமல்ல. பரலோக வாழ்வுதான் நமக்கு நித்தியம். அதுதான் நிரந்தரம். அதை நாம எங்கே கழிக்கப் போகிறோம்? அது பரலோகத்திலா? நரகத்திலா? அது இப்போது உங்க கையில இருக்கு. சிந்தித்து, சகலத்தையும்

சீர்தூக்கிப் பார்த்து ஒரு முடிவு எடுங்க. "பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்" - நீதி 28:13. "நம்முடைய பாவங்களை (இதுவரை அறிந்தும், அறியாமலும் செய்த அனைத்தையும்) நாம் அறிக்கை இட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்தீகரிப்பதற்கு அவர் உண்மையும், நீதியும் உள்ளவராக இருக்கிறார்"ன்னு 1 யோ. 1:9 சொல்லுது. தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டானே.

மனம் மாறிய கத்தோலிக்கர்கள்

அப்படி இதுவரை கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்து, வளர்ந்து, கத்தோலிக்க திருச்சபைக்கு சென்று, பங்குத் தந்தையாகவும், பாதிரியாராகவும் படித்துத் தேறி, பணியாற்றிய பின் சத்தியத்தை அறிந்து மனந்திருந்தி இரட்சிக்கப்பட்ட பலரின் வாழ்க்கையை இங்கு இந்நூலின் பாகம்-II-ல் சாட்சியாக கொடுத்திருக்கிறேன். இன்னும் எத்தனையோ எண்ணி மாளாத சாட்சிகள் இருக்கின்றன. சாம்பிகளுக்கு ஒரு சிலவற்றை மாத்திரமே அதில் வெளியிடு கிறேன். இன்னும் வேதசத்தியத்திற்கு புறம்பாக நம் கத்தோலிக்க திருச்சபை கடைப்பிடிக்கும் பல விஷயங்களை இந்த நூலின் பாகம்-IIல் வேதனையோடு எழுதியுள்ளேன். அதையும் படித்துப்பாருங்கள். கர்த்தருக்கு சித்தமானால் கத்தோலிக் கத்திலிருந்து இரட்சிக்கப் பட்டவர்களின் சாட்சிகளையே ஒரு தனிப் புத்தகமாக வெளியிட கர்த்தர் கிருபை தருவாராக.

கர்த்தரின் அளவற்ற கிருபை இதைப் படிக்கும் ஒவ்வொரு கத்தோலிக்க திருச்சபை சகோதர, சகோதரிகளோடும், போதகர்களோடும், ஆயர்களோடும் என்றென்றும் சதா காலங்களிலும் இருப்பதாக!

கத்தோலிக்கரும் கரை சேரணுமே
என்று கண்ணீரோடு கர்த்தர் சமூகத்தில் கர்ப்ப
வேதனைப்படும் உங்கள் அன்பு சகோதரன்

-எஸ். தாயப்பன்

BIBLIOGRAPHY

1. திருவிவிலியம் (பொது மொழி பெயர்ப்பு).
2. ரோமன் கத்தோலிக்க உபதேசங்களைப் புரிந்து கொள்ளுங்கள் - லிக் ஜோன்ஸ்.
3. What does the Bible Say (Magazine) by Dr.David Paul.
4. கத்தோலிக்க மறுமலர்ச்சி இயக்கம் (மாத இதழ்) - ஆசிரியர் தந்தை ஏ.ராபர்ட் இளங்கோ.
5. கத்தோலிக்க வேதாகமம் கூறும் உபதேசங்கள் - ரூபஸ் இராஜரத்தினம்.
6. Catechism of the Catholic Church, Published by Theological Publications in India, 1994.
7. 2000 Years of Christ's Power - Part One - The Age of the Early Church Father's - NR Needham.
8. Overview of how Catholic Faith Contradicts the Bible - Steve Rudd.
9. "பாபிலோன்" - மெய்வழி அடியார்.
10. திருமறைச்சுவடி - திருத்திய பதிப்பு (புதிய குறிப்பிடம்) - கத்தோலிக்க திருச்சபையின் அடிப்படை மறைக்கல்வி நூல்.
11. The Two Babylons or the Papal Worship - Rev. Alexander Hislop.

கத்தோலிக்கர்களும் கரைசேணுமே கர்த்தாவே பாகம் 2-ல் உள்ளடங்கிய சத்தியங்கள்

1. மரித்தவர்களுக்காக ஜெபம்
2. நற்கருணை - பூசைபலி
3. நற்கருணையில் அப்பத்தை மட்டும் கொடுப்பது சரியா?
4. கத்தோலிக்க திருச்சபை மட்டும்தான் இரட்சிப்பை கொடுக்க முடியுமா?
5. இரத்தம் சிந்தாமல் பாவ மன்னிப்பு இல்லை
6. பாவமன்னிப்பை பெற என்ன செய்ய வேண்டும்?
7. ஆண்டவர் மீது எப்படி நம்பிக்கை கொள்வது?
8. திருத்தூதுவர்கள் திருமணம் செய்யக்கூடாதா?
9. சாத்தானின் உபதேசம்
10. சிறுவர் பாலியல் குற்றங்களுக்காக கத்தோலிக்க போதர்கள் சஸ்பெண்டு
11. உத்தரிக்கும் ஸ்தலம்
12. அநத மேரி அல்ல இந்த மேரி
13. தரிசனமரியாள் வேதாகம மரியாளா?
14. மரியாளின் தரிசனக் காட்சிகள் அவளை ஆராதிக்க தூண்டுகிறது.
15. இந்த ரோமன் மேரி ஸ்பெஷல் தரிசனங்களின் மூலம் பேசுகிறார்.
16. மேரி இயேசுவைப் போல பாவமில்லாமல் வாழ்ந்தவராம்.
17. மேரி உங்களையும், என்னையும் கவனிக்கிறாரா? பாதுகாக்கிறாரா?
18. உலகம் முழுவதும் பரவிவரும் ரோமன் மேரியின் பாப்புலாரிட்டி
19. மரியாளின் அமல உற்பவம்
20. மரியாளின் ஆரோபணம்
21. கத்தோலிக்க மறைக்கல்வி நூலில் உள்ள மாறுபாடுள்ள உபதேசங்கள்
22. மனம் மாறிய கத்தோலிக்கர்களின் - சாட்சிகள்

எஸ். தாயப்பன் எழுதிய இதர நூல்கள்.

இவைகள் எதைப் பற்றி?

1. என் அழுகையும் ஆனந்தப் புது வாழ்வும் (தமிழ், ஆங்கிலம், கன்னடம், மலையாளம், தெலுங்கு. VCD(தமிழ், ஹிந்தி, கன்னடம்)

58 வயசு வரைக்கும் தீவிர வைராக்கியமுள்ள இந்துவாக, விக்கிரஹ ஆராதனைக்காரனாக, இயேசு எதிர்ப்பாளனாக இருந்த சகோ. தாயப்பனையும், அவரின் மனைவி, மகன் கார்த்திக், சக்தி, மகள் காயத்ரி அனைவரையும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எப்படித் தொட்டார், 18 ஆபரேஷன்கள் செய்து கோமா நிலைக்குப் போயி அமெரிக்கன் டாக்டர்களே கை விட்டு, கருணைக் கொலை செய்து விடுங்கள் என்று சொல்லப்பட்ட நிலையிலே இயேசு கிறிஸ்து கார்த்திக்கை எப்படி அற்புதமாக காப்பாற்றினார் என எழுதப்பட்டுள்ள சாட்சி நூல். இது படிக்கின்ற எவருடைய உள்ளத்தையும் உலுக்கி எடுக்கும். தமிழில் 2 லட்சத்திற்கும் அதிகமாக விற்கப்பட்ட ஒரே நூல்.

2. சித்தர்கள் கண்ட மெய்ப்பொருள் (தமிழ்).

இயேசு கிறிஸ்துவே மெய்யான தெய்வம். தெய்வம் என்ற சொல்லப்படுகின்ற மற்ற எதுவும் தெய்வம் இல்லை. விக்கிரஹங்களில் தெய்வம் இல்லை என அழுத்தம் திருத்தமாக ஆதாரத்தோடு அகத்திய முனிவர், அழுகுணிச் சித்தர், பாம்பாட்டிச் சித்தர், கோரக்க முனிவர், பட்டினத்து அடிகள், திருமூலர், சிவவாக்கியர், போகர், களாப்ச் சித்தர், வால்மீகர் போன்ற பல சித்தர்களின் பாடல்களின் விளக்கத்தோடு எழுதப்பட்ட நூல். 75000 பிரதிகளுக்கு மேல் விற்பனையில்.

3. பாவத்தின் சம்பளம் நரகம் (தமிழ், ஆங்கிலம்)

திருடினாத் தான் பாவம், கொலை, கொள்ளை, ஒரு பெண்ணை கற்பழித்தல் போன்றவைகள் தான் பாவம் என்று இல்லை. ஆண்டவரின் பார்வையில் எதெல்லாம் பாவமாக இருக்கிறது, கிறிஸ்தவர்களாக இருந்து கொண்டே, கோயில், பகுதிக்கு போய்க் கொண்டே எத்தனை பாவங்களை அன்றாடம் நாம் செய்து கொண்டு இருக்கிறோம் என்றும், நியாயத் தீர்ப்பு, பரலோகம், நரகம் எப்படி இருக்கும் எனவும் பல சாட்சிகளோடு எழுதப்பட்ட ஒரு நூல் இது. படிப்பவர் எவரையும் பாவம் செய்ய தயங்க வைக்கும் என்பது திண்ணம். 70,000 பிரதிகள் விற்பனையில்.

4. இயேசு கிறிஸ்து உன்னோடு பேசுகிறார் (தமிழ்)

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மோடு பேசினால் என்ன பேசுவார்? நாம் எப்படி இருக்கனும்னு அவர் விரும்புகிறார்? அவருடைய வருகைக்கு நாம

ஆயத்தமா இருக்கிறோமா? மற்றவர்களையும் ஆயத்தப்படுத்துகிறோமா? என நம்மை நாமே ஒருமுறை அலசி ஆராய்ந்து பார்த்து ஆவியில் நம்மை அனலாக மாற்றும் என்பது உறுதி. ஒவ்வொரு கிறிஸ்தவர் கையிலும் இருக்க வேண்டிய ஒரு நூல். 30000 பிரதிகள் விற்பனையில்.

5. இந்தியாவுக்கு இயேசு கிறிஸ்து தேவை ஏன்? (தமிழ்)

இயேசு கிறிஸ்து கிறிஸ்தவர்களுக்கு மாத்திரமல்ல, இந்தியர்களுக்கு மாத்திரமல்ல, இந்த உலகத்தில் பிறந்த அனைவருக்குமே அவர் தேவை என்பதை பல ஆதாரங்களோடு, சாட்சிகளோடு, மறுக்க முடியாத பல உண்மை நிகழ்வுகளோடு எழுதப்பட்டுள்ள நூல். திருக்குறள் ஒரு கிறிஸ்துவ நூல். விவேகானந்தர் இயேசுவைப் பற்றி என்ன சொல்லி இருக்கிறார், கர்னாடகாவிலும், ஒரிசாவிலும் கிறிஸ்தவர்களுக்கு எதிராக நடந்த பல வன்முறைச் சம்பவங்களை கண்ட பிறகும், கிறிஸ்தவர்கள் ஏன் தற்கொலைப் படையாக மாறி பழிக்குப் பழி வாங்கவில்லை என்பதை அற்புதமாக விளக்கும் ஒரு நூல் இது. 20,000 பிரதிகள் விற்பனையில்.

6. என் ஊழியக்காரனே...!? (தமிழ்)

ஆண்டவருக்கு ஊழியம் செய்கின்ற ஊழியக்காரர்கள், எப்படி இருக்க வேண்டும், சபைகள் ஏன் நிரம்பி வழியவில்லை, சுவிசேஷம் ஏன் பரவவில்லை, இந்தியா கர்த்தருக்கு சொந்தமாக என்ன செய்ய வேண்டும் என பல அரிய அறிவுரைகளைத் தரும் நூல் இது. ஒவ்வொரு ஊழியக்காரரையும் தம்மையும், ஊழியத்தையும் தற்பரிசோதனை செய்து கொள்ளத் தூண்டும் ஒரு நூல் இது. 10,000 பிரதிகள் விற்பனையில்.

7. கிறிஸ்தவர்களின் 100 சந்தேகங்களுக்கு பதில் (தமிழ்)

முழுக்கு ஞானஸ்நானம் அவசியமா? அந்நிய பாஷை பேசினால் தான் அபிஷேகம் இருக்குன்னு அர்த்தமா? அபிஷேகம் இல்லாம பரலோகம் போக முடியாதா? மேரி, பவுல், அந்தோணியார்ருக்கு நம் பாவத்தை மன்னிக்கும் அதிகாரம் இருக்கா? கிறிஸ்தவர்கள் காதலிக்கலாமா? ஊழியம் செய்ய விசேஷித்த அழைப்பு, அபிஷேகம் தேவையா? போன்ற 100 எடக்கு மடக்கான கேள்விகளுக்கு பதில் தரும் நூல். கிறிஸ்தவர்களின் பல சந்தேகங்களை தீர்க்கும் நூல் இது. 10,000 பிரதிகள் விற்பனையில்.

8. சைவமும், வைணவமும் கிறிஸ்தவமே (தமிழ்)

ஆச்சரியமாக இருக்கிறதா? கி.பி 49ல் இந்தியாவிற்கு வந்த புனித தோமாவின் நற்செய்தியினால் உண்டானதே சைவமும், வைணமும் என ஆதாரங்களோடு, சரித்திர வரலாறுகளோடு படிப்பவர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தும் நூல் இது. சைவர்களும், வைணவர்களும் பின்பற்றுவது தோமாவின் ஆதி இந்திய

கிறிஸ்தவக் கொள்கைகளையே என கிறிஸ்தவர்களும் புரிந்து கொண்டு அதை இந்துக்களுக்கும் புரிய வைத்து 'நீங்க கிறிஸ்தவ கொள்கைகளை உங்கள் பாணியில் ஏற்றுக் கொண்டாலும், நீங்கள் ஆராதிப்பது ஒரு நிழலை மட்டுமே. ஒரு டூப்ளிகேட்டையே ஆராதிக்கிறீர்கள். ஒரிஜினல் இங்கே இருக்கிறது. இயேசுவின் மூலமே பூரண இரட்சிப்பு, நித்திய வாழ்க்கை, பாவமன்னிப்பு, பரலோகம் கிடைக்கும்' என அவர்களுக்கு எளிதாக புரிய வைத்து அவர்களையும் இரட்சிப்பின் பாதையில் வழி நடத்த உதவும் ஒரு உன்னத நூல் இது.

9. எழுந்து கட்டுவோம் (VCD தமிழ்)

இயேசு கிறிஸ்துவால் தெரிந்து கொள்ளப்பட்ட ஒவ்வொரு கிறிஸ்தவனுமே ஆண்டவருக்கு ஊழியம் செய்யவும், சுவிசேஷத்தை அறிவிக்கவும், கர்த்தர் செய்த நன்மைகளை சாட்சிகளாக புற ஜாதிகளிடம் கூற வேண்டும். சுவிசேஷம் பரவ, தேசம் சந்திக்கப்பட நாம் ஒவ்வொருவரும் என்ன செய்ய வேண்டும் என வேதம் கூறுகிறது என்பதை மிகத் தெளிவாக சகோ.தாயப்பன் இந்த VCDயில் கூறியுள்ளார். கேட்கும் எவரையும் தட்டி எழுப்பும் அனல் மூட்டும். வாங்கி நீங்களும் பாருங்கள். மற்ற சபை மக்களுக்கும் கொடுங்கள். கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

உங்கள் இனத்தார், ஜனத்தார், நண்பர்கள்
நரகத்துக்கு போகக் கூடாதா?

மேலே குறிப்பிட்டுள்ள புத்தகங்கள், VCDயில் வரிசை எண் 4,6,7,9 தவிர் மற்ற புத்தகங்கள் எத்தனை வாங்க முடியுமோ வாங்கி ஜெபத்தோடு அவர்களுக்கு கொடுங்கள். அவர்கள் இரட்சிக்கப்படுவது உறுதி. எல்லா நூல்களும், VCDகளும் ஒவ்வொன்றும் ரூபாய் பத்து மட்டுமே. இந்த நூல்கள் கிடைக்கும் இடம் – எஸ். தாயப்பன், 12, ஜிபிடி. நாயுடு தெரு, பாலாஜி அவென்யு – 1, சிட்லபாக்கம் மெயின் ரோடு, சேலையூர் போஸ்ட், சென்னை–600073. நேரிலும், D.D, M.O. அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியர் குறித்து

துடிப்பும், வேகமும், விவேகமும், நாவன்மையும் உள்ள இவரைப் பார்த்தால் யாருமே இவருக்கு 70 வயது என்று நம்ப மாட்டார்கள். இந்திய விமானப்படையில் 26 ஆண்டுகள் இந்தியாவின் பல பகுதிகளிலும் பணியாற்றிய பின்பு, பெண்களின் முன்னேற்றத்திற்காக பாடுபடும் ஒரு தொண்டு நிறுவனத்தில் 6 ஆண்டுகள் நிர்வாக அதிகாரியாகவும், பின்னர் ஃபென்னர் இந்தியா கம்பெனியின் டெக்ஸ்டைல் டிவிசனுக்கு பெர்சனல் மேனேஜராகவும் 6 ஆண்டுகள் பணியாற்றியவர். நாடகம், கதாகாலட்சேபம், பல்கலை நிகழ்ச்சிகள், பாட்டு, டிவி சீரியல்கள் என கலைத்துறையில் வெற்றிக் கொடி நாட்டியவர். சினிமா நடிகர் டெல்லி கணேசை முதன்முதலாக டெல்லியில் நாடக மேடையில் அறிமுகப் படுத்தியவர். பியர்லெஸ்ஸில் தன்னுடைய மார்க்கெட்டிங் திறமையால் இன்ஸ்பெக்டர் பதவி வரை உயர்ந்தவர். இப்படி சகலகலா வல்லவரான இவர் ஒரு தீவிர, பக்தி வைராக்கியமுள்ள இந்துவாகவும், இயேசு எதிர்ப்பாளராகவும் இருந்தார். தேவன் இவரையும், இவர் குடும்பத்தாரையும் தெரிந்து கொண்ட விதம், மற்றும் இவரின் தனிப்பட்ட, குடும்ப வாழ்க்கையில் இயேசு கிறிஸ்து செய்த எண்ணி மாளாத அற்புதங்களையும், நன்மைகளையும் சாட்சியாக பல பொதுக் கூட்டங்களிலும், 2000க்கும் மேற்பட்ட திருச்சபைகளிலும் கூறி வருகிறார். இவரின் சாட்சியும், செய்தியும், இவர் எழுதிய சாட்சி புத்தகமும், மற்ற நூல்களும் எப்பேர்ப்பட்ட கடின இருதயத்தையும் உடைப்பதாக, உயிர்ப்பிப்பதாக, அனல் மூட்டுவதாக, சபைகளை பலப்படுத்துவதாக, சபையோரை ஆத்தும ஆதாயம் செய்பவர்களாக மாற்றுகின்றது என்றால் அது மிகையல்ல. கர்த்தர் தமது நாம மகிமைக்கென்று இவரையும், இவரது குடும்பத்தாரையும் விசேஷமாக தெரிந்து கொண்டுள்ளார்.

Sundar Prints 9840199777